
2014, September 16 - 30

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/146/News/2014






பொது வாழ்வில் வெவ்வேறு பாதைகளில்
சென்று பிரகாசித்த இரு மாமனிதர்கள்

ஜனாதிபதித் தேர்தலும் ரணிலும்

அளுத்கமவின் ஆவிகளுடன் மல்லாட்டம்

அரசியல் நிகழ்ச்சி நிரலை
மீண்டும் ஆக்கிரமிக்கும் தேர்தல்கள்

மோடியின் நாட்டில்
வாழ விரும்பாத அனந்தமூர்த்தி



## தமிழர் அரசியலுக்கு புதிய தலைமை?

| | | |
|---|---|---|
| INDIA................IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# THE BEST SOURCE FOR ALL YOUR NEWS




**Subscribe Today**

THE HINDU
INDIA'S NATIONAL NEWSPAPERS SINCE 1878

Call : 0712 269 442, 0117 322 783, 0117 322 781
ENCL 185, Grandpass Road, Colombo - 14, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒரு மனிதனின் சுதந்திரத்தை அபகரிக்கும் இன்னொரு மனிதன் வெறுப்புணர்வின் ஒரு கைதியே. அவன் தப்ப பிப்பிராயம் மற்றும் குறுகிய மனப்பான்மை ஆகியவற்றி னால் சிறைப்பிடிக்கப்பட்டிருக்கிறான்..ஒடுக்கப்படுபவர் களிடமிருந்தும் ஒடுக்குபவர்களிடமிருந்தும் மனிதத் தன்மை அபகரிக்கப்படுகிறது. ஒடுக்கப்படுபவர்கள் விடு தலை பெறவேண்டியதைப் போன்றே ஒடுக்குபவர்க ளுக்கும் விடுதலை தேவையாகிறது.

தனது 27 வருட சிறைவாசம் குறித்து
நெல்சன் மண்டேலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட்
சமகாலம்
2014, செப்டெம்பர் 16 - 30
பக்கங்கள் - 68





10 தமிழர் அரசியலுக்கு புதிய தலைமை?

20 அளுத்கமவின் ஆவிகளுடன் மல்லாட்டம்

26 ஜனாதிபதி தேர்தலும் ரணில் விக்கிரமசிங்கவும்

29 தோழர் பாலாவுடன் எனது அனுபவங்கள்

34 வெளியுறவு விவகாரத்தில் மோடிக்கு முக்கியமானதாக அமையும் செப்டெம்பர்

39 அரசியல் நிகழ்ச்சி நிரலை மீண்டும் ஆக்கிரமிக்கும் தேர்தல்கள்


42 பொது வாழ்வில் வெவ்வேறு பாதைகளில் சென்று பிரகாசித்த இரு மகத்தான மனிதர்கள்

46 தடம்புரளும் அ.தி.மு.க. - பா.ஜ.க. உறவு? அனைத்து மாநில முதல்வர்களின் ஆதரவைத் திரட்டும் ஜெயலலிதா


50 கறுப்பு நகரம், வெள்ளைப் பொலிஸ், மைக்கேல் பிறவுண்

54 ஸியாவின் இராணுவமும் பிரயோசனமான இரு முட்டாள்களும்

57 மோடியின் நாட்டில் வாழ விரும்பாத அனந்தமூர்த்தி












***Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து...

# தமிழரசு கட்சியின் புதிய தலைமையும் தமிழரின் அரசியல் எதிர்காலமும்

மாவை சேனாதிராஜா அவர்கள் 1970 களின் ஆரம்பத்தில் தமிழ் இளைஞர் பேரவையில் தனது அரசியல் போராட்ட வாழ்வைத் தொடங்கிய வேளையில் இலங்கை தமிழரசு கட்சியின் தலைமைத்துவம் தன்னிடம் என்றைக்காவது ஒருநாள் வந்து சேரும் என்று கனவிலும் கூட நினைத்திருக்க மாட்டார். சுமார் நான்கரைத் தசாப்தங்களுக்குப் பிறகு இன்று அவர் தமிழர் அரசியலின் அகிம்சை வழிப் போராட்டத்தை வழி நடத்திய அந்தப் பழம்பெரும் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இம்மாத ஆரம்பத்தில் வவுனியா நகரில் இடம்பெற்ற தமிழரசு கட்சியின் தேசிய மாநாட்டில் இடம்பெற்ற அந்தத் தெரிவு மாவை சேனாதிராஜா அவர்களின் அரசியல் வாழ்க்கையில் இவர் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்கு அளித்திருக்கக்கூடிய அர்ப்பணிப்புடன் கூடிய பங்களிப்புகளுக்குக் கிடைத்திருக்கக் கூடிய அங்கீகாரம் என்பதில் சந்தேகமில்லை.

இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போராட்டம் மிதவாத தமிழ் அரசியல் தலைவர்களிடமிருந்து ஆயுதமேந்திய தீவிர வாத இயக்கங்களின் கைகளுக்கு மாறிய கால கட்டத்தில் அஞ்ஞாத வாச வாழ்க்கையில் இருந்து கொண்டு கூட தன்னாலியன்ற பங்களிப்புகளை ஏனைய மூத்த தமிழ்த் தலைவர்களுடன் இணைந்து வழங்கிய மாவை சேனாதிராஜா அவர்கள், ஆயுதப் போராட்ட அரசியலின் தோல்விக்குப் பிறகு தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பிரதான அரசியல் சக்தியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூத்த பங்காளிக் கட்சியின் தலைமைப் பொறுப்பை இன்று ஏற்றிருக்கின்றார். தமிழ் மக்களின் சுமார் 6 தசாப்தகால உரிமைப் போராட்ட வரலாற்றில், அது அகிம்சை வழிப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட கால கட்டமாக இருந்தாலென்ன பின்னர் ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்ட கால கட்டமாக இருந்தாலென்ன அந்தந்தக் காலகட்டங்களில் தங்களது தலைமைத்துவப் பங்களிப்பின் மூலமாக தனியான அடையாளங்களை, முத்திரைகளை ஏற்படுத்திக் கொண்ட அரசியல்வாதிகளை போராளித்தலைவர்களை தமிழ் மக்கள் அறிவார்கள். அவர்கள் வழங்கியிருக்கக்கூடிய பங்களிப்புகளில் அனுகூலமானவை எவை, பிரதிகூலமானவை எவை என்பதை பகுத்தாராயக் கூடிய அளவுக்கு தமிழ் மக்களுக்கு அரசியல் போராட்டங்களைப் பொறுத்தவரை நல்ல பட்டறிவு இருக்கின்றது.

இத்தகைய பின்புலத்தில் நோக்குகையில் உள்நாட்டுப் போரின் முடிவுக்குப் பின்னரான கால கட்டத்தில் இலங்கைத் தமிழர்களின் அரசியல் தலைமைத்துவத்தை பொறுப்பேற்க வேண்டிய வரலாற்று நிர்ப்பந்தத்துக்குள்ளான மூத்த அரசியல்வாதியான இரா. சம்பந்தன் அவர்கள் இன்றைய கட்டத்தில் தமிழரசு கட்சியின் தலைமைத்துவத்தை மாவை சேனாதிராஜா அவர்களிடம் கையளிப்பதற்கான முடிவை ஏன் எடுத்தார் என்ற கேள்வி இயல்பாகவே எழுகிறது.


போரின் முடிவுக்குப் பிறகு ஓர் அரசியல் வெற்றிடத்தில் விடப்பட்டிருந்த இலங்கைத் தமிழ் மக்களை வழி நடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பை ஏற்க வேண்டிய நிலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தவிர்க்க முடியாமல் ஏற்பட்டது. அதன் தலைவராகவும் இருக்கும் சம்பந்தன் அவர்கள் மீண்டும் தங்களது அரசியல் உரிமைக் கோரிக்கைகளை முனைப்புறுத்தி துணிச்சலுடன் முன்வைக்கக் கூடிய ஒரு அரசியல் சமுதாயமாக தமிழர்களை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பை சுமக்க வேண்டியவரானார். போர் முடிவுக்கு வந்து ஐந்து வருடங்களுக்கும் கூடுதலான காலம் கடந்துவிட்ட நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் நம்பிக்கையைப் பெற்ற பிரதான அரசியல் இயக்கம் என்ற அந்தஸ்தை இந்தியா உள்ளிட்ட சர்வதேச சமுகத்திடமிருந்து பெற்றிருக்கிறது. இதில் சம்பந்தன் அவர்களின் பங்களிப்பு எத்தகையது என்பதை உலகம் அறியும். இந்த இடைப்பட்ட கால கட்டத்தில் கூட்டமைப்பினால் முன்னெடுக்கப்பட்டிருக்கக்கூடிய அரசியல் இயக்கங்கள், போராட்டங்கள் குறித்து பல்வேறு வகையான விமர்சனங்கள் இருக்கின்றன என்பது உண்மையே.

உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றிருக்கக் கூடிய மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத்துக்கு இருக்கக்கூடிய பொறுப்புடைமை குறித்து சர்வதேச சமூகத்தின் வல்லாதிக்க நாடுகளிடமிருந்து அரசாங்கத்துக்கு வருகின்ற நெருக்குதல்களை மாத்திரம் முற்றிலுமாக அடிப்படையாகக் கொண்டு தங்களது அரசியல் தந்திரோபாயங்களை வகுப்பதில் கூட்டமைப்பு அதீத அக்கறை காட்டி வந்திருக்கின்றது என்பது அந்த விமர்சனங்களில் முக்கியமானதாகும். கடந்த கால அனுபவங்களில் இருந்து முறையான படிப்பினைகளைப் பெற்றுக் கொண்டு எதிர்கால அரசியல் பாதையை செம்மையானதாக வகுப்பதில் அக்கறை காட்டாமல் வெறுமனே உணர்ச்சிப் பரபரப்பு அரசியல் செய்வதற்கு தங்களுக்குள் இருக்கின்ற சில சக்திகளை கூட்டமைப்பின் தலைவர்கள் அனுமதிக்கின்றார்கள் என்பது அடுத்து முக்கியத்துவம் பெறுகின்ற விமர்சனமாகும்.

இத்தகைய விமர்சனங்களையெல்லாம் கருத்தில் எடுக்க வேண்டிய பொறுப்பு கூட்டமைப்பின் தலைவர்களுக்கு இருக்கிறது. கூட்டமைப்பின் பிரதான அங்கத்துவக் கட்சியான தமிழரசு கட்சியின் தலைமைத்துவத்தை ஏற்றிருக்கும் மாவை சேனாதிராஜா அவர்கள், இன்றைய உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் நிலைவரங்களுக்கு இசைவான முறையில் தமிழர்களின் உரிமைப் போராட்ட அரசியலை முன்னெடுப்பதற்கு கடந்த கால படிப்பினைகளை அடிப்படையாகக்கொண்டு வழிகாட்டுவதற்கு தனது அரசியல் அனுபவத்தை ஆக்கபூர்வமாகப் பிரயோகிக்க வேண்டும். புதியதொரு அரசியல் பாதை தமிழ் மக்களுக்குத் தேவைப்படுகின்றது என்பதே எமது கருத்தூன்றிய அவதானமாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்













### திகாம்பரம் மறந்தவிடயம்

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங்கிணைப்புப் பிரதிய மைச்சராக புதிதாக பதவியேற்ற பி.திகாம்பரம் கூறிய கருத் தொன்று சமகாலத்தின் வாக்குமூலம் பகுதியில் வெளியாகியி ருந்தது. பிரதியமைச்சர் பதவியை ஏற்பதா அல்லது இல்லையா என்று தாம் தீவிரமாக யோசித்ததாகவும் எனினும், அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் கீழ் பிரதியமைச்சராக இருக்கப் போவதால் அவரிடம் இருந்து நிறைய விடயங்களை கற்றுக் கொள்ளலாம் என்பதால்தான் தாம் அந்தப் பதவியை தயக்க மின்றி ஏற்றுக்கொண்டதாகவும் திகாம்பரம் குறிப்பிட்டிருக்கி றார். ஆனால், வாசுதேவ இதுவரை காலமும் தான் கற்ற அதே போல், அவர் கற்றுத் தெளிந்ததாக ஏனையவர்கள் பலரும் கரு திய பல்வேறு கொள்கைவாதங்களையும் அவரே மறந்தவ ராக தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகித்து அதற்கு வக்காலத்தும் வாங்கிக்கொண்டிருப்பதை திகாம்பரம் யோசிக்க மறந்துவிட்டாரோ என்று எனக்கு கேட்கத் தோன்றுகிறது.

சுப்பிரமணியம் தனேஸ்வரன், கொச்சிக்கடை.

### இடதுசாரி இயக்கம் பற்றி.....

இந்தியப் பேராசிரியர் ந.முத்து மோகனின் மூன்றாம் உலக நாடுகளில் இடதுசாரிகள் தேங்கிப் போனது ஏன்? என்ற கட் டுரை படித்தேன். விடயங்களை அழகாகக் கையாண்டிருந்தார். இலங்கையில் இடதுசா ரிகளெனக் கூறிக்கொண்டு தற்போது பதவிக ளுக்கும் பவுசுகளுக்குமாக தமது கொள்கை களை தூக்கி வீசிய மூத்ததலைவர்கள் தொடர்பில் ஒரு கட்டுரையை அவர் எழுத வேண்டும் என்பது எனது கோரிக்கை.

ஏனெனில் இலங்கை இடதுசாரிகள் மீது நம்பிக்கையும் மதிப்பும் வைத்திருந்தவர்க ளில் நானும் ஒருவன். ஆனால் இன்று அவர் களின் கொள்கை மாற்றங்கள் இடதுசாரிகள் என்றாலே இயலாதவர்கள் என்ற ஒரு கருத்தை ஏற்படுத்திவிட்டது. எனவே இலங்கை இடதுசாரிகள் தொடர்பில் ஒரு கட் டுரை சமகாலத்தில் வெளிவரவேண்டும்.

பிரபாகரன் சோமசுந்தரம்,
இரத்மலானை.

### மத்திய கிழக்கு நெருக்கடி குறித்து ஆழமான ஆய்வு

'சமாதானத்துக்கு அஞ்சும் ஹமாஸ் இயக்கமும் இஸ்ரேலியத் தலைவர்களும்'

### நடுநிலையான விமர்சனம் வேண்டும்

'சமகாலம்' இதழில் இடையிடையே யதீந்திரா என்பவரின் கட்டுரைகளைக் காண முடிகின்றது. நாய்க்கு எங்கே அடி பட்டாலும் காலைத்தான்தூக்குவதுபோல் இந்தக் கட்டுரையாளரும் எந்த விட யத்தை எழுத எடுத்துக்கொண்டாலும் புலிகளையும் புலிகளின் தலைவரையும் குற்றம் காண்பதிலேயே தனது மூளையை வீணடிக்கிறார். இவ்வாறு ஒரு நடுநிலை யான கட்டுரையாளர் விமர்சித்தால் ஏற் றுக்கொள்ள முடியும். ஆனால் இவரும் ஒரு ஆயுதப் போராட்டக் குழுவின் முன் னாள் உறுப்பினர் என அறிய முடிகின் றது. அதிலும் புலிகளால் பாதிக்கப்பட்ட குழுவைச் சேர்ந்தவராக அறியப்படுவ தால் அவரின் கட்டுரைகளில் எப்படி நடு நிலையை, சரியான விமர்சனத்தை எதிர் பார்க்க முடியும்?

சின்னத்தம்பி சுந்தரேஸ்வரன்,
கோப்பாய்.

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் தலைப்பில் கடந்த சமகாலம் இதழில் மத்திய கிழக்கு நெருக்கடி பற்றி கட்டுரையொன்று வெளியாகியிருந்தது. இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்துக்கும் இடையிலான நெருக்கடியின் உள்ளார்ந்த சில விடயங்கள் இந்தக் கட்டுரையில் கூர்ந்து ஆராயப்பட்டிருகின்றன.

மத்திய கிழக்கின் தலைவர்களுக்கு 'சமாதானம்' என்றால் 'ஆபத்து' என்ற மன நிலை ஏற்பட்டுள்ளது என்ற வாக்கியம் இதில் மேற்படி நெருக்கடிக்கான பிரதான காரணத்தை ஆழமாக உணர்த்துவதாக அமைந்துள்ளது. அதுமட்டுமல்லாது, இஸ்ரேலில் சமாதானம் வந்துவிட்டால் அந்நாட்டில் அது தனிநபர் வாதத்தை உருவாக்கி அரசியல் போராட்டங்களுக்கு வழிவகுத்துவிடும் என்று இஸ்ரேல் அரசாங்கத்துக்கும் இராணுவத்துக்கும் இருக்கும் அச்சமும் அங்கு சமாதானம் ஏற்படுவதற்கு தடையாக இருக்கிறது என்று முன்வைக்கப்பட்டிருக்கும் கருத்து இஸ்ரேல் - பாலஸ்தீன நெருக்கடியில் இருக்கும் மறைமுகமான காரணிகளை எடுத்துக்காட்டுவதாக அமைந்திருக்கிறது. மிதவாதிகள் சமாதானத்தை விரும்புவர், ஆனால், இஸ்ரேலுக்குள்ளும் பாலஸ்தீனத்துக்குள்ளும் இயங்கும் அரசியல் தலைவர்கள் மிதவாதத்தை ஏற்பதோ மதிப்பதோ கிடையாது என்ற கருத்தும் காத்திரமான அர்த்தத்தை கொண்டதாகும்.


இளையதம்பி செல்வராஜா, கரவெட்டி

## மேற்கு ஆபிரிக்காவும் எபோலாவும்

மேற்கு ஆபிரிக்காவை தனிமைப்படுத்துவதில் கவனம் செலுத்துதலாகாது என்ற செய்தி ஆய்வொன்று அண்மையில் சமகாலம் இதழில் வெளியாகியிருந்தது. காலத்திற்கு ஏற்ற செய்தி ஆய்வு அது. உலகில் என்றும் இல்லாத அளவுக்கு மேற்கு ஆபிரிக்காவை கொடிய ஆட்கொல்லி வைரஸான எபோலா தாக்கிக் கொண்டிருக்கும் நிலையில் அந்தப் பிராந்தியம் தனிமைப்படுத்தப்படக்கூடிய நிலைமை இந்தச் செய்தி ஆய்வில் எதிர்வுகூறப்பட்டிருக்கிறது.

எபோலா வைரஸை கட்டுப்படுத்துவதற்கான தடுப்பு மருந்துகள் இன்னும் பரீட்சார்த்த நிலையில் இருப்பது மட்டுமல்லாது, எபோலா வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்துவதில் முன்னின்று போராடிய சியரா லியோன் வைத்தியரான செய்க் உமர் கான் அந்த வைரஸ் தாக்கத்தினாலேயே மரணத்தைத் தழுவிய நிலையில், தற்பாதுகாப்புக் கருதி வைரஸ் தாக்கத்தில் இருந்து தம்மை பாதுகாத்துக்கொள்ள முயற்சிப்பவர்களை எந்த வகையில் குறை சொல்ல முடியும் என்ற கேள்வியும் இங்கு எழாமல் இல்லை. எவ்வாறிருப்பினும், மேற்கு ஆபிரிக்காவை எபோலா வைரஸ் தாக்கத்தில் இருந்து எப்படியாவது விடுவிக்க சில நாடுகள் உதவிகளைச் செய்து கொண்டுதான் இருக்கின்றன என்பதையும் மறுத்து விட முடியாது.

நீலகண்டன் பரமேஸ்வரன், வத்தளை.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 03 இதழ் 06

2014, செப்டெம்பர் 16 - 30

A Fortnigtly Tamil News Magazine

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

ஆசிரியர்
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)


உதவி ஆசிரியர்
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

பக்க வடிவமைப்பு
எம்.ஸ்ரீதரகுமார்

ஒப்பு நோக்கல்
என்.லெப்ரின் ராஜ்

எனது வாழ்வில் நான் முதற்தடவையாக சுதந்திரமானவனாக இருக்கிறேன் என்பதை நீங்கள் புரிந்துகொள்ளவில்லையா?

- நெல்சன் மண்டேலாவின் விடுதலை குறித்து கண்ணீர் மல்கிய நிலையில் அன்றைய தென்னாபிரிக்க ஜனாதிபதி எப்.டபிள்யூ.டி.கிளார்க் கூறியது.



வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
சமகாலம்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்; 011 7778752, 011-7767704, 011-2327827,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்....



இந்தப் பிராந்தியத்தில் இலங்கையை போதைப் பொருள் கடத்தலுக்கான மையமாக மாற்ற அரசாங்கம் அனுமதிக்கப் போவதில்லை.

**பிரதமர் டி.எம்.ஜெயரத்ன**



1999 ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களின் போது ரணில் விக்கிரமசிங்க 'மிஸ்டர் பீன்' என்று கேலி செய்து சுவரொட்டிகள் ஒட்டிய மங்களசமரவீர இப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் மீட்பர் போன்று பேசுகிறார்.

**சஜித் பிரேமதாச**



ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவராக சஜித் பிரேமதாசவை மீண்டும் நியமிப்பதாக ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாக அறிவித்து விட்டார். அத்துடன் கட்சியில் இருந்து வெளியேறியவர்களை மீண்டும் இணையுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அதனால் இருந்து உறுப்பினர்கள் வேறு கட்சிகளுக்குத் தாவும் போக்கு முடிவுக்கு வரும்.

**எதிர்க்கட்சி பிரதம கொறடா ஜோன் அமரதுங்க**



பொருளாதார சுபிட்சத்தை நோக்கி இலங்கையை வழிநடத்துவதற்கு ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் நாட்டை ஆட்சி செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது. இந்தியாவில் மகாத்மா காந்தியைப் போன்றும் சிங்கப்பூரில் லீகு வான் யூவைப் போன்றும் சிரேஷ்ட தலைவராக முக்கியமான பாத்திரத்தை ரணில் விக்கிரமசிங்கவால் வகிக்க முடியும்.

**முன்னாள் தென்மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரத்ன**




ஐக்கியதேசியக் கட்சி அதன் கருத்துகளைப் பரப்ப ஊடகங்களின் உதவியை வரவேற்கிறது. ஊடகங்கள் அவ்வாறு உதவ முன்வராவிட்டால், 1977 ஜூலை பொதுத் தேர்தலுக்கு முன்னதாக ஜே.ஆர். ஜெயவர்தன செய்ததைப் போன்று நாமும் நேரடியாகவே மக்களிடம் செல்வோம். அத்தேர்தலில் ஐ.தே.க. மகத்தான வெற்றியைப் பெற்றது.

**ஐ.தே.க. எம்.பி. மங்கள சமரவீர**



தெங்கு அபிவிருத்தி தொடர்பாக என்னிடம் பல நாடுகள் ஆலோசனை கேட்கின்றன. தெற்கு அபிவிருத்திக்கென்று இருக்கின்ற ஒரே அமைச்சர் நான் தான். வெள்ளவாயா பகுதியில் இருந்து முதல் பிரதியமைச்சராகவும் பிறகு முதல் அமைச்சராகவும் பதவிக்கு வந்திருப்பவனும் நானே.

**தெற்கு அபிவிருத்தி அமைச்சர் ஜகத்புஷ்பகுமார**



இலங்கை கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட இயந்திரப்படகுகளை விடுவிக்குமாறு நான் வற்புறுத்தாததற்குக் காரணம், அவற்றில் பெரும்பாலானவை தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் தோழி சசிகலாவுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்களில் ஒருவரான ரி.ஆர்.பாலுவுக்கும் சொந்தமானவை. அவர்கள் அதிகாரம் கொண்டவர்கள். படகுகளை விடுவிக்க உதவுமாறு என்னை அவர்கள் கேட்கவுமில்லை வசதி படைத்தவர்கள். அதனால் நான் பாதுகாப்பில்லாத, வறிய தலைவர்களின் படகுகளை விடுவிப்பதிலேயே கவனம் செலுத்தினேன்.

**கலாநிதி சுப்பிரமணியன் சுவாமி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு

# இஸ்லாமிய அரசுக்கு எதிராக அமெரிக்கா அமைத்திருக்கும் 'புதிய கூட்டணி'

ஆப்கானிஸ்தானிலும் ஈராக்கிலும் அமெரிக்கா செய்த (பெருஞ்செலவையும் உயிரிழப்புகளையும் ஏற்படுத்திய) தலையீடுகளுக்குப்பிறகு உலகில் வேறு எந்தப்பகுதியிலும் நெருக்கடிகளில் தலையிடுவதற்கு தயக்கம் காட்டியமையே ஒபாமா நிருவாகத்தின் ஒரு 'முத்திரையாக' இருந்து வந்தது. இன்று ஈராக்கின் பல பகுதிகளைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து மேலும் முன்னேறிக்கொண்டிருக்கும் இஸ்லாமிய அரசு (Islamic State) தீவிரவாத இயக்கத்தை எதிர்த்து நிற்பதற்கு தன்னிடம் ஒரு தந்திரோபாயமும் இல்லை என்று கூட செய்தியாளர்களிடம் ஜனாதிபதி பராக் ஒபாமா கூறியதைக் காணக்கூடியதாக இருந்தது. அந்தக் கூற்று அமெரிக்காவில் பலத்த கண்டனத்துக்கு உள்ளானது.

இறுதியாக அவர் இஸ்லாமிய அரசு இயக்கத்துக்கு எதிரான தனது இராணுவ அணுகுமுறையை அறிவிக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளானார். ஈராக்கிலும் சிரியாவிலும் ஆகாய மார்க்கத் தாக்குதல்களின் மூலமாக அந்த இயக்கத்துக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளை விரிவுபடுத்தப் போவதாக ஒபாமா அறிவித்தார்.

இஸ்லாமிய அரசு இயக்கத்தை 'இழிவுபடுத்தி இறுதியில் நிர்மூலஞ் செய்யப்போவதாக' அமெரிக்கா பிரகடனம் செய்திருக்கிறார். ஈராக்கில் உள்ள இஸ்லாமிய அரசு இலக்குகள் மீது மாத்திரம் விமானத்தாக்குதல்களை நடத்துவதுடன் அதன் நடவடிக்கைகளை இதுவரை மட்டுப்படுத்திக் கொண்ட அமெரிக்கா, சிரியாவில் உள்ள அந்த இயக்கத்தின் இலக்குகளையும் தாக்குவதற்கு திட்டங்களைத் தீட்டியிருக்கிறது.

இஸ்லாமிய அரசு இயக்கத்தை ஒழித்துக் கட்டுவதற்காக அமெரிக்கா சர்வதேசக் கூட்டணியொன்றையும் அமைத்திருக்கிறது. இது தொடர்பான அறிவிப்பை அமெரிக்க வெளியுறவு அமைச்சரும் பாதுகாப்பு அமைச்சரும் சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்டனர். ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ஜேர்மனி, கனடா, துருக்கி, இத்தாலி, போலந்து மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகள் இஸ்லாமிய அரசுக்கு எதிரான

(19ஆம் பக்கம் பார்க்க...)



இஸ்லாமிய அரசுக்கு எதிரான போரில் நாடுகளின் ஒத்துழைப்பைப்பெறுவதற்காக அண்மையில் பாரிஸில் கூட்டப்பட்ட மகாநாட்டில் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் சேர்ஜி லவ்ரோவ் உட்பட சில நாடுகளின் அமைச்சர்களுடன் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோன் கெரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள்நாட்டு அரசியல்

# தமிழர் அரசியலுக்கு புதிய தலைமை?



என்.சத்தியமூர்த்தி

மாவை தலைமையில் இயங்கவிருக்கும் தமிழர் அரசியல் புதிய தலைமை தங்களை ஒரு சுயபரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். தமிழரசுக்கட்சியும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளும் கடந்த காலத் தவறுகளில் தங்களது பங்கு என்ன என்பதை அறுதியிட்டுக் கொள்ளவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இனப்போர் முடிந்த காலம் தொட்டு பேசப்பட்டு வந்த அரசியல் தலைமை மாற்றம், தமிழரசுக் கட்சியில் கடைசியில் நடந்தேவிட்டது. ஆனால், அதுவே தமிழர் அரசியல் தலைவிதி மாற்றத்திற்கு வித்திடுமா? என்ற கேள்விக்கு உடனடி விடையாக அமைந்து விடாது. இன்னும் சொல்லப்போனால், இனப்போர் முடிந்த ஐந்து ஆண்டுகளாக தமிழரசுக் கட்சி தலைமை கூறிவந்துள்ள ''ஐக்கிய இலங்கைக்குள்ளான அரசியல் தீர்வு'' என்ற இலக்கே தொடருமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

கொள்கை மாற்றம் ஏற்பட்டால், அதற்குத் தலைமை மாற்றம் காரணமல்ல. மாறாக, உள்நாட்டு-வெளிநாட்டு அரசியல் நிலைமைகளும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் விசாரணைக்கு அடிப்படையான குற்றச்சாட்டுகளுமே முக்கிய காரணமாக அமையலாம். என்றாலும்,தலைமை மாற்றத்திற்கு, புதிய கொள்கை மாற்றங்களும் காரணமாக இருந்ததா?, என்ற கேள்வியும் தொக்கி நிற்கிறது.

அது மட்டுமல்ல, தமிழரசுக் கட்சியின் தலைமை மாற்றத்தைத் தொடர்ந்து,அது தலைமை வகிக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிற உறுப்புக்கட்சிகள் கோரி வரும் ''ஐக்கிய கட்சி'' மற்றும் புதிய தேர்தல் சின்னம் ஆகிய கோரிக்கைகளும் மீண்டும் முன்னெடுக்கப்படுமா என்ற கேள்வியும் மீண்டும் ஒரு முறை உயிர்த்தெழும் என்றும் எதிர்பார்க்கலாம். ஆனால், அதன் தாக்கமும், முடிவும் எதுவாக இருக்கும் என்றும் தெளிவாக யூகிக்க முடியவில்லை.

### சம்பந்தரின் சகாப்தம்

அண்மையில், வவுனியாவில் நிகழ்ந்தேறிய தமிழரசுக் கட்சியின் பதினைந்தாவது மகாநாட்டில், கட்சித் தலைவர் பதவியில் இருந்து இரா. சம்பந்தன் தானாகவே விலகிக் கொண்டார். தனது இடத்தில், கட்சியின் செயலாளர் நாயகமாக இதுவரை பதவி வகித்த மாவை சேனாதிராஜாவின் பெயரையும் அவரே முன்மொழிந்தார். இது அவரது அரசியல் முதிர்ச்சியையும், அரசியல் தெளிவையும் காட்டுகிறது. இதற்கு மாறாக, நாட்டிலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளிலும் ஆண்டாண்டுகளாகவோ, அல்லது தசாப்தங்களாகவோ, அவற்றின் தலைமை, அடுத்தவர்களுக்கு இடம் கொடுக்காமல் இழுத்தடிப்பதே வாடிக்கையாக இருந்து வந்துள்ளது. தற்போதும் அந்த நிலைமையே தொடர்கிறது.

தமிழரசுக் கட்சி ஆகட்டும், கூட்டமைப்புத் தலைமை ஆகட்டும், அல்லது அதிகப்படியான இலங்கைத் தமிழ் இனத்தவரின் அரசியல் தலைமை என்றாகட்டும், சம்பந்தன் மிகக் கடினமான காலத்தில் தலைமைப் பொறுப்பை ஏற்று, மிகவும் நன்றாகவே தனது பொறுப்புகளை ஏற்று நடத்தினார் என்பது குறிப்பிடப்பட வேண்டிய விடயம். முதலில், விடுதலைப் புலிகள் இயக்கத்தினோடும், பின்னர், இனப்போர் முடிந்து போன கடந்த ஐந்து ஆண்டு காலகட்டத்திலும், கயிற்றில் நடக்கும் இலாவகத்துடன் அவர் கட்சியையும் கூட்டமைப்பையும் நடத்திச் சென்றுள்ளார் என்பதே உண்மை.

கடந்த காலகட்டங்களில், தமிழரசுக் கட்சித் தலைமையோ, அல்லது சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்போ தவறு இழைக்காமல் இல்லை. குறிப்பாக, 2005-ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் விடுதலைப் புலிகள் இயக்கம் விட்ட பிழையையே, பின்னர் 2010-ஆம் ஆண்டு தேர்தலில் கூட்டமைப்பு விட்டது என்று கூறுவோர் உள்ளனர். அதன் காரணமாகவே, தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பதவியில் அமரவும், பின்னர் அந்தப் பதவியில் தொடரவும் வாய்ப்பு ஏற்பட்டது என இன்றளவும் கருதும் ''தமிழ்த் தேசியவாதிகள்'' உள்ளனர்.

ஆனால், இனப்பிரச்சினையின் கடந்தகால வரலாற்றைப் பார்க்கும்போது, ஐக்கிய தேசியக் கட்சியின் 2005-ஆம் ஆண்டு வேட்பாளரான ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றிருந்தால், தமிழர்களுக்கு என்ன செய்திருப்பார்? அல்லது, இனப்போரில் இராணுவத் தளபதியாக இருந்த சரத் பொன்சேகா, 2010-ஆம் ஆண்டு ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தால் மட்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மக்கள் மீண்டும் கேட்கும் 'சுயாட்சி' அதிகாரத்தை வழங்கியிருப்பாரா? அல்லது, 'போர்க் குற்றங்கள்' குறித்து 'பொறுப்புக்கூற' அவரது தலைமையிலான அரசு தயாராக இருந்திருக்குமா? அல்லது 2005-ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முடிவைப் போலவே, கூட்டமைப்பின் 2010ஆம் ஆண்டு முடிவும் வெறும் கண்துடைப்புத் தானா? விடுதலைப்புலிகள் இயக்கத்தின் உத்தரவின்படி, தமிழர்கள் 2005-ஆம் ஆண்டு தேர்தலில் வாக்களிக்க வாய்ப்பு அளிக்கப்படாத காரணத்தினால் மட்டுமே, மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக முடிந்தது என்று கருதுவோர் இன்றளவும் உள்ளனர். அவர் ஜனாதிபதியானால் மட்டுமே, அரசுடனான பேச்சுவார்த்தை முறிந்து, மீண்டும் இனப்போர் முழு வீச்சில் தொடங்கும் வாய்ப்பு உள்ளது என்ற விடுதலைப் புலிகள் இயக்க தலைமையின் எண்ணவோட்டமே இதற்குக் காரணமாக அமைந்தது.

இதுபோலவே, 2010-ஆம் ஆண்டு, சரத் பொன்சேகா, ஜனாதிபதியானால் மட்டுமே, தமிழர் தரப்பு பின்னர் அரசியல் போராட்டங்களில் குதிப்பதற்கு உடனடி வாய்ப்பு ஏற்படும் என்று சர்வதேச தமிழ் அரசியல் மற்றும் சமூகத் தலைமைகள் கருதியதா? அந்த எண்ணவோட்டத்தின் அடிப்படையில் மட்டுமே, பொன்சேகாவை தேர்தலில் ஆதரிக்கும் படி, கூட்டமைப்பு; தலைமை நிர்ப்பந்திக்கப்பட்டதா? அவ்வாறானால், எடுக்கப்படும் முடிவுகளில் தமிழர் அரசியல் தலைமையின் பங்களிப்பும், அவர்கள் எதிர்நோக்கும் நிர்ப்பந்தங்களும் என்ன?

தற்போது, மாவை தலைமையில் இயங்க இருக்கும், தமிழ் அரசியல் பெரும்பான்மையின் புதிய தலைமை, இது போன்ற பிரச்சினைகளுக்குப் பின்னால் உள்ள காரண-காரியங்களைத் பரிசீலித்துப் பார்க்க வேண்டும். தங்களையும் ஒரு சுய பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். தமிழரசுக் கட்சி மற்றும் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளும் கடந்த காலத் தவறுகளில் தங்களது பங்கீடு என்ன என்பதனை அறுதியிட்டுக் கொள்ள வேண்டும்.

அது போன்றே, வட மாகாணத்தில் ''தமிழ்த் தேசியத்தின்'' அடி வேர்கள் என்று தங்களை கருதிக்கொள்வோரும், தங்களது நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்ய வேண்டும். இதுவே, புலம்பெயர்ந்த தமிழர் குழுக்களுக்கும் பொருந்தும்.

### தகுதிக்கு கிடைத்த அங்கீகாரம்

தற்போது, மாவை கட்சித் தலைவராக ஆக்கப்பட்டுள்ளதன் மூலம், கடந்த ஆண்டு செப்டெம்பர் மாத வட மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பின் முதலமைச்சர் வேட்பாளராக அவரது பெயர் பிரேரிக்கப்படாமைக்கான உண்மையான காரணமும் வெளிப்பட்டுள்ளது எனலாம். இதன் மூலம் அப்போது, கூட்டமைப்பு மற்றும் தமிழரசுக் கட்சியினுள் தோன்றி மறைந்த அலைகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. மாவை சேனாதிராஜாவின் அரசியல் பணிகளுக்கும் அவரது தகுதிக்

# தமிழரசுக்கட்சியின் மகாநாட்டு தீர்மானங்கள்


இலங்கைத் தமிழரசுக்கட்சி நிறைவேற்றிய 15 தீர்மானங்களின் முழு வடிவமும் வருமாறு:

2014 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 5,6,7 ஆம் திகதிகளில் வவுனியாவில் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 15 ஆவது தேசிய மகாநாடு ஏறத்தாழ அறுபது வருடங்களாக இக்கட்சியின் கொள்கைகளுக்காக அயராது உழைத்தவர்களுக்கும் இதன் அடிப்படைக் கொள்கைகளை ஏற்று, ஆதரித்து, தொடர்ச்சியாக வாக்களித்து, இதுவே தமிழ் மக்களுடைய நிலைப்பாடு என்பதை ஜனநாயக முறைப்படி உறுதி செய்த எமது மக்களுக்கும், எம்முடைய மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கும் அதேவேளையிலே அந்தக் கொள்கை- அதாவது, எமது இனத்தின் சுயநிர்ணய அடிப்படையிலே, பிளவுபடாத ஐக்கிய இலங்கைக் குள்ளே, இணைந்த வடக்கு - கிழக்கில் பகிரப்படும் இறைமையின் அடிப்படையில், தன்னாட்சி அதிகாரம் கொண்ட அரசு ஒன்று வன்முறையற்ற சாத்வீகப் போராட்டத்தின் மூலம்- வென்றெடுக்கப்படும் வரை போராடுவோம் என்று எமது மக்களுக்கு உறுதி கூறுகின்றது.

அதிகூடிய அதிகாரப் பகிர்வு முறையொன்றின் அடிப்படையிலே, புதியதோர் அரசியலமைப்பின் மூலமாக இந்நாட்டின் இனங்களுக்கு இடையிலான பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்நாட்டிலுள்ள சகல தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளையும், கட்டமைப்புகளையும், சக்திகளையும் மற்றும் அனைத்து முற்போக்குச் சக்திகளையும் எம்முடன் ஒன்றிணைந்து செயற்பட முன்வருமாறு மிகவும் தயவாக அழைப்பு விடுக்கின்றோம். அத்தோடு சர்வதேச ஒப்பந்தமாகிய இந்திய- இலங்கை ஒப்பந்தத்தை தொடர்ந்தும் இலங்கை நிறைவேற்றாமல் காலம் கடத்துவதை இனி மேலும் இந்தியாவும், சர்வதேச சமூகமும், இலங்கை மக்களும் அனுமதிக்கக்கூடாதென்றும் அதை நடைமுறைப்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கின்றோம்.

இலங்கையில் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு ஐந்து வருடங்களுக்கு மேலாகியும்- போரை நடத்துகின்ற வேளையிலும் அதற்குப்பிறகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழரசுக்கட்சித் தலைவராக மாவை சேனாதிராஜா தெரிவானது அவரின் அரசியல் பணிகளுக்கும் அனுபவத் தகுதிக்கும்கிடைத்தஅங்கீகாரம்என்றும் சொல்லலாம். வவுனியா மகாநாட்டில் உரையாற்றிய வடமாகாண முதலமைச் சர் நீதியரசர் விக்னேஸ்வரன் இளைய தலைமுறைத் தலைவர்களை முன் னிறுத்த வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டியமை குறிப்பாக கவனிக் கப்பட வேண்டியதாகும்

கும் கிடைத்த அங்கீகாரம் என்று கூட இதனைச் சொல்லலாம்.

அது மட்டுமல்ல, தமிழரசுக் கட்சியினுள்ளும், கூட்ட மைப்புத் தலைமைப் பொறுப்புகளிலும், தகுதி மற்றும் அரசியல் முதிர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் தலை மைப் பொறுப்புகள் வழங்கப்படும் என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்த வகையிலேயே, வட மாகாண முதலமைச்சராக நீதியரசர் விக்னேஸ்வரன் தேர்ந்தெடுக் கப்பட்டார் என்பதும் குறிப்பில் கொள்ளப்பட வேண்டிய விடயம். வவுனியா மகாநாட்டில் உரையாற்றிய முதல மைச்சர் விக்னேஸ்வரன் கட்சியின் அடுத்தகட்ட, இளைய தலைமுறைத் தலைவர்களை முன்னிறுத்த வேண்டியதன் அவசியத்தையும் கோடிட்டுக் காட்டியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தெரிந்தோ, தெரியாமலோ, இந்த இரு தேர்வுகள் மூலம், ''கட்சி வேறு, ஆட்சி வேறு'' என்ற நிலைப்பாட் டிற்கு தமிழரசுக் கட்சி செயல்வடிவம் கொடுத்துள்ளது எனலாம். அதற்காக, தமிழரசுக் கட்சி மற்றும் கூட்டமை ப்பு ஆகிய இரு அரசியல் இயக்கங்களுக்கு அப்பாற்

இலங்கை அரசாங்கம்.

01 போர்க் குற்ற விசாரணை

02 மீள்குடியேற்றம், மக்களுடைய புனர்வாழ்வும் வாழ்வாதார வசதிகளும்

03 அரசியல் தீர்வு

சம்பந்தமாக இந்தியாவுக்கும் உலகுக்கும் கொடுத்த வாக்குறுதி எதனையும் நிறைவேற்றாமல் - மாறாக, எமது மக்களை அடக்கி, ஒடுக்கி, துன்புறுத்தி அவர் களது நிலங்களை அபகரித்து, தமிழ்ப் பிரதேசத்தை இராணுவமயமாக்கி, எமது பெண்கள் மீதும், பிள்ளை கள் மீதும் பாலியல் மற்றும் வன்முறைகளைக் கட்ட விழ்த்துவிட்டு, தமிழ் மண்ணின் இன, கலாசார, மத அடையாளங்களை அழித்து, இராணுவத்தினரையும், பெரும்பான்மை இனத்தவரையும் அரச அதிகாரத்தை துஷ்பிரயோகித்துக் குடியேற்றி, அரசியல் தீர்வொன்று ஏற்படுவதைத் தவிர்த்து, அது தேவையற்றதொன்றாக மாற்றுவதற்கு எடுக்கும் முயற்சிகளை இம்மகாநாடு வன்மையாகக் கண்டித்து, இந்தியாவும் முழு சர்வதேச சமூகமும் இதற்கெதிராக அவசர நடவடிக்கை எடுத்து, தமிழினம் தமிழர் தாயகத்திலிருந்து இல்லாதொழிக் கப்படுவதை நிறுத்தி, இனவொழிப்பிலிருந்து எம் மைக் காப்பாற்ற வேண்டுமென்று அறைகூவல் விடுக் கின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை 2014 மார்ச் மாதம் நிறைவேற்றிய தீர்மானத்திற்காக அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய நாடுகளுக்கும் எமது புலம் பெயர்ந்த மக்களுக்கும் நன்றி தெரிவிக்கும் இம்மகா நாடு, அதனால் உருவாக்கப்பட்ட விசாரணை ஒழுங் காகவும் - முறையாகவும்- முழுமையாகவும் நடந் தேற எமது உதவிகளைக் கொடுப்போம் என்றும், மக் கள் தயங்காமல் இவ்விசாரணையில் சாட்சியமளிக்க முன்வருமாறும், அதற்கான வழிமுறைகளை நாம் அமைத்துக்கொடுப்போம் என்ற உறுதியையும் கொடு த்து, உண்மை கண்டறியப்பட்டு, அதனடிப்படையில் நீதியான தீர்வொன்று எமக்குக் கிடைப்பதற்கு அனை வரும் உதவ வேண்டுகோள் விடுக்கும் அதேவேளை யில், கண்துடைப்புக்காக இலங்கை அரசாங்கம் நடத் துகின்ற உள்நாட்டு விசாரணையில் எமது மக்களுக்கு எவ்விதமான நம்பிக்கையும் இல்லை என்பதை திட்ட வட்டமாக அறிவிக்கின்றது. உண்மை கண்டறியப்படு வதன் அடிப்படையில்தான் இந்நாட்டில் நிலையான சமாதானமும் உண்மையான நல்லிணக்கமும் உரு வாக முடியும் என்பதை எமது நாட்டின் சகல மக்களுக் கும் தாழ்மையாக அறிவிக்கின்றோம்.

போரின் இறுதியிலும் அதற்கு முன்பும், பின்பும் கட் டாயமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலைகு றித்து ஆழ்ந்த கரிசனையை வெளிப்படுத்தும் இம்மகா நாடு, இந்நிலைக்குப் பொறுப்பானவர்கள் உடனடியாக அடையாளம் காணப்பட்டு தண்டிக்கப்படவும், காணா மல் ஆக்கப்பட்டு இன்னமும் உயிரோடு இருப்பவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு வடமாகாண அரசு செயல்பட வேண்டும் என்பதல்ல பொருள். மாறாக, கட்சியின் கொள்கைகளுக்கு செயல்வடிவம் கொடுக்கும் அதேவேளையில், கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்டு, மத்திய அரசுடன் இணைந்து, தங்கள் பொறுப்பை உணர்ந்து, தங்களது மக்களுக்கு கடமையாற்றுவதற்கான சுதந்திரம் மாகாண அரசிற்கு முழுவதுமாக வழங்கப்பட வேண்டும்.

அதாவது, தங்களது உரிமைக்காக தமிழ் அரசியல் தலைமைகள் குரல் கொடுக்கும் அதே நேரம், தங்களது மக்களுக்காக, தங்களது கடமைகளை ஆற்ற மாகாண அரசிற்கும், அதன் அமைச்சர்களுக்கும் கட்சி முழு ஒத்துழைப்புக் கொடுக்க வேண்டும். அந்த வகையில், மாகாண சபையில் அறுதிப் பெரும்பான்மை இருக்கிறது என்ற ஒரே காரணத்தினால், எடுத்தோம்-கவிழ்த்தோம் என்ற வகையிலான தீர்மானங்கள் முன்வைக்கப்படுவதில் இருந்தும், அவற்றை திருத்தி அமைத்து அவையில் நிறைவேற்றுவதில் இருந்தும், மாகாண அரசிற்கு விடுதலை அளிக்கப்பட வேண்டும்.

மாறாக, அரசு இயந்திரத்தை பயன்படுத்தி, தங்களது மக்களின் அன்றாடத் தேவைகளை நிறைவேற்றுவதில் தாங்கள் என்னென்ன பணிகள் ஆற்றலாம் என்ற வகையில், வட மாகாண அமைச்சர்களும், சபை உறுப்பினர்களும் தங்களது கவனத்தைச் செலுத்த வேண்டும். இதில் அமைச்சர்களுக்கும், அரசு இயந்திரத்திற்கும், மாகாண சபை உறுப்பினர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். அவ்வாறில்லாமல், தங்களது கடந்த கால போர்க் குணங்களை ஜனநாயக அரசியலுக்குள்ளும் அவர்கள் தொடர்ந்து புகுத்த முயல்வார்களேயானால், அதனால், அவதியுறும் தங்களது மக்களின் துயர் துடைக்க எதுவுமே செய்யாதவர்களாகி விடுவார்கள். இதன் முடிவை

கள் உடனடியாக விடுவிக்கப்பட்டு தமது உறவினர்களோடு சேர்ப்பிக்கப்பட வேண்டுமென்று அரசுக்கும் சர்வதேச பொறிமுறைகளுக்கும் கோரிக்கை விடுக்கின்றது. உயிர் நீத்தவர்களின் உறவினர்களுக்கு தகுந்த இழப்பீடு வழங்கப்படவேண்டும் என்றும் கேட்கின்றோம்.

தமிழ் மக்கள் மீது பல தசாப்தங்களாக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை காரணமாகவும், போர்ச்சூழல் காரணமாகவும் எமது மக்கள் ஆயிரக்கணக்காக இடம் பெயர்ந்து அவர்களில் கணிசமானோர் புலம்பெயர்ந்தும் வாழ்கிறார்கள். இதன் விளைவாகவும் அரசின் குடியேற்றத் திட்டங்களின் காரணமாகவும் தமிழர் தாயகத்திலே எமது மக்களது குடிப்பரம்பலும், இன விகிதாசாரமும் பாரியளவில் குறைக்கப்பட்டுள்ளன. யாழ். மாவட்டத்தில் இப்படியாக சனத்தொகை குறைந்ததை சாட்டாகக் கொண்டு அம்மாவட்டத்தின் நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை 9 இலிருந்து 6 ஆகக் குறைந்திருக்கின்றது. இது, இப்படியான அசாதாரண, செயற்கைக் காரணிகளின் விளைவாகையால், மீண்டும் எமது மக்கள் தமது வாழ்விடங்களில் மீள் குடியேறும் வரையாவது நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை குறைக்கப்படாது பேணப்பட வேண்டும் என்று இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

வலி வடக்கு, சம்பூர் சம்பந்தமாக உயர்நீதிமன்றத்திலும் பாராளுமன்றத்திலும் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப்பட்டு, அங்கும், மற்றைய அபகரிக்கப்பட்ட நிலங்களிலும் எமது மக்கள் மீள்குடியேற உடனடியாக அனுமதிக்கப்பட்டு, இப்போதும் நிகழ்ந்து கொண்டிருக்கும் நில அபகரிப்பு நிறுத்தப்பட்டு, எமது தாயகத்தில் தேவைக்கதிகமாக நிலை

## காந்திய வழியும், தமிழர் தலைமையும்

இலங்கைத் தமிழர்களின் மிதவாதத் தலைமைகளின் அரசியலோடு ஒப்பிட்டுப் பாக்கும் போது, இந்திய சுதந்திர போராட்டத்தில் காந்திஜீயின் வெற்றியே, எதிரியின் பலத்தையும், தனது பலவீனத்தையும் சரியாக எடைபோட்டு, அதற்கேற்ப போராட்ட உத்திகளை வகுத்தது தான். ஆயிரம் ஆண்டுகளாக அரசியல் மற்றும் சமுதாய ரீதியாக அடிமைப்பட்டுக் கிடந்த மக்களை ஆயுதமேந்தி போரிடச் சொன்னால், அது வெற்றிபெறாது என்று உணர்ந்திருந்த அவர், அஹிம்சை மற்றும் அமைதிப் போராட்டங்களை முன்னெடுத்து, உலக அரங்கில் ஓர் புதிய சகாப்தத்தை எழுதினார். இதில் அவர் தமது மக்களின் மனநிலையையும் அவர்களது அடிப்படை வாழ்வியல் சித்தாந்தங்களையும் எண்ணி உணர்ந்து, அவர் தமது மக்களை வழி நடத்தினார். அதில் வெற்றியும் பெற்றார்.

### வட்டுகோட்டை தீர்மானம்

இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு காந்திஜீ தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட சமகாலத்தில் தான், முதல் உலகப் போரில் தோல்வியுற்ற ஜெர்மனியில் ஹிட்லர், உள்ளூர் ஆட்சியாளர்களுக்கு எதிராக குரல் எழுப்பத் துவங்கினார். அவரது குரல் போர் சார்ந்திருந்தது. அன்றைய ஜெர்மனி நாட்டு சூழ்நிலையில் அதுவே எடுபட்டிருக்கும். எடுபட்டது. அன்று ஹிட்லர் அமைதிப் போராட்டம் குறித்தும், காந்திஜீ ஆயுதப் போராட்டம் குறித்தும் தமது மக்களை ஒன்றுபடுத்த முயற்சி செய்திருந்தால், இரண்டு போராட்டங்களுமே தோல்வியில் தான் முடிந்திருக்கும்.

இந்த உண்மையை காந்திஜீ முழுமையாக உணர்ந்திருந்ததால் மட்டுமே, அவர் செளரி-செளரா சம்பவத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் எதிர்கால தேர்தல்களில் சந்திக்கும் சூழ்நிலை கூட உருவாகலாம்.

### 'சுய நிர்ணய உரிமை'

வவுனியா மகாநாட்டில், மாவை சேனாதிராஜாவின் நீண்ட உரையில் ஆகட்டும், அல்லது அங்கு நிறைவேற்றப்பட்ட 15-அம்ச தீர்மானத்தில் ஆகட்டும், தமிழ்ச் சமூகத்தின் கடந்த கால போர்க் குணமே தூக்கி நிற்கிறது. அதற்கு, கூட்டமைப்புத் தலைமையிலான அரசியல் பேச்சுவார்த்தையில் முடிவு எட்டாத மத்திய அரசும் ஒரு காரணம். ஆனால், அதுவே ஒரே காரணம் அல்ல.

அரசுடனான பேச்சுவார்த்தைகளை துவங்கும் போது, கூட்டமைப்பு 'போர்க் குற்றங்கள்' குறித்து எந்தவித கருத்தும் தெரிவிக்கவில்லை. ஆனால், பேச்சுவார்த்தைகளின் இடையே, 'போர்க் குற்றங்கள்' மற்றும் 'பொறுப்புக்

**வவுனியாவில் மாவை சேனாதிராஜாவின் நீண்ட உரையிலும் நிறைவேற்றப்பட்ட 15 அம்ச தீர்மானத்திலும் தமிழ்ச் சமூகத்தின் கடந்தகால போர்க்குணமே தூக்கி நிற்கிறது. காந்திய வழியில் அமைதிப்போராட்டம் தொடங்கப்படும் என்று சேனாதிராஜா கூறிய அதே வேளை உடன் உரையாற்றிய முதலமைச்சர் தமிழர் தரப்பு மீண்டும் வன்முறையில் நாட்டம் கொள்ளக்கூடாது என்று அறிவுறுத்த தவறவில்லை**

கொண்டிருக்கும் இராணுவம் வெளியேற வேண்டும் எனவும் இம்மகாநாடு தீர்மானிக்கின்றது.

மனிதாபிமானமற்ற பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முற்றாக நீக்க வேண்டுமென்றும், இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுக் குற்றஞ்சாட்டப்படாமல் பல காலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட்டும், அதன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் வழக்குகள் மீளப்பெறப்பட்டு, இச்சட்டத்தின் கீழ் குற்றவாளிகளாகக் காணப்பட்டு சிறையில் இருக்கும் எல்லோருக்கும் மன்னிப்பு வழங்கப்பட வேண்டும் என்றும் இம்மகாநாடு தீர்மானிக்கின்றது. விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் சமூகத்தில் மீண்டும் ஒருங்கிணைக்கப்பட்டு, வளமான எதிர்காலத்தை வாழக்கூடிய விதத்தில் கல்வி மற்றும் ஏனைய உதவிகளும் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கோருகின்றோம்.

இலங்கையில் தற்போது நிலவியிருக்கும் ஊடக அடக்குமுறை முற்றாகத் தகர்க்கப்பட்டு, அனைவருக்கும் கருத்துச் சொல்லும் சுதந்திரமும் அரசை விமர்சிக்கும் உரித்தும் மீளக் கொடுக்கப்பட வேண்டும் என்று இம்மகாநாடு தீர்மானிக்கின்றது. நாட்டில் தலைவிரித்தாடுகின்ற ஊழல், ஏகாதிபத்தியம், குடும்ப ஆட்சி ஆகியவை அகற்றப்பட்டு நல்லாட்சி மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்குத் தடையாக இருக்கின்ற 18 ஆவது அரசியல்மைப்புத் திருத்தம் நீக்கப்பட்டு, சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டுமென்றும் அதிகாரங்கள் அனைத்தையும் ஒருமையப்படுத்தும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்றும் இம்மகாநாடு வலியுறுத்துகின்றது.

தார்மீக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் முழுமையாக எதிர்த்தார். அதன் காரணமாகவே, 1939-ஆம் ஆண்டு காங்கிரஸ் கட்சித்தலைவர் தேர்தலில் போராளி குணம்படைத்த நேதாஜீ சுபாஷ் சந்திரபோஸை எதிர்த்தார். அந்தத் தேர்தலில் போஸ் வெற்றி பெற்ற போது, அவரை எதிர்த்து நின்ற 'பட்டாபி சீதாராமையாவின் தோல்வி எனது தோல்வி,' என்றும் காந்திஜீ நேரடியாகவே அறிக்கை வெளியிட்டார்.

காந்திஜீ அப்போது தனி மனிதன் என்ற வகையில் பட்டாபியின் தோல்வியை தனது தோல்வியாகப் பார்க்கவில்லை. அது 'காந்தீயம்' மற்றும் தமது அஹிம்சை வழிப்போராட்ட முறைக்கு கிடைத்த தோல்வியாகவே அதனைக் கருதினார். அதனால் தான், காந்தீயம் பேசும் இலங்கைத் தமிழ் மக்களின் மிதவாதத் தலைவர்கள், ஹிட்லரின் போர் தந்திரோபாயங்களையும், சுபாஷ் சந்திரபோஸின் போராட்ட வழிமுறைகளையும் மட்டுமே பின்பற்றி வந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனின் தலைமையை ஏற்றுக்கொண்டது நெருடலாக இருந்தது.

அந்த வகையில் எழுபதுகள் தொடக்கம், 'தமிழ்த் தேசியப் போராட்டம்' வன்முறையாளர்கள் கையில் சிக்கிய போது, அதனைத் தடுக்க காந்திஜீ சௌரி-சௌரா சம்பவ காலத்தில் எடுத்தது போன்ற தெளிவான முடிவை எடுக்க அன்றைய மிதவாதத் தலைமை தவறி விட்டது.

இன்னும் சொல்லப்போனால், போராட்ட இளைஞர் குழுக்களையும் அணைத்துச் செல்லும் முகமாக இயற்றப்பட்ட 'வட்டுக்கோட்டை தீர்மானம்' இன்றளவும் பிரிவினைவாதிகளின் போராட்டக் குரலாகவே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறல்' ஆகிய பிரச்சினைகள் குறித்தே, கூட்டமைப்புத் தலைவர்கள், வெளியுலகில் அதிகமாகப் பேசினார்கள். ஏன், ஜெனீவா, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா தீர்மானம் முன்வைத்ததற்கு தாங்களே முக்கிய காரணம் என்று கூட அவர்கள் உரிமை கோரினார்கள்.

இதன் பின்னணியில், அரசுடனான பேச்சுவார்த்தை முறிவதற்கு அதுவும் ஒரு முக்கிய காரணம் என்பதனை தமிழர் தலைமைகள் உணர்ந்தே உள்ளன. இதே விடயங்களில், இதே நிலைப்பாட்டை, வவுனியா மகாநாட்டில், தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக மாவை சேனாதிராஜா பகிரங்கமாக மீண்டும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்த வகையில், மாவையின் தலைவர் உரையாகட்டும், அல்லது மகாநாட்டுத் தீர்மானங்கள் ஆகட்டும், இரண்டுமே தமிழர்களின் பழகிப்போன போர்க் குணத்தையே வெளி உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

சேனாதிராஜாவின் உரையிலும், பதினைந்து அம்ச தீர்மானத்திலும், தமிழர்களின் 'சுய நிர்ணய உரிமை' குறித்த கருத்தும், கவலையும் மீண்டும் எழுந்துள்ளது. கடந்த காலங்களை வைத்து நோக்கும் போது, மத்தியில் யார் ஆட்சி செய்தாலும், சுய நிர்ணய உரிமைக்கு எதிராகவே செயல்பட்டு வந்துள்ளார்கள். வவுனியாவில், மாவை சேனாதிராஜா சுட்டிக்காட்டியதைப் போல், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அரசின் காலத்தில் முன்வைக்கப்பட்ட நீலன்-பீரிஸ் திட்டம் மட்டுமே, அந்த உரிமையை தமிழ் மக்களுக்கு வழங்க அறிவுறுத்தியது. ஆனால், அன்றைய அரசால் அதனைச் செயலாக்க முடியவில்லை என்பதே உண்மை. அவ்வாறு செய்வதாகவே இருந்திருந்தாலும், அதற்கு விடுதலைப்புலிகள் இயக்கம் இடம் கொடுக்கவில்லை என்பதும் உண்மை.

இனப்பிரச்சினைக்கான அரசியல் முடிவு குறித்து மீண்டும் அரசுடன் பேச்சுவார்த்தை, பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் கூட்டமைப்பு பங்கேற்பது போன்ற மிதவாத அரசியல் நிலைப்பாடுகள் குறித்து வவுனியா மகாநாட்டிற்கு முன்னர் மாவை சேனாதிராஜாவே குறிப்பிட்டிருந்தார். ஆனால், வவுனியாவில், அவை அனைத்துமே அடக்கி வாசிக்கப்பட்டதாகவே கருத வேண்டியுள்ளது. மாறாக, தமிழரசுக் கட்சியில் மீண்டும் கடும் அரசியல் போக்கு மேம்பட்டு நிற்பதாகவே கருத இடமிருக்கிறது. வரும் மாதங்களிலும், வருடங்களிலும் அது எவ்வாறான வடிவங்களை எடுக்கும் என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்!

## 'சௌரி-சௌரா சம்பவம்'

வவுனியாவில் தலைமையுரை ஆற்றிய சேனாதிராஜா, சர்வதேச ஆதரவு இருந்தால் காந்திய வழியில் அமைதிப் போராட்டம் தொடங்கப்படும் என்று கூறியுள்ளார். எதிர் வரும் தை மாதம் (ஆங்கில மாதம் ஜனவரி) தொடக்கம் அவ்வாறான போராட்டங்களை முன்னெடுக்க தமிழரசுக் கட்சித் தொண்டர்கள் (கூட்டமைப்பும் ?) தங்களைத்

இலங்கையில் இன்று வேண்டும் என்றே ஏற்படுத்தப்பட்டிருக்கும் இன,மத, மொழி அடிப்படையிலான சகியாத் தன்மையும் மாற்று இன, மத, மொழி, கலாசாரங்களை வன்முறைக்குட்படுத்தி மத வழிபாட்டுத் தலங்களைத் தகர்த்து, பெரும்பான்மை இனத்துக்கும் சமயத்தாருக்குமே இந்நாடு சொந்தமானதென்ற தோரணையில் செயற்படும் பேரினவாதச் சக்திகளை இம் மகாநாடு வன்மையாகக் கண்டிக்கின்றது. இச்செயற்பாடுகளைக்கண்டும் காணாதவாறும் இருந்தும், நேரடியாகவும் உற்சாகப்படுத்துகின்ற அரசின் போக்கையும் நாம் கண்டிக்கின்றோம். இந்த நிகழ்ச்சி நிரல் மூலமாக தமிழ்ப் பிரதேசங்களின் இன, மொழி, மத அடையாளங்களை அழித்து, எமது குடிப்பரம்பலையும் இன விகிதாசாரத்தையும் மாற்றி, அதன் மூலமாக அரசியல் தீர்வொன்றை தேவையற்றதாக ஆக்கும் அரசின் சூழ்ச்சி உடனடியாகக் கைவிடப்பட வேண்டும். அரச அதிகாரத்துடன் மேற்கொள்ளப்படும் குடியேற்றத்திட்டங்கள் நிறுத்தப்படுவது மட்டுமல்லாது அவை பழைய நிலைக்கு மாற்றப்படவும் வேண்டும். வெளிநாடுகளில் குடியேறியுள்ள எமது மக்களும் மீண்டும் எமது தாயக பூமிக்குத் திரும்பி வரவேண்டும். அவர்களுக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கப்படவேண்டும்.

அரசாங்கத்தின் அசமந்தப் போக்கினாலும் மற்றும் வேண்டுமென்றே நடைமுறைப்படுத்தும் திட்டங்களினாலும் வீழ்ச்சியடைந்திருக்கின்ற தமிழர் தேசத்தின் பொருளாதார நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்று இம்மகாநாடு கோருகின்றது. தமிழ் மாணவர்களின் உயர்கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவற்றில் தொடர்ந்து பாரபட்சமாக நடந்துகொள்வதையும் இம் மகாநாடு கண்டிக்கின்றது. அரச நியமனங்களில் தமிழ் இளைஞர்கள் வேண்டுமென்றே புறக்கணிக்கப்படுகின்றனர். இளைஞர் சமுதாயத்தை சீரழிவான பாதைக்குள்ளாக அரசு வழி நடத்துவதையும் கண்டிக்கின்ற நாம், மதுபானக் கட்டுப்பாடு, போதைப் பொருள் பாவனைத் தடுப்பு ஆகியவற்றை அரசு நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றோம்.

இலங்கை, இந்தியத் தமிழ் மீனவர்களிடையே ஏற்பட்டுள்ள முறுகல் நிலை தொடரக்கூடாதெனவும் எமது கடற்பரப்பிலேயே கடல் வளத்தையும் கடற்படுக்கையையும் முற்றாக அழிக்கும் 'அடியோடு வாரியெடுக்கும் முறை' முற்றாகத் தடைசெய்யப்பட வேண்டுமெனவும் கோருகிறோம். இந்தத் தீங்கான மீன்பிடி முறை கைவிடப்பட்டு இருநாட்டு மீனவர்களும் பாரம்பரிய மீன்பிடி முறைகளையும் ஆழ்கடல் மீன்பிடியையும் செய்யக்கூடிய ஒழுங்குகளும் வசதிகளும் அவர்களுக்குச் செய்துகொடுக்கப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் இந்திய மத்திய அரசும், இலங்கை அரசும் தமிழ்நாடு மாநில அரசும், வடமாகாண சபை அரசும் ஒருமித்துச் செயற்பட்டு தீர்வொன்று உடனடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயார்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் குரல் கொடுத்துள்ளார். உடன் உரையாற்றிய முதல்வர் விக்னேஸ்வரன், தமிழர் தரப்பு மீண்டும் வன்முறையில் நாட்டம் கொள்ளக்கூடாது என்று அறிவுறுத்தியுள்ளார்.

'மஹா பாரதம்' போரை நினைவில் கொண்ட நீதியரசர் விக்னேஸ்வரன், முழுவதும் சிந்திக்காமல் 'சக்கர வியூகத்தை' உடைத்து உள்ளே சென்று, போர் புரிந்த வெற்றி கண்ட சிறுவன் அபிமன்யு, அதிலிருந்து வெளியே வரத் தெரியாமல் உயிரிழந்த கதையை விவரித்தார். அவரது உரையின் இந்தப் பகுதி, விடுதலைப் புலிகள் இயக்க தலைவர் பிரபாகரனை குறித்தது என்று பத்திரிகைகள் கருத்து வெளியிட்டுள்ளன. அவ்வாறே இருந்தாலும், நீதியரசர் விக்னேஸ்வரனின் அறிவுரை, நிகழ்காலம் மற்றும் எதிர்காலத் தமிழ்ச் சமூகத்தவர்களுக்கும், குறிப்பாக இளைய சமுதாயத்திற்கும் பொருந்தும்.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் என்ற முறையில் மாவை சேனாதிராஜா அமைதிப் போராட்டம் குறித்து தமிழ்ச் சமூகத்திற்கு அழைப்பு விடுப்பாரேயானால், அது எங்கே போய் முடியும் என்பதனையும் தமிழர் தலைமை சிந்தித்துச் செயல்பட வேண்டும். வட மாகாணத்தில் கூட்டமைப்பு அரசு நடைபெறும் காலகட்டத்தில், அங்கு அரங்கேறும் அமைதிப் போராட்டங்கள், வன்முறைக்கு வித்திட்டால், அதற்கு கூட்டமைப்பே தார்மீக பொறுப்பு ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்.

இனப்போருக்கு முந்தைய காலகட்டங்களை வைத்து நோக்கும் போது, மிதவாத தமிழ் அரசியல் தலைமைகளின் அமைதிப் போராட்டங்களை அச்சாரமாக வைத்தே, வன்முறை வெடித்தது. அதற்கு, அன்றைய ஆட்சியாளர்களும், காவல் மற்றும் பாதுகாப்புத்துறையினரும்கூட பொறுப்பேற்க வேண்டும். என்றாலும், பிற்காலத்தில் தமிழ் இளைஞர் சமுதாயம் 'வன்முறை சமுதாயமாக' சித்திகரிக்கப்படுவதற்கும், விடுதலைப் புலிகள் இயக்கம், தீவிரவாத இயக்கமாக மாறுவதற்கும் 'தமிழ்த் தேசியம்' பேசிய மிதவாதிகளின் காந்திய வழியிலான அமைதிப் போராட்டங்களே வித்திட்டது எனலாம். வவுனியாவில் மாவையின் பேருரையில் ஆகட்டும், பிற தலைவர்களின் உரைகளில் ஆகட்டும், இந்தியா குறித்தும், இந்து மத கதைகள் மற்றும் புராணங்கள் குறித்தும், மஹாத்மா காந்தி குறித்தும் வழக்கத்திற்கும் அதிகமாகவே குறிப்புகள் காணப்பட்டன. அந்த வகையில் காந்தீயம் பேசும் தமிழ் மிதவாதத் தலைவர்கள் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஒரு பாகமான 'சௌரி-சௌரா' சம்பவத்தையும் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும்.

காந்திஜீ, இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு தலைமை ஏற்று இரண்டு வருடங்களே ஆகியிருந்த காலகட்டத்தில், 1922-ஆம் ஆண்டு நடைபெற்ற சௌரி-சௌரா சம்பவத்தில், போராட்டக்காரர்கள், கலகக்காரர்களாக மாறினார்கள். பீஹார் மாநிலம் சௌரி-சௌரா கிராமத்தில் அமைதி ஊர்வலம் நடத்தி வந்த அவர்கள், வழியில் இருந்த காவல் நிலையத்தை தீயிட்டுக் கொளுத்தியதில்

யாகக் காணப்படவேண்டும். தமிழர் பிரதேசங்களில் தென்னிலங்கையில் இருந்து வந்து அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபடுபவர்கள் தொடர்ந்தும் இராணுவத்தினருடைய, கடற்படையினருடைய உதவியோடு செயற்படுவது நிறுத்தப்பட்டு, எமது மீனவர்கள் சுயாதீனமாகவும் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டும் தமது தொழிலில் ஈடுபட வசதி செய்யப்பட வேண்டும்.

'கற்பகதருவாம்' பனை மரத்தை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்வோருடைய வருமானத்தை சுரண்டி அதைப் பாதிக்கும் நடவடிக்கைகள் உடனடியாகக் கைவிடப்பட வேண்டும். அந்தத் தொழில்களில் இருந்து பெறப்படும் வருவாய் அந்தத் தொழிலாளருக்கே கிடைக்கும் வண்ணமாக மத்திய அமைச்சின் இடையீடு முற்றாக நீக்கப்பட வேண்டும். திக்கம் வடிசாலை தொழிலாளருக்கு மட்டுமே உரித்தாகவும் அதன் இலாபம் அவர்களிடமே பகிர்ந்தளிக்கும் முறை ஏற்படுத்தப்பட வேண்டும். இந்த வடிசாலைகள் வடமாகாண சபையின் கூட்டுறவுத்துறை அமைச்சிடம் கையளிக்கப்படவேண்டும்.

தமிழர் தாயகத்தில் தொடர்ச்சியாக சுரண்டப்பட்டு அபகரிக்கப்படும் கனியவளம், வனவளம், மணல் வளம் மற்றும் மழைநீர் ஆகியன பாதுகாக்கப்பட வேண்டும். சுயலாபத்துக்காக எமது சுற்றாடல் மாசுபடுத்தப்பட்டு அழிக்கப்படுவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

இரணைமடு குடிநீர்த்திட்டம் தற்போது வரையப்பட்ட விதத்திலிருந்து மாற்றியமைக்கப்படவேண்டும். ஆற்றுமுகத்திட்டத்தை மீள அமுல்படுத்தி இரணைமடுக் குளத்தின் நீருக்கான முன்னுரிமை, அதையொட்டிய விவசாய நிலங்களுக்கு அதன் பின்னர் அதுவும் ஆறுமுகத் திட்டத்தின் மூலமாகப் பெறப்படும் நீரும் யாழ். குடாநாட்டிற்கான நீர்த்தேவைகளுக்கு உபயோகிக்கப்படவேண்டுமென்று இந்த மகாநாடு தீர்மானிக்கிறது.

இணைந்த வடக்கு, கிழக்கிலே அதிகூடிய அதிகாரப் பகிர்வின் மூலமாகவே இந்நாட்டின் தேசியப் பிரச்சினை தீர்க்கப்படலாமென வலியுறுத்தும் இம்மகாநாடு, வடக்கிலும் கிழக்கிலும் அரசாங்கம் சிறிதளவு கூட அரசு அதிகாரங்கள் பகிர இடமளிக்காமல் இராணுவ அதிகாரிகளை ஆளுநர்களாக வைத்துக் கொண்டு, மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபையும் முதலமைச்சரும் அமைச்சரவையும் இயங்க முடியாமல் தடுத்து, மாகாண சபைக்குச் சமாந்தரமான இன்னொரு நிர்வாகத்தை தன்னிச்சையாக நடத்தும் ஜனநாயக விரோதச் செயலை இம்மகாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

அரசாங்கத்தின் இந்த நடத்தை, அரசியலமைப்பையும் மாகாண சபைச்சட்டத்தின் ஏற்பாடுகளையும் மீறும் செயற்பாடாகும். வடமாகாண முதலமைச்சர் மத்திய அரசோடு இணைந்து செயற்படுவதற்கு எடுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




23 காவலர்கள் உட்பட 26 பேர் கருகி இறந்தனர். போராட்டக்காரர்களின் வன்முறைக்காக வெட்கித் தலைகுனிந்த காந்திஜி, செளரி-செளராவில் மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் தனது அமைதிப் போராட்டத்தை பின்வாங்கினார். அதனாலும் தான், சாதாரண மோகன்தாஸ் கரம் சந்த் காந்தியாக இருந்த அவர் 'மஹாத்மா' என்றும் மரியாதையாக இன்றளவும் கருதப்படுகிறார்.

காந்திஜீயின் இந்த முடிவில், அவரது அரசியல் இராஜதந்திரமும் முழு வீச்சில் அடங்கியிருந்தது என்று கூட கருத இடமிருக்கிறது.

## தொண்டர் வழியில் தலைமை?

அன்றும் சரி, இன்றும் சரி, மிதவாத தமிழ்த் தலைமை, தமது மக்களின் குரல் ஒன்றாக ஒலித்தால் மட்டுமே தமது போராட்டங்களில் வெற்றி பெற முடியும் என்ற சித்தாந்தத்தை ஒட்டியே செயல்பட்டு வந்துள்ளது. அந்த வகையில், மிதவாத தமிழ்த் தலைமை அன்று விட்ட பிழையை இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், அதன் முக்கிய உறுப்பு கட்சியான தமிழரசுக் கட்சியும் தொடர்ந்து செய்கின்றதோ என்ற அச்சமும் தோன்றுகிறது. இதில் புலம்பெயர் குழுக்களின் பங்களிப்பு உள்ளது என்பதும் உண்மை.

அந்த வகையில், மக்களை சரியான பாதையில் வழிநடத்துவதும் தங்களது தலையாய கடமை என்பதனை தமிழர் மிதவாதத் தலைமை இன்னமும் முழுவதுமாக ஏற்றுக் கொள்ளவில்லை என்றே கருத இடமிருக்கிறது. மாறாக, 'தொண்டன் எவ்வழி. தலைவன் அவ்வழி' என்ற மாறுபட்ட சித்தாந்தத்திற்கு அவர்கள் அடிமையாகி விட்டார்கள். அந்த வகையில், அரசுடனான பேச்சுவார்த்தைக் காலத்திலும் பின்னர் பேச்சுவார்த்தையை அரசு ஒருதலைப்பட்சமாக முறித்துக்கொண்ட காலகட்டத்திலும், தங்களது மக்களின் மனப்போராட்டங்களுக்கு கூட்டமைப்பு அதிகமாகவே செவிசாய்த்தது எனலாம்.

அது தவறல்ல. மாறாக, அரசியல் முடிவுகளை எடுப்பதற்கு முன்னரும், அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தும் முன்னரும் இத்தகைய கலந்தாலோசனைகள் நடத்தப்பட்டிருக்க வேண்டும். அன்றும் சரி, இன்றும் சரி, தமது மக்களின் எதிர்பார்ப்புகள் என்று மிதவாத தலைமையாகவே தீர்மானித்துச் செயல்பட்ட பின்னர், அந்த மக்களில் அதிக குரல் வளமும் மனவளமும் ஒருங்கே அமைந்த சிலர் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் போது, தலைமை செய்வதறியாது திகைக்கிறது. ஒன்றில்,

சகல உளமார்ந்த முயற்சிகளையும் அரசாங்கம் உதாசீனம் செய்வதையும் அவருக்குக் கொடுத்த வாக்குறுதிகளை தன்னிச்சையாக மீறுவதையும் இம்மகாநாடு கண்டிக்கிறது. மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி சபைகளுக்கும் கூடிய அளவில் அதிகாரங்கள் பகிரப்பட்டு அவை பலப்படுத்தப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கிறோம்.

தொடர்ச்சியாக எமது மக்களை அடக்கு முறைக்கு உட்படுத்தி, தமது நிலங்களுக்கு செல்ல முடியாமல் அவர்களைத் தடுத்து, அந்நிலங்களை அபகரித்து, எமது மக்களின் சொத்துகளை அழித்து, எமது பெண்கள் மீதும் பிள்ளைகள் மீதும் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு, அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்தாது, வேண்டுமென்றே காலம் தாழ்த்தி எமது இனத்தின் இருப்பை அழிக்கும் செயற்பாட்டிலிருந்து அரசாங்கம் இவ்வருட இறுதிக்குள் மாறாவிட்டால், 2015 ஆம் ஆண்டு தை திங்களிலிருந்து எமது இனத்தைப் பாதுகாப்பதற்காக மகாத்மா காந்தியின் அஹிம்சை வழிப்போராட்டத்தை நாம் ஆரம்பிப்போம் என்றும், அப்போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை நல்குமாறு எமது மக்களிடமும் இந்நாட்டிலுள்ள அனைத்து முற்போக்குவாதிகளிடமும் இந்தியா உள்ளிட்ட அனைத்துச் சமூகத்திடமும் 2014 ஆம் ஆண்டு 09 ஆம் மாதம் 5 ஆம், 6ஆம், 7 ஆம் திகதிகளில் வவுனியாவில் கூடுகின்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மகாநாடு அறைகூவல் விடுக்கின்றது. இவையே 15 தீர்மானங்களும் ஆகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசிடமோ அல்லது சர்வதேச சமூகத்திடமோ, புதிய கோரிக்கைகளை முன்வைக்க வேண்டிய கட்டாயம் தோன்றுகிறது. அல்லது, அந்த மிதவாதத் தலைமையே செயலிழக்கப் பட்டு, காணாமல் போய்விடுகிறது. இதுவே, நிகழ்காலத்திற்கு, கடந்த காலம் கொடுத்துள்ள படிப்பினை.

இனப்பிரச்சினையில், தமிழ் மிதவாதத் தலைமை மற்றும் புலம்பெயர்ந்தோர் உள்ளிட்ட ''தமிழ்த் தேசிய வாதிகள்'' வேண்டுமென்றே தவறிழைக்கிறார்கள் என்றல்ல பொருள். மாறாக, கடந்த காலங்களைப் போல், தற்போதும் அவர்களது முயற்சிகள், பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக மாறிய கதையாக முடிந்துவிடும் நிலைமையும் இல்லாமல் இல்லை.

இதற்கு முக்கிய காரணம், 'தமிழ்த் தேசியம்' குறித்த அவர்களில் சில-பலரது எதிர்பார்ப்புகளும், அதனை அடைவதற்கான பல்வேறு எண்ணவோட்டங்களும் தான். அந்த வகையில், அவர்களில் பலரும் யானையை பார்த்த குருடர்கள் போல் தங்களுக்கு புரிந்தது மற்றும் முடிந்த வகையில் 'தமிழ்த் தேசிய' போராட்டத்தின் இலக்கை நிர்ணயித்துள்ளார்கள் என்றே கருத வேண்டியுள்ளது. அந்த இலக்குகளின் அடிப்படையிலும் போராட்ட உத்திகளை அவர்கள் வகுத்து வந்துள்ளார்கள் என்பதும் புரிய வரும்.

தமிழ் மக்களில் பெரும்பாலானோர், 'ஐக்கிய இலங்கை'யினுள் ஓர் அரசியல் தீர்வு என்ற முடிவை எடுத்துள்ளார்கள் என்று வைத்துக்கொண்டாலும், அதனுள்ளே பல்வேறு வகையான எதிர்பார்ப்புகளும், இலக்குகளும் உள்ளன. அவற்றில் ஒன்று சமஷ்டி அரசு. ஆனால், சமஷ்டி அரசு முறையிலும் பல்வேறு நாடுகளில் நிலவும் அரசு மற்றும் அரசியல் யாப்பு முறைகளின் அடிப்படையிலும் தமிழ்ச் சமுதாயத்தினுள் கோரிக்கைகள் தோன்றி வந்துள்ளன.

இவற்றிற்கு அப்பால், 'தனி நாடு' கோரிக்கையை முன்வைத்து வரும் தனிப் பிரிவுகளும் இன்னமும் தமிழ்ச் சமூகத்தில், அதிலும் குறிப்பாக புலம்பெயர்ந்தோரிடையே உள்ளன என்பதும் உண்மை. அவ்வாறான 'பிரிவினை வாதத்தை' இலங்கை அரசும், இந்தியா உட்பட்ட சர்வதேச சமூகத்தின் உறுப்பு நாடுகளில் பலவும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதும் உண்மை. இதற்கும் அப்பால் சென்று, இன்று 'ஐக்கிய இலங்கைக்குள் சுயாட்சி' என்ற தாரக மந்திரத்தை தொடர்ந்து எழுப்பி வரும் தமிழர் மிதவாத அரசியல் தலைமையால், பிரிவினைவாதத்தைக்கட்டுப்படுத்தி, இல்லாமல் ஆக்கிவிட முடியும் என்ற நம்பிக்கையை அவர்களால் இன்னமும் எழுப்ப முடியவில்லை. அதற்கு கடந்த கால வரலாறே சான்று. ■

---

*(9ஆம் பக்கத்தொடர்ச்சி...)*
சண்டைக்கு இராணுவ மற்றும் நிதியுதவியை வழங்கப் போகின்றன. வெளிநாடுகளில் இருந்து இஸ்லாமிய அரசு இயக்கத்துக்கு போராளிகள் வந்து சேருவதைத் தடுப்பது, நிதியுதவி கிடைப்பதைத் தடுப்பது என்று பல்வேறு வகையான தந்திரோபாயங்களை முன்னெடுக்க இந்த நாடுகள் தீர்மானித்திருக்கின்றன. இன்று உலகில் செயற்படுகின்ற தீவிரவாத இயக்கங்களில் இஸ்லாமிய அரசே பெருந்தனவந்த இயக்கமாகும். அதன் கட்டுப்பாட்டின் கீழ் 11 எண்ணெய் வயல்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஈராக்கிலும் சிரியாவிலும் விமானத்தாக்குதல்களைத் தீவிரப்படுத்தும் அமெரிக்காவின் திட்டம் பெருமளவில் குடிமக்களுக்கு உயிரிழப்புகளை ஏற்படுத்தக்கூடிய ஆபத்து இருக்கிறது. ஒபாமாவின் தீர்மானத்தினால் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் மேலும் வன்முறைகள் படுமோசமான அளவுக்கு தீவிரமடையக்கூடிய ஆபத்து இருப்பதாக பிராந்திய ஆய்வாளர்கள் எச்சரிக்கை செய்திருக்கிறார்கள்.

ஈராக்கிய சிறுபான்மையினத்தவர்களை படுகொலை செய்தல், ஊடகவியலாளர்களையும் மனிதாபிமானப் பணியாளர்களையும் சிரச்சேதம் செய்தல், பெண்களை அடிமைப்படுத்திக் கொடுமைகளுக்குள்ளாக்குதல், வெளிநாடுகளில் இருந்து குறிப்பாக மேற்று நாடுகளில் இருந்து ஜிஹாதி போராளிகளை ஆட்திரட்டுவது என்று இஸ்லாமிய அரசு இயக்கம் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்ற அட்டூழியங்கள் உலகில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், அமெரிக்காவும் இஸ்லாமிய அரசுக்கு எதிரான புதிய கூட்டணியில் உள்ள அதன் பங்காளி நாடுகளும் 'பயங்கரவாதத்துக்கு' எதிராக அப்படி என்னதான் புதிய தந்திரோபாயத்தை வகுத்துச் செயற்படப் போகின்றன என்ற ஒரு கேள்வி எழவே செய்கிறது.

அமெரிக்காவும் மேற்குலக நாடுகளும் பல வருடங்களாக முன்னெடுத்த உலகளாவிய பயங்கரவாதத்துக்கு எதிரான போரின் இறுதியில் இன்று நடத்திருப்பதென்ன? நவீன வரலாற்றில் இஸ்லாமிய தீவிரவாதத்தையும் பயங்கவாதத்தையும் பிரமாண்டமான அளவுக்கு வியாபிக்கச் செய்ததே இந்த வல்லாதிக்க நாடுகள் செய்த கைங்கரியமாகும்.

இஸ்லாமிய அரசை ஒழித்துக்கட்டுவதற்கெனக் கூறிக்கொண்டு இன்னொரு கூட்டணியை அமைத்திருக்கும் அமெரிக்காவும் வட அத்திலாந்திக் ஒப்பந்த நாடுகளும் (நேட்டோ) முன்னைய தவறுகளில் இருந்து எந்தப் படிப்பனையையும் பெற்றுக்கொள்ளத் தவறி விட்டன என்றே தோன்றுகிறது.

முன்னைய ஜோர்ஜ் டபிள்யூ.புஷ்ஷின் மரபைப் பின் பற்றி அரபு மண்ணை மீண்டும் மீண்டும் இரத்தத்தில் தோய்ப்பது இஸ்லாமிய தீவிரவாதத்தை எதிர்ப்பதற்கான உருப்படியான தந்திரோபாயமாக ஒருபோதும் இருக்கப்போவதில்லை. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தரிஷா பஸ்ரியன்ஸ்

# அளுத்கமவின் ஆவிகளுடன் மல்லாட்டம்




உள்நாட்டு அரசியல்

மூன்று மாதங்களுக்கு முன்னர் அளுத்கமவில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளின் இருள் கவிந்திருப்ப தற்கு மத்தியில், அடுத்தவருடம் மார்ச் மாதத்தில் ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் முக்கியமான கூட்டத்தொடருக்கு முன்னதாக புதிய மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் இளவரசர் செய்த் ராட் அல் ஹுசெய்னின் மனதை வென்றெடுப்பதற்கும் இஸ்லாமிய நாடுகளின் ஆதரவைத் தொடர்ந்தும் தக்க வைப்பதற்கும் இலங்கை அரசாங்கம் முழுவீச்சில் முயற்சிகளில் இறங்கியிருக்கிறது.

அரசாங்கம் நம்பிக்கையை வளர்த்துக் கொண்டுள்ள போதிலும், ஏமாற்றமும் கசப்புணர்வுமே விரைவில் பின்தொடர்ந்து கிடைக்கப்போகின்றது என்பது அனேகமாக நிச்சயம். 2009 ஆம் ஆண்டிலிருந்து ராஜபக்ஷ அரசாங்கத்துக்கு தொல்லைகளைக் கொடுத்துவந்த ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவநீதம்பிள்ளைக்குப் பிறகு அவரின் இடத்துக்கு வந்திருக்கும் இளவரசர் ஹுசெய்ன் மீது பெருமளவு எதிர்பார்ப்புகளை அரசாங்கம் கொண்டிருந்தது. நவிபிள்ளை தமிழ்ப்பெண்மணியாக இருக்கின்றமையினால் தான் ஆழமான அவநம்பிக்கையுடன் இலங்கை விவகாரத்தையும் கையாண்டார் என்ற தனது எண்ணத்தை அரசாங்கம் இரகசியமாக வைத்திருக்கவில்லை.

ஜோர்தானியரான இளவரசர் ஹுசெய்ன் இலங்கையுடனான தனது செயற்பாடுகளைப் பொறுத்தவரை பக்கச்சார்பின்றியும் தொழில்சார் நிபுணத்துவத்துடனும் நடந்துகொள்வார் என்று அரசாங்கம் நம்புகிறது. நவிபிள்ளையின் ஓய்வுக்கான நாட்களை ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி எண்ணிக் கொண்டிருந்தபோது, ஹுசெய்ன் அந்தப் பதவிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்ததும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கான புதிய அத்தியாயம் ஒன்று திறக்கப் படுமென்று ஓரளவு நம்பிக்கை இருந்தது.

ஆனால், 47 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட மனித உரிமைகள் பேரவையில் செப்டெம்பர் 8 ஆம் திகதி முதற்தடவையாக உரையாற்றிய போது இளவரசர் ஹுசெய்ன், நவிபிள்ளை மீது பெரும் மதிப்பை வெளிப்படுத்தியதைக் காணக்கூடியதாக இருந்தது. உலகம் பூராகவும் துஷ்பிரயோகங்களி னாலும் சித்திரவதைகளினாலும் பாதிக்கப்படுபவர் களின் குரலாகவும் மூச்சாகவும் நவிபிள்ளை விளங் கியதாகவும் அவரின் பணிகளைத் தொடரப் போவ தாகவும் குறிப்பிட்டார். இலங்கை விடயத்தில் இளவரசர் நவிபிள்ளையின் நிலைப்பாட்டையே பிரதிபலித்தார். அதாவது தனது அலுவலகத்தினால் தற்போது முன்னெடுக்கப்பட்டிருக்கும் விசார ணைக்கு அரசாங்கம் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அத்துடன் இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக குரல் கொடுப்பவர்களுக்கு ஏற்படுகின்ற அச்சுறுத்தல்கள் குறித்தும் சிறுபான்மை இனத்தவர்கள் எதிர்நோக்கு கின்ற தொல்லைகள் குறித்தும் அவர் கவலை வெளியிட்டார்.

சுருக்கமாகச் சொல்லப்போனால், குமிழி மிகவும் விரைவாகவே வெடித்து விட்டது போலத் தோன்று கிறது. வாத்தியத்தை வாசிப்பவர்கள் மாறியிருக்கக் கூடும். ஆனால், ஐ.நா.வின் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் இன்னமும் முன்னையவரின் மெட்டையே இசைத்துக்கொண்டிருக்கிறார். இலங்கை தொடர்பிலான சர்வதேச நிகழ்ச்சி நிர லின் திசை மார்க்கத்தைத் தீர்மானிப்பது செயன்மு றைகளும் கொள்கைகளுமல்ல, தனிநபர்களே என்ற நம்பிக்கையில் அரசாங்கம் தொடர்ந்தும் இருக்கின்ற போதிலும் கூட, நிலைவரங்கள் அவ் வாறில்லை என்பதை நிகழ்வுப் போக்குகள் தெளி வாக வெளிக்காட்டுகின்றன.

செயன்முறைகளையும் நிறுவனங்களையும் வென்றெடுக்க முடியாதபோது, அரசாங்கம் தனி நபர்களை வென்றெடுப்பதில் நம்பிக்கை வைத்து செயற்படுகின்றது. இந்த அணுகுமுறையைப் பொறுத்தவரை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் சிலரை தனது பக்கத்துக்கு வென்றெடுக்க அரசாங் கத்தினால் இயலுமாக இருந்திருக்கிறது. நேஸ்பி பிரபுவும் வேறு சிலரும் இலங்கை தொடர்பான ஐக் கிய இராச்சியத்தின் கொள்கைக்கு எதிராக குரலெ ழுப்பியிருந்தார்கள். இந்தியாவின் முன்னாள் இரா ஜதந்திரியான பொதுநலவாய அமைப்பின் செயலா ளர் நாயகம் கமலேஷ் சர்மாவையும் வென்றெடுப்ப தில் அரசாங்கத்தினால் குறிப்பிடத்தக்க அளவுக்கு வெற்றிபெறக்கூடியதாக இருந்தது. நாட்டின் பிரதம நீதியரசர் சட்டவிரோதமாகவும் அரசியலமைப்பு





**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஸ்தானிகராக இளவரசர் ஹுசெய்ன் பதவியேற்றபோது ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக் கான புதிய அத்தியாயம் ஒன்று திறக்கப் படும் என்று அரசாங்கம் நம்பியது. ஆனால் இலங்கை விடயத்தில் அவரும் நவி பிள்ளையின் நிலைப்பாட்டையே பிரதி பலித்தார்**

ஏற்பாடுகளுக்கு முரணாகவும் பதவி நீக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் கூட, இலங்கையின் நீதித்துறை மற் றும் ஜனநாயக மேன்மை மீதான தனது நம்பிக்கை யில் கமலேஷ் சர்மா ஒருபோதும் தளம்பவில்லை.

புதிய ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் ஹுசெய்ன் இலங்கை அரசாங்கத்தின் மீது மிகவும் ஆழமான அனுதாபத்தைக் கொண்ட ஒரு அமைப் பின் உறுப்பு நாட்டைச் சேர்ந்தவர்.

இந்த ஜோர்தானிய வழக்கறிஞர் ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்ட போது, முறையான வட்டாரங்களில் இருந்து பிரயோகிக்கப்படக்கூடிய நெருக்குவாரங்களின் மூலமாக இலங்கை பற்றியும் அதன் மனித உரிமை கள் நிலைவரம் பற்றியும் அவரது அபிப்பிராயத்தை மாற்றிவிடமுடியும் என்ற நம்பிக்கையில் அர சாங்கம் எவ்வளவு உற்சாகமான மனநிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது?

இந்தக் கோணலான கணிப்பீட்டிலும் ஜெனீவாவில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இஸ்லாமிய நாடுகள் இலங்கைக்கு வழங்கிவருகின்ற ஆதரவை உறுதி செய்வதிலும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு (Organisation of Islamic Cooperation) முக்கியமான பங்கொன்றை ஆற்ற வேண்டியிருக்கிறது. 57 இஸ்லாமிய நாடுகளின் அங்கத்துவத்தைக் கொண்ட இந்த அமைப்பில் அவதானி அந்தஸ்துக்கு எமது அரசாங்கம் விண்ணப்பிக்கின்ற அளவுக்கு இலங்கையுடன் நெருக்கமான நட்புறவை அது கொண்டிருக்கிறது. முன்னொரு போதுமில்லாத ஒரு நகர்வாக, இவ்வருடம் ஜூனில் அளுத்கமவில் இடம்பெற்ற கலவரங்களைத் தொடர்ந்து இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு கடுந்தொனியிலான பகிரங்க அறிக்கையொன்றை வெளியிட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. திரை மறைவில் கொழும்புடனான அந்த அமைப்பின் தொடர்பாடல்கள் மிகவும் கடுமையான விமர்சனங்கள் நிறைந்ததாக இருந்தன. தென்னிலங்கையில் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை தொடர்பில் அதன் விசனத்தை வெளிப்படுத்தி இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு அரசாங்கத்துக்கு கடும் அறிக்கையொன்றையும் அனுப்பியது.

ஜூன் 15 அளுத்கம சம்பவங்கள் தொடர்பில் ஜெனீவாவிலும் கொழும்பிலும் வேறு இடங்களிலும் வெளியிடப்பட்டிருக்கக்கூடிய இராஜதந்திர அறிக்கைகள் சகலவற்றையும் விட இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு வெளிக்காட்டிய பிரதிபலிப்பே அரசாங்கத்தைப் பெரும் குழப்பத்துக்குள்ளாக்கியது. ஜூலை நடுப்பகுதியில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முஸ்லிம் விவகாரங்களுக்கான தனது ஆலோசகர் அப்துல் காதர் மன்சூர் மௌலானாவை இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் செயலாளர் நாயகம் இயாத் அமீன் மதானியைச் சந்திப்பதற்காக சவூதி அரேபியாவின் ஜெத்தா நகரில் உள்ள தலைமைக் காரியாலயத்துக்கு அனுப்பி வைத்தார். அளுத்கம, பேருவளை சம்பவங்கள் அளவுக்கு அதிகமாகப் பெரிதுபடுத்தப்பட்டதாக மதானிக்கு விளக்கமளிப்பதற்காகத்தான் மௌலான அந்தச் சந்திப்பை வேண்டி நின்றார். ஆனால், அதற்கு காலம் சற்று கடந்துவிட்டது என்று தான் கூறவேண்டும். ஏனென்றால், வன்செயல் தொடர்பிலும் அதன் போது ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் சொத்துச் சேதங்கள் தொடர்பிலும் விரிவான ஆவணங்களும் புகைப்படங்களும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பிற்கு ஏற்கனவே விநியோகிக்கப்பட்டுவிட்டன. அளுத்கம வன்முறைகளின் போதும் அதற்குப் பின்னரும் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக முஸ்லிம் சிவில் சமூக செயற் பாட்டாளர்களும் தொண்டர்களும் நிலைவர அறிக்கைகளையும் சேதமதிப்பீடுகளையும் பத்திரிகைகளில் வெளியான செய்திகள், படங்களின் கத்தரிப்புகளையும் தொகுப்பதில் தீவிரமாகச் செயற்பட்டனர். அந்தத் தகவல்களையெல்லாம் தன் கைவசம் வைத்திருந்த மதானி இலங்கை அரசாங்கத்தின் தூதுவரின் 'கதையை' மிக இலகுவாக மறுதலித்துப் பேசக்கூடியதாக இருந்தது. ஜூலை பிற்பகுதியில் மக்காவுக்கு உம்ரா யாத்திரைக்குச் சென்ற தனது நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் செயலாளர் நாயகத்தைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதை அறிந்து ஜனாதிபதி ராஜபக்ஷ கடுஞ்சினமடைந்தார். அளுத்கம வன்முறை தொடர்பாகவும் அரசாங்கத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படுகின்ற கடும்போக்கு சிங்கள குழுக்களினால் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராகவும் அதன் வழிபாட்டுத்தலங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற குரோதப் பிரசாரங்கள் தொடர்பாகவும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் தூதுக்குழுவுக்கு ஹக்கீம் விரிவாக விளக்கிக் கூறியதாக நம்பப்படுகிறது.

செயலாளர் நாயகம் மதானியைச் சந்தித்து இந்தப் பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்காக உயர்மட்



அளுத்கம, பேருவளை சம்பவங்கள் அளவுக்கதிகமாக பெரிதுபடுத்தப்பட்டதாக இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் செயலாளர் நாயகம் மதானிக்கு கூறுவதற்கே தனது இஸ்லாமிய விவகார ஆலோசகரை ஜனாதிபதி ராஜபக்ஷ ஜெத்தாவுக்கு அனுப்பினார். முஸ்லிம் அமைப்புகள் அனுப்பிய தகவல்களையெல்லாம் கைவசம் வைத்திருந்த மதானி அரசாங்கத் தரப்பின் கதையை மிக இலகுவாக மறுதலித்துப் பேசக்கூடியதாக இருந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டக் குழுவொன்றை ஏற்பாடு செய்வதற்கு அரசாங்கம் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்புடன் தொடர்பு கொண்ட போது அது நிராகரிக்கப்பட்டதாகத் தெரியவந்தது.

அளுத்கமவையும் பேருவளையையும் கலவரங்கள் உருக்கி மூன்று மாதங்கள் கடந்த நிலையில், அந்தப் பகுதிகளில் இராணுவத்தினால் மேற்கொள்ளப்பட்ட புனரமைப்புப் பணிகள் அனேகமாகப் பூர்த்தியாகிவிட்டன. பல முஸ்லிம் குடியிருப்புப்பகுதிகளில் எரிந்துபோன பள்ளிவாசல்களையும் வீடுகளையும் கடைகளையும் (போரின் முடிவுக்குப் பின்னரான காலகட்டத்தில் நிர்மாணப் பணிகளில் தங்கள் ஆற்றல்களை கச்சிதமாக வளர்த்துக் கொண்டுள்ள) இராணுவத்தினர் திருத்தியமைத்துவிட்டார்கள்.

ஜூன் 15 கலவரங்களைத் தொடர்ந்துவந்த மாதங்களில் மிக முக்கிய பிரமுகர்கள் அந்தப்பகுதிகளுக்கு விஜயம் செய்துகொண்டிருக்கிறார்கள். அளுத்கம தர்கா நகர் பகுதிகளில் முஸ்லிம்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட இரவு வன்முறைகளில் படுமோசமாகச் சேதமடைந்த சீனவத்தை பள்ளிவாசல் புனரமைக்கப்பட்ட பிறகு அது திறந்து வைக்கப்பட்ட வைபவத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே நேரடியாகக் கலந்துகொண்டார். கலவரங்களுக்குப் பிறகு மூன்றுவாரங்கள் கழித்து இஸ்லாமிய வணக்கத்தலங்களுக்குள் காலணிகளின்றி சென்ற ஜனாதிபதி மதங்களுக்கிடையிலான இணக்கப்போக்கு குறித்தும் இலங்கையில் வாழும் சமூகங்கள் மத்தியில் குரோத உணர்வை விதைப்பதற்கு மேற்கொள்ளப்படுகின்ற சதிமுயற்சிகள் குறித்தும் கருத்துகளை வெளியிட்டார். இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலைகளைப் பார்வையிடுவதற்காக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் தயா இரத்நாயக்காவும் அந்தப் பகுதிகளுக்கு விஜயம் செய்தார். நாட்டில் இயங்குகின்ற பௌத்த கடும் போக்கு குழுக்களுக்கும் தனக்கும் இடையே தொடர்புகள் இருப்பதாகக் கூறப்படுவதை நிராகரிப்பதற்கு பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ பிரசாரங்களைத் தீவிரப்படுத்தியிருந்தார். பொதுபலசேனாவும் அதனோடிணைந்த அமைப்புகளும் முஸ்லிம்களுக்கு எதிரான ஆவேசப் பேச்சுகளை தற்போதைக்கு சற்று தணித்திருக்கின்றன போல் தெரிகிறது. பொதுபலசேனாவின் சர்ச்சைக்குரிய பொதுச்செயலாளர் கலபொட அத்தஞானசார தேரர் இப்போது விசித்திரமான தனது கடந்த காலத்தைப் பற்றி ஊடகங்களுக்குப் பேட்டிகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்.

ஆனால், மிக்வும் எதிர்பார்க்கப்பட்டிராத ஒரு திருப்பமாக, இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின்



**அமைச்சர் ரவூப் ஹக்கீம் மதானியை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதை அறிந்து ஜனாதிபதி ராஜபக்ஷ கடும் சினம் அடைந்தார். முஸ்லிம்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் குறித்து விவாதிப்பதற்காக உயர்மட்டக்குழு ஒன்றை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் குறித்து இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்புடன் அரசாங்கம் தொடர்பு கொண்ட போது அது நிராகரிக்கப்பட்டதாக கூறப்படுகிறது**

தூதுக்குழுவொன்று விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவிருப்பதாகவும் அரசாங்க முக்கியஸ்தர்களுடனும் முஸ்லிம் குழுக்களுடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தவிருப்பதாகவும் தெரியவருகிறது. 'நல்லெண்ணத் தூதுக்குழு' என்று வர்ணிக்கப்படும் இக்குழுவில் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் செயலாளர் நாயகத்தின் அலுவலகத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களே அங்கம் வகிக்க இருப்பதாக உயர்மட்ட வட்டாரங்கள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. இத்தகைய விடயங்களில் செயலாளர் நாயகத்தின் அலுவலகம் சுயமாகவே நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய அதிகாரங்களைக் கொண்டிருக்கிறது என்றும் இடைக்கிடை கிரமமான முறையில் இவ்வாறான தூதுக்குழுக்களை அனுப்பிவைக்கக்கூடும் என்றும் பேசப்படுகிறது.

கடந்த ஒருவருடகாலமாக, இஸ்லாம் தொடர்பாக உலகளாவிய ரீதியில் கிளப்பப்பட்டுவரும் பீதி பற்றிய நிலைவரங்களை அவதானித்துவரும் (இஸ்லாமிய ஒத்துழைப்பு இயக்கத்தின்)பிரிவு (OIC'S global Islamophobia watch unit) இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறை மற்றும் குரோதப் பேச்சுகளின் போக்கை அவதானித்து வந்திருக்கிறது. இந்தப் பிரிவு இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் அமைச்சர்கள் கவுன்சிலுக்கு இலங்கையில் உள்ள போக்குகள் தொடர்பில் குறிப்பிட்ட இடைவெளிகளில் அறிக்கைகளைச் சமர்ப்பித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்திருக்கிறது. இலங்கைக்கு வரவிருக்கும் தூதுக் குழுவும் அதன் விஜயத்தின் இறுதியில் செயலாளர் நாயகம் மதானிக்கு அறிக்கையொன்றைச் சமர்ப் பிக்கும். அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகள், முஸ்லிம் அமைச்சர்கள், மதத் தலைவர்கள் மற்றும் சிவில் சமூகக் குழுக்களுடனான சந்திப்புகளுக்கு மேலதிகமாக, அத்தூதுக்குழு கலவரத்தில் பாதிக்கப் பட்ட அளுத்கம, பேருவளை நகரங்களுக்கு விஜ யம் செய்வதில் உள்ள அக்கறையையும் வெளிக் காட்டியிருக்கின்றது. கலவரங்களினால் ஏற்பட்ட சேதங்களைத் திருத்தி புனரமைப்புப் பணிகளை இராணுவத்தினர் தீவிரமாக மேற்கொண்ட அளுத்க மவிற்கு அரசாங்க வழிகாட்டலுடன் கூடிய சுற் றுலா ஒன்று ஏற்பாடு செய்யப்படக்கூடும் என்றும் தூதுக்குழுவினருக்கு எச்சரிக்கை செய்யப்பட் டுள்ளது. அவர்களுக்கான விசா அனுமதி ஏற்க னவே வழங்கப்பட்டுவிட்டது. ஆனால் விஜயத்துக் கான திகதிகள் இன்னமும் நிர்ணயிக்கப்படவில்லை என்று தெரியவருகிறது.

இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் தூதுக் குழுவின் வருகை தலையீடு செய்யும் நோக்குடனா னது அல்ல என்றும் இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வுகளைக் கட்டுப்படுத்துவதற்கு பயனுறுதியுடைய நடவடிக்கைகள் எடுக்கப்படு வதை ஊக்குவிப்பதே அவர்களின் நோக்கம் என் றும் உயர்மட்ட அரசாங்க வட்டாரங்கள் தெரிவித் தன. பிரச்சினையில் சம்பந்தப்பட்ட பல்வேறு தரப்புகளுடனும் பரந்தளவிலான பேச்சுவார்த்தைக ளுக்காக இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் தூதுக்குழுவை நாட்டுக்குள் அனுமதிப்பதற்கு அர சாங்கம் எடுத்த தீர்மானம் சர்வதேச தொடர்பாடல் களில் மிகவும் முக்கியமான ஒரு அம்சமாகக் கரு தப்படுகின்ற ஒளிவுமறைவற்ற தன்மையையும் வெளிப்படையான ஊடாட்டத்தையும் உறுதி செய் வதில் அரசாங்கத்துக்கு இருக்கிற விருப்பத்தை வெளிக்காட்டுகிறது. அளுத்கம வன்முறைகளைத் தூண்டிவிட்ட சிங்கள கடும் போக்கு இயக்கங்களிட மிருந்து சில எதிர்ப்புகள் இதற்குவரக்கூடியது சாத் தியமே என்ற அதேவேளை, அரசாங்கம் அத்த கைய அழுத்தங்களுக்கு அடிபணிந்துவிடப் போவ தில்லை என்று நம்பப்படுகிறது.

இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் தூதுக் குழுவின் விஜயத்தின்போது பொதுபலசேனாவும் ஏனைய கடும்போக்கு குழுக்களும் எந்தவிதமான எதிர்ப்பு நடவடிக்கையிலும் இறங்கமாட்டா என்று முஸ்லிம் சமூகத்தின் தலைவர்கள் நம்புகிறார்கள். வழமையாக, இஸ்லாமியக் குழு ஒன்றுடனான இத் தகைய பேச்சுவார்த்தைகள் தலையீடு செய்வதற்கு அனுமதிக்கும் தன்மையானவை என்று நோக்கப் பட்டு கடும் போக்காளர் முகாமில் கொந்தளிப்பு களை ஏற்படுத்தும். ஆனால், தூதுக்குழுவின் விஜ



**எதிர்பார்க்கப்படாத ஒரு திருப்பமாக அர சாங்கத்தின் அழைப்பின் பேரில் இஸ்லா மிய ஒத்துழைப்பு அமைப்பின் தூதுக்குழு வொன்று இலங்கைக்கு விஜயம் செய்ய விருக்கிறது. அளுத்தமவுக்கு அரசாங்க வழிகாட்டலுடன் கூடிய சுற்றுலா ஒன்று ஏற்பாடு செய்யப்படக்கூடும் என்று அத் தூதுக்குழுவுக்கு எச்சரிக்கை செய்யப் பட்டிருக்கிறது.**

யத்தின் போது கடும்போக்கு குழுக்கள் கட்டுப் பாட்டின் கீழ் இருக்கச் செய்யப்படும் என்று அவதா னிகள் கருதுகிறார்கள்.

ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் இளவர சர் ஹுசெய்னைப் பற்றி அரசாங்கம் கொண்டிருக் கக் கூடிய எதிர்பார்ப்புகளுக்கும் நம்பிக்கைகளுக் கும் மத்தியில், இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு டனான ஆக்கபூர்வமான ஊடாட்டங்கள் சர்வதேச இலக்குகளை அடைவதற்கு மிகவும் முக்கியமான வையாக நோக்கப்படும். இளவரசர் ஹுசெய்ன் தனது புதிய பதவியைப் பொறுத்தவரை, பிராந்திய செல்வாக்குகளுக்கு அல்லது தனது சொந்த நாட் டின் செல்வாக்குகளுக்கு விட்டுக்கொடுத்துச் செயற் படுவதற்கு முன்வருவார் என்பதற்கு இதுவரை எந்த சான்றுமே இல்லை என்ற போதிலும்கூட, அவரின் ஆதரவை வென்றெடுப்பதற்கான செயற் பாடுகளில் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு முக்கியமான ஒரு கருவியாக உணரப்படும். ஐக்கி யநாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங் கைக்கு இதுவரையில் வழங்கிவந்த ஆதரவை இஸ் லாமிய ஒத்துழைப்பு அமைப்பு தொடரும் என்றும் இளவரசர் ஹுசெய்ன் மீது அந்த அமைப்பின் உறுப்பு நாடுகளைச் சேர்ந்த செல்வாக்குமிக்க தலை வர்களும் புத்தி ஜீவிகளும் சிலவகைச் செல் வாக்கை செலுத்தக்கூடியதாக இருக்குமென்றும் அரசாங்கம் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறது.

இது ஒரு வருந்தத்தக்க மதிப்பீடு என்று சொல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லித்தான் தெரியவேண்டியதில்லை. இது ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் நியமனத்தில் உள்ள அரசியலை அறவே விளங்கிக்கொள்ளாத ஒரு மதிப்பீடு ஆகும்.

ஐ.நா.மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் ஒருவர் நான்கு வருட பதவிக் காலங்களுக்கு நியமிக்கப்படலாம். 2008ஆம் ஆண்டு அந்தப் பதவியை ஏற்ற நவிபிள்ளை 6 வருடங்கள் மாத்திரமே பணிபுரிந்தார். இஸ்ரேல் தொடர்பில் நவிபிள்ளை வெளியிட்டுவந்த கடுமையான கண்டனங்களின் விளைவாக வாஷிங்டனின் வெறுப்பை சம்பாதித்த காரண த்தினாலேயே முழு 8 வருடங்களுக்கும் பதவியில் இருப்பதற்கான வாய்ப்பு அவருக்கு மறுக்கப்பட்டது என்பது ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு பகிரங்க இரகசியமாகும். 2012 ஆம் ஆண்டு நவிபிள்ளைக்கு பதவி நீடிப்பு வழங்கப்பட்டபோது இருவருடங்களுக்கு மாத்திரம் அவரது பதவிக்காலத்தை நீடிப்பதற்கே அமெரிக்கா சம்மதித்தது என்று ஜெனீவாவிலும் நியூயோர்க்கிலும் ஐ.நா.விலிருந்து வெளியான வெளிநாட்டு ஊடகங்களின் செய்திகளில் இருந்து அறியக்கூடியதாக இருந்தது.

உண்மை நிலை அவ்வாறிருந்தும் கூட, அரசாங்கம் நவிபிள்ளையை அதன் எதிரியென்று நம்பியதைப் போன்று இளவரசர் ஹுசெய்னை அதன் நண்பர் என்று ஏனோ நம்பிக்கொண்டிருக்கிறது.இளவரசர் ஹுசெய்ன் ஜோர்தான் மன்னர் குடும்பத்தைச் சேர்ந்தவர். ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கையைப் பாதுகாப்பதில் பெருமளவு அக்கறை கொண்ட இஸ்லாமிய நாடுகள் புதிய ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மீது ஒரு அளவுக்கு செல்வாக்கைக் கொண்டிருக்கும் என்று அரசாங்கம் நம்பக்கூடும். இது மிகவும் சூதறியாத ஒரு தவறான கணிப்பீடு என்று நிரூபிக்கப்படலாம். இளவரசர் ஹுசெய்ன் சர்வதேச சட்டக் கோட்பாடுகளில் பற்றார்வம் கெண்ட ஒரு வழக்கறிஞர் மாத்திரமல்ல, மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் என்ற கூருணர்வுடைய அந்தப் பதவிக்கான வாஷிங்டனின் பெருவிருப்புடனான தெரிவாகவும் அவர் இருந்தார் என்றே பரவலாக நம்பப்படுகிறது.

நீண்டகால நோக்கில், இலங்கை அரசாங்கம் மனித உரிமைகள் பேரவையில் இளவரசர் ஹுசெய்னின் ஆதரவில் குறைந்தளவுக்கே நம்பிக்கை வைத்துச்செயற்படலாம். ஆனால், இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பின் ஆதரவில் அரசாங்கம் கூடுதலான அளவுக்கு நம்பிக்கை வைக்கக் கூடியதாக இருக்கும். அளுத்கம வன்செயல்களின் ஆவிகள் வட்டமிட்டுக் கொண்டிருக்கின்ற நிலையில், ஜெனீவாவில் அடுத்த மார்ச்சில் நடைபெறவிருக்கும் கூட்டத் தொடருக்கு முன்னதாக, சேதங்களை மட்டுப்படுத்துவதற்கு இந்த இஸ்லாமிய நாடுகளுடனான செயற்பாடு முக்கியமானதாக அமையும். ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# ஜனாதிபதி தேர்தலும் ரணில் விக்கிரமசிங்கவும்



அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளராக போட்டியிடப் போவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே அறிவித்துவிட்டார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்து புதியதொரு அரசியலமைப்பை அறிமுகப்படுத்துவதற்கான இணக்கப்பாட்டுடன் கூடிய ஒரு பொது நிகழ்ச்சித் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மக்களின் ஆணையைப் பெறுவதற்கு பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்துவதில் நாட்டமுடைய சமூக-அரசியல் சக்திகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருப்பதற்கு மத்தியிலேயே விக்கிரமசிங்க இந்த அறிவிப்பை வெளியிட்டார். அடுத்த முக்கியமான தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ ஆட்சியை எதிர்ப்பதற்கு சிறந்த வழிவகையாக இந்த சுலோகங்கள் அமையும் என்று நம்பப்படுகிறது.

விக்கிரமசிங்கவினதைப் போன்ற அறிவிப்பை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் வெளியிட்டிருக்கிறார். அதாவது, அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளராக போட்டியிடப்போவதாக அவரும் பிரகடனம் செய்திருக்கிறார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் அணி சேர்ந்து நிற்கும் அரசியல் கட்சிகள், குழுக்கள் மற்றும் முக்கியஸ்தர்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது ஜனாதிபதி ராஜபக்ஷவும் அவரது கூட்டத்தினருக்கு ஒரு பொதுவேட்பாளரேயாவர். தனது கட்சிக்குள் இருக்கக்கூடிய வேறுபட்ட அரசியல் கோட்பாடுகளைக் கொண்ட பிரிவினருடன் சேர்ந்து பணியாற்றுவதில் ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு இருக்கின்ற நெகிழ்ச்சிப் போக்கு காரணமாக அவர் சிறந்ததொரு வேட்பாளர் என்று கூற முடியும்.

ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை வழிநடத்துகின்ற சக்தியான சிங்கள பௌத்த தேசியவாதம் ஜாதிகஹெல உறுமய, அமைச்சர் விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி போன்ற அரசியல் கட்சிகளினாலும் பொதுபலசேனா, மற்றும் இராவண பலய போன்ற அமைப்புகளினாலும் பாதுகாத்துப் பேணப்படுகின்றது. ராஜபக்ஷ அரசாங்கத்தின் அரசியல் செயல்முறை இந்தக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது என்பதுடன், மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்சிகளும் அமைப்புகளும் அந்தச் செய்தியை நாட்டின் நாலாபுறமும் கொண்டு செல்வதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்து கொண்டிருக்கின்றன.



உபுல் குமாரப்பெரும

அரசாங்கத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்துழைக்கின்ற இடதுசாரிக் கட்சிகள் சிங்கள
பௌத்த தேசியவாதக் கோட்பாட்டை ஏற்றுக்கொள்
ளாதவையாக இருந்த போதிலும், அவற்றிடம் இருக்
கின்ற மேற்குலக விரோத உணர்வுகள் மற்றும் முதலா
ளித்துவ எதிர்ப்பு சுலோகங்கள் காரணமாக ராஜபக்ஷ
வுடன் ஒரேவிதமான கருத்துகளை கொண்டிருக்கக்
கூடிய விவகாரங்களில் சேர்ந்து செயற்பட இயலு
மாக இருக்கிறது. முஸ்லிம்களுக்கு விரோதமான
பிரசாரங்கள் தொடர்பில் ஜாதிகஹெல உறுமயவுக்கு
எதிராக முஸ்லிம் கட்சிகள் விமர்சனங்களைத் தெரி
வித்திருக்கின்றன. அத்துடன் அதே முஸ்லிம் கட்சிக
ளுக்கு எதிராக ஜாதிகஹெல உறுமயவும் ஏனைய
பௌத்த அமைப்புக்களும் குற்றச்சாட்டுக்களை முன்
வைக்கின்றன. அவ்வாறிருந்த போதிலும் இக்கட்சி
கள் எல்லாமே ஒன்றிணைந்து அரசாங்கத்தில் செயற்
படக்கூடியதாக இருக்கிறது. இருதரப்பினரதும் ே
காட்பாடுகளுடன் பணியாற்றக்கூடிய ஆற்றலைக்
கொண்டவராக ராஜபக்ஷவும் விளங்குகிறார்.

மலைநாட்டுத் தமிழர்கள் கருத்தூன்றிய அரசியல்
கோட்பாடொன்றை ஒருபோதும் ஆதரிப்பதில்லை.
ஆனால், அதிகாரத்தில் இருக்கக்கூடிய கட்சி எத்த
கைய அரசியல் நோக்கைக்கொண்டிருந்தாலும்
அதைப் பொருட்படுத்தாமல் இணைந்து பணியாற்று
வதில் மலையகக் கட்சிகளுக்கு இருக்கின்ற அனுபவ
வரலாறு காரணமாக அவை ஜனாதிபதி ராஜபக்ஷ
அரசாங்கத்துடன் சேர்ந்து செயற்பட்டுவருகின்றன.

வடபகுதி தொடர்பில், முக்கியமாக தமிழ் அரசி
யல்வாதிகள் மற்றும் அவர்களது பிரதான அரசியல்
கட்சியான தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தொடர்பில்
தென்னிலங்கை கூடுதலான அளவுக்கு குரோதமான
மனப்போக்கைக் கொண்டிருக்கிறது. கூட்டமைப்பு
க்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற பிரசா
ரங்கள் காரணமாக, அக்கட்சியும் வடக்கு தமிழர்
களும் இலங்கையர் என்ற அடையா ளம் தொடர்பில்
இயல்பான ஒரு பகைமையைக் கொண்டுள்ளவர்கள்
என்ற அபிப்பிராயத்தை தெற்கில் வலுப்படுத்திக்
கொள்ள இயலுமாக இருக்கிறது. அதனால், வடக்கின்
நலன்களுக்காக மேற்கொள்ளப்படக்கூடிய எந்த
வொரு நடவடிக்கையும் சிங்கள பௌத்த தேசியவா
தத்தின் பெயரில் ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு அனு
கூலமான முறையில் திருப்பப்படும்.

வேறுபல கட்சிகளில் இருந்து ஐக்கிய மக்கள் சுதந்
திர முன்னணிக்குத் தாவிய பேர்வழிகள் தங்களது
அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒரு பொது
இணக்கப்பாட்டின் அடிப்படையில் மகிந்த ராஜபக்ஷ
வுடன் தங்களது நிலையையும் பிணைப்பையும்
வலுப்படுத்திக்கொண்டுள்ளார்கள். இந்தப் பின்புலத்
தில் நோக்குகையில், தனது சொந்த அரசியல் நலன்
களை மேம்படுத்துவதற்காக முரண்பாடான கோட்
பாடுகளைக் கொண்டவர்களுடன் ஏககாலத்தில்
சேர்ந்து செயற்படக்கூடிய ஆற்றல் கொண்ட ஒரு
பொதுவான அரசியல் தலைவராக ராஜபக்ஷவே
விளங்குகிறார் என்பது தெளிவாகத் தெரிகிறது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக ஐக்கிய தேசி
யக் கட்சிக்குள் கடுமையான விமர்சனங்கள் கிளம்பி
எதிர்ப்புகள் வலுவடைந்து கொண்டிருந்த சூழ்நி
லைக்கு மத்தியிலேயே அவர் கட்சியின் ஜனாதிபதி
வேட்பாளராக போட்டியிடப் போவதாகப் பிரகடனம்
செய்தார். மறுபுறத்தில் அடுத்த ஜனாதிபதித் தேர்த
லில் அவர் வெற்றிபெறக்கூடிய சாத்தியங்கள் குறித்து
சமுதாயத்தில் கடுமையான சந்தேகங்கள் வெளிப்
படுத்தப்படுகின்றன என்பதும் கவனிக்கத்தக்கது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை
ஒழிக்கப் போவதாக விக்கிரமசிங்க உறுதியளித்திருக்
கிறார். ஆனால், அந்த ஆட்சிமுறை ஒழிக்கப்படும்
பட்சத்தில் மாற்றாக கொண்டுவரப்படக்கூடிய ஆட்சி
முறை எதுவாக இருக்கும் என்பது பற்றி அவர் எது
வும் பேசாமல் இருப்பதையும் காணக்கூடியதாக
இருக்கிறது. வெஸ்ட்மினிஸ்டர் முறையை ஒத்த ஒரு
முறையே சிறந்த தெரிவாக இருக்கும் என்று அவர்
கூறுகிறார். ஆனால், அதேவேளை, அந்தப் பாராளு
மன்றத்தின் பிரதமர் வேறு ஒரு தேர்தலில் தெரிவு
செய்யப்படவேண்டும் என்றும் அவ்வாறானால்தான்
பாராளுமன்றத்துக்கும் மக்களுக்கும் பொறுப்புக்
கூறக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் கூறுகிறார்.
வேறுவார்த்தைகளில் கூறுவதானால், விக்கிரமசிங்க
கூறுகின்ற அரசியல் சீர்திருத்தம் அரசியலமைப்பில்
'ஜனாதிபதி' என்ற சொல்லுக்கு பதிலாக 'பிரதமர்'
என்ற சொல்லைப் பயன்படுத்துவதாகவும் அந்தப்
பதவியில் இன்றைய ஜனாதிபதிக்குரிய அதே எதேச்
சாதிகாரத் தன்மைகள் தொடர்ந்து பேணுவதற்கு வழி
சமைப்பதாகவுமே இருக்கிறது.

தனது அரசியல் கோட்பாட்டை சமூகத்தின் மத்தி
யில் ஆழமாக கொண்டு செல்வதற்கு மகிந்த ராஜ
பக்ஷ கடைப்பிடிக்கின்ற செயல்முறை பற்றி அறிந்து
கொள்வது முக்கியமானதாகும். இலங்கைத் தீவின்
குடிப்பரம்பல், இனக்குழுமங்களின் செறிவின் நில
அமைப்பொழுங்கு, இலங்கைக்கு எதிரான சர்வதேச
அபிப்பிராயம், அந்த சர்வதேச அபிப்பிராயத்துக்கு
எதிரான உள்நாட்டு அபிப்பிராயம் ஆகியவையே
ராஜபக்ஷ தங்கியிருக்கும் பிரதான காரணிகளாகும்.
நாட்டின் சனத்தொகையில் 74 சதவீதமானவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களவர்கள். அவர்களில் 70 சதவீதமானவர்கள் பௌத்தர்கள். எனவே, மிகவும் கிளர்ச்சியூட்டுகின்ற சிங்கள பௌத்த தேசியவாத சுலோகம் நாட்டு சனத் தொகையின் 75 சதவீதமானவர்களை திருப்திப் படுத்துவதையே இலக்காகக் கொண்டுள்ளது. இந்த சனத்தொகையே ராஜபக்ஷவின் பிரதான வாக்குவங் கியாகக் கருதப்படுகிறது.

மேற்கூறப்பட்ட சூழ்நிலைகளை அடிப்படையா கக் கொண்டு நோக்கும் போது, மகிந்த ராஜபக்ஷவை எதிர்த்து நிற்பதானால் இரு காரணிகளில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். இது மிகவும் முக்கியமான விடயமாகும். ஒன்று சிங்கள பௌத்த தேசியவாத மனப்போக்கை மாற்றியமைக்கும் நோக் குடன் தென்னிலங்கையில் செல்வாக்குமிக்க சமூக சக்திகளின் பரந்தளவிலான பங்குபற்றலுடன் விரிவா னதொரு சமூக-அரசியல் இயக்கத்தை அமைக்க வேண்டும். மற்றையது, புதிய அரசியல் சீர்திருத்தங் களும் புதிய அரசியல் கலாசாரமும் அறிமுகப்படுத் தப்படவேண்டும் என்பதுடன், அந்தச் சுலோகத்தை சமுதாயத்தின் அடிமட்டத்தில் இருந்து மேல் மட்டம் வரை எடுத்துச் செல்லக்கூடிய ஆற்றல் கொண்ட ஒரு தலைமைத்துவத்தை வளர்த்தெடுக்க வேண்டும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்தல், கண்ணியமான சமூகக் கட்டமைப்பை உரு வாக்குவதற்கான ஏற்பாடுகளுக்கு வகை செய்யக் கூடிய புதிய அரசியலமைப்புடனான பாராளுமன்ற ஜனநாயகமொன்றை நிறுவுதல் என்ற விடயங்களில் எதிரணி அரசியல் கட்சிகளில் பெரும்பான்மையா னவை ஒரேவிதமான கரத்தையே கொண்டுள்ளன. ஜனதாவிமுக்தி பெரமுனை (ஜே.வி.பி) 1982ஆம் ஆண்டில் இருந்தே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கான தொடர்ச்சியான ஒரு போராட்டத்தை முன்னெடுத்து வந்திருக்கிறது. தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் அபிப்பிராயமும் இதேமாதிரியானதாகவே இருக்கிறது. வண.மாதுளு வாவே சோபித தேரர் தலைமையில் புத்திஜீவிகளைக் கொண்ட நீதியான சமூகத்துக்கான மக்கள் இயக்கமும் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட வேண்டு மென்றே குரலெழுப்பிக் கொண்டிருக்கிறது.

தன்னை ஜனாதிபதி வேட்பாளர் என்று பிரகடனம் செய்ததன் மூலமாக விக்கிரமசிங்க கொள்கைகளுக் கும் தனக்குப் பின்னால் அணிதிரளுமாறு ஏனைய அரசியல் இயக்கங்களுக்கு மறைமுகமான அழை ப்பை விடுத்திருக்கிறார். இந்த அழைப்பை நிராகரிப் பதற்கு அல்லது அலட்சியம் செய்வதற்கு நூற்றுக் கணக்கான காரணங்கள் இருக்கின்றன. முதலாவ தாக, விக்கிரமசிங்கவின் யோசனைகள் ஏனையவர்க ளின் எதிர்பார்ப்புகளை திருப்திப்படுத்துவனவாக இல்லை. இரண்டாவது, தேர்தல் விஞ்ஞாபனத்தை யும் அக்கட்சியின் வேட்பாளரையும் ஏற்றுக்கொள்வ தென்பது பொதுவேட்பாளர் ஒருவருடன் பொது நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுவதற்குச் சமமா னதாக அமையாது. விக்கிரமசிங்கவின் பிரகடனம் தொடர்பில் ஜே.வி.பி. எடுத்திருக்கும் நிலைப்பாடு இதற்கு சிறந்த உதாரணமாகும். அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக விக்கிரமசிங்க போட்டியிடு வாரேயானால் தாங்களும் தனியாக வேட்பாளரைக் களமிறக்கப் போவதாக ஜே.வி.பி.யினர் அறிவித்தி ருக்கிறார்கள்.

தனது பிரகடனத்தின் மூலமாக விக்கிரமசிங்க, பொது இணக்கப்பாட்டின் அடிப்படையில் பொது வேட்பாளர் ஒருவரை ராஜபக்ஷவுக்கு எதிராக களமி றக்க வேண்டுமென்ற நோக்குடன் செயற்பட்டுக் கொண்டிருப்பவர்களின் அபிலாசைகளைப் பாழ் படுத்தி விட்டார் என்பதே ஜே.வி.பி.யின் குற்றச்சாட் டாகும். இதை அவர்கள் பகிரங்கத்தில் சொல்வதைத் தவிர்த்திருக்கின்ற போதிலும் கூட, அதன் வேட்பா ளரையும் ஜே.வி.பி. ஏற்றுக்கொள்ளுமேயானால், அவர்கள் தங்களின் கட்சியின் அடையாளத்தையும் அதன் அடிப்படைக் கோட்பாட்டையும் இழக்க வேண்டிய ஆபத்து இருக்கிறது. எனவே, ஜே.வி.பி. எடுத்த தீர்மானத்துக்காக அக்கட்சியை குறைகூறமுடி யாது.

அதேவேளை, விக்கிரமசிங்கவின் பிரகடனம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல் லது முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா வின் ஜனநாயகக் கட்சியோ அவற்றின் கருத்துகளை வெளியிடவில்லை. நீதியான சமூகத்துக்கான இயக்க மும் இதுவிடயத்தில் மௌனத்தையே சாதித்துக் கொண்டிருக்கிறது. அதனால், நாடு ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கின்ற விரிவான அரசியல் இணக்கப்பாட்டுடன் கூடிய பரந்தளவிலான அரசி யல் இயக்கமொன்றில் அல்ல, தனது கட்சியின் இயந் திரத்தின் மீதும், முக்கியஸ்தர்கள் மீதும் நம்பிக்கை வைத்தே விக்கிரமசிங்க அந்த முடிவுக்கு வந்தார் என் பதை விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்கிறது.


மகிந்த ராஜபக்ஷவைப் பொறுத்தவரை, தனது அர சியல் இலக்கை அடைவதற்காக முரண்பாடான அர சியல் கோட்பாடுகளுடனும் அரசியல் கட்சிகள் மற் றும் ஆட்சிகளுடனும் ஒன்றிணைந்து செயற்படுவதில் அவருக்கு இருக்கும் ஆற்றல் காரணமாக, தான் தலைமை தாங்குகின்ற கூட்டணியினதும் தன்னைத் தலைவராக ஏற்றுக்கொள்கிற ஆட்களினதும் 'பொது வேட்பாளராக' அவர் இப்போது வந்திருக்கிறார்

*(41ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் பாலாவுடன் எனது அனுபவங்கள்

இறுதியாக நான் அவரைச்சந்தித்த பொழுது இன்றைய உலகில் இளம் சந்ததியினர் மத்தியில் காணப்படக்கூடியதாக இருக்கின்ற தனிநபர் மேம்பாடு மீதான அதீத நாட்டம் சுயநலச்சிந்தனைகள் பற்றி பெரும் கவலையை தோழர் பாலா வெளியிட்டார்



இலங்கைக்கு வருகின்ற போதெல்லாம் கொழும்பு கொள்ளுப்பிட்டியில் உள்ள இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தின் (Ceylon mercantile Union) அலுவலகத்துக்குச் சென்று தோழர் பாலா தம்புவைச் சந்திப்பதை நான் ஒரு வழக்கமாக்கிக்கொண்டிருந்தேன். கடந்த ஜூலை மாதப் பிற்பகுதியில் எனது தாயார் மரணமடைந்ததையடுத்து இலங்கை வந்த நான் இறுதிக்கிரியைகள் முடிந்த பிறகு இரத்மலானையில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்று தோழர் பாலாவைச் சந்தித்தேன். எனக்காக வாயில் கதவை அவர் திறந்தபோது நலிந்த உடலுடன் என்றாலும் துடிப்பான ஒரு தோழரையே நான் கண்டேன். அவரது கண்களில் அந்த மனஉறுதியை என்னால் காணக்கூடியதாக இருந்தது. இடதுசாரிகள் ஒன்றுகூடும் போது பலவிடயங்களைத் தங்களுக்குள் ஆராய்வார்கள். தொழிற்சங்க இயக்கம், நவதாராளவாதம், சோசலிசம், இடதுசாரி இயக்கம், ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி), மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள், ஊழல் மோசடிகள், குடும்ப ஆட்சி என்று அந்த விடயங்கள் நீண்டு கொண்டே போகும். தோழர் பாலாவும் நானும் அவற்றைப் பற்றி நீண்ட நேரமாகப் பேசிக்கொண்டோம். வழமைபோன்றே அவரது பேச்சுக்கு ஒரு முடிவே இருக்கவில்லை. தனது வீட்டில் இருந்து காலிவீதி நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தபோது இடம்பெற்ற விபத்து பற்றியும் என்னிடம் கூறினார். மனித வாழ்வின் முடிவில் ஏற்படுகின்ற வலுவற்ற தன்மையை அவர் நன்கு விளங்கிக்கொண்டார் போல எனக்குத் தோன்றியது. அதுவே எமது கலந்துரையாடலில் அப்போது புதிய விடயமாக இருந்தது.

தனது பழைய வீட்டிலேயே அவர் தனியாக வாழ்ந்து கொண்டிருந்தார். எங்குமே பழையதும் புதியதுமாக புத்தகங்கள் தூசு படிந்த நிலையில் காணப்பட்டன. தோழர் பாலாவின் காலஞ்சென்ற மனைவி மே விக்கிரமசூரியாவின் படமொன்று சுவரில் தொங்கிக்கொண்டிருந்தது. இன்று உலகில் இளஞ்சந்ததியினர் மத்தியில் காணப்படக்கூடியதாக இருக்கின்ற தனிநபர் மேம்பாடு மீதான அதீத நாட்டம், சுயநலச் சிந்தனை பற்றி அவர் பெரும் கவலை கொண்டிருந்தார். தனது தனிப்பட்ட அனுபவங்களையும் நினைவுமீட்டிச் சொல்லிக் கொண்டிருந்தார். தனது வாழ்க்கை



லயனல் போபகே

அனுபவங்களை ஒரு சரிதையாக தொகுக்கின்ற பணிகளிலும் அவர் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். தனக்கே யுரித்தான வழியில் நேர்மைக்காக வும் நீதிக்காகவும் போராடிக் கொண் டிருந்த ஒரு தோழர் மீது எனக்கு இருக்கின்ற மதிப்பையும் நன்றியுணர் வையும் பாராட்டுதலையும் வெளிக் காட்டுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்த தற்காக நான் சந்தோசப்படுகின்றேன்.

இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத் தின் பொதுச் செயலாளராக தோழர் பாலா சுமார் 66 வருடங்களாக பணி யாற்றினார். 1940களில் ஒரு தொழிற் சங்கவாதியாக தனது போராட்ட வாழ்க்கையை ஆரம்பித்த தோழர் பாலா பிறகு ஒரு புரட்சிகர சமசமாஜி யாக, (1964ஆம் ஆண்டு லங்கா சம சமாஜக் கட்சியில் இருந்து வெளி யேறி புரட்சிகர மார்க்சிஸ்ட் கட்சியை ஆரம்பித்தார்), பாரம்பரிய இடதுசாரி நிபந்தனைகளையும் சூழ்நிலை களையும் கொண்டிருப்பதற்கான அத் தொழிலாளர்களின் உரிமையைப் பாதுகாப்பதிலேயே தனது வாழ்நா ளில் பெரும்பகுதியை தோழர் பாலா அர்ப்பணித்தார்.

1982 ஒக்டோபரில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் பிறகு அதே வருடம் டிசம்பரில் நடைபெற்ற சர்வஜன வாக்கெடுப்பிலும் ஏற்பட்ட தோல்விகளையடுத்து 1983 ஆம் ஆண்டில் தோழர் பாலா கூறிய வார்த் தைகளை நான் எப்போதும் நினை த்துப் பார்ப்பதுண்டு, வரலாற்றை நான் அலைகளாகப் பார்க்கிறேன். இதுவரையில் நாம் பின்னோக்கிச் செல்கின்ற அலைகளிலேயே இருந்து வந்திருக்கிறோம். ஆனால், ஜெயவர் தன ஆட்சியின் இருள் நிறைந்த- அடக்குமுறைச் சூழ்நிலையிலும் கூட, எதிர்ப்படுகின்ற கொடுங் கோண்மைச்சக்திகள் சகலவற்றையும் விரைவில் தகர்த்துவிடக்கூடிய முன் னோக்கிய அலைகளை என்னால் காணக்கூடியதாக இருக்கிறது'. இதுவே அவர் கூறியதாகும். தற்போ தைய சமூக, பொருளாதார மற்றும் அரசியல் பின்புலத்திலும், முன்னறி தன்மையுடைய இந்த வார்த்தைகள் உண்மையானவை என்று நான் நம்பு கிறேன். தோழர் பாலா தனது வாழ்க் கைக் கதையையும் எங்களுக்குச் சொல்வது வழக்கமாகும். நேர்மையி லும் நீதியிலும் பற்றுறுதி கொண்ட தனது இயல்பான சுபாவமே தொழி லாளர் வர்க்கப் போராட்டப் பாதை யில் தன்னைப் பயணிக்க வைத்தது என்று அவர் நம்பினார். தோழர் பாலாவின் இன அடையாளத்தை காரணம் காட்டி அவருக்கு இந்தியா வில் பிரபலமான ஆங்கிலப் பாடசா லையொன்றில் அனுமதி மறுக்கப்பட் டது. இச்சம்பவம் அவரின் வாழ்வில் ஏற்படுத்திய தாக்கமே அவரை அன் றைய காலகட்டத்தில் இடம்பெற்ற காலனித்துவ எதிர்ப்புப் போராட்டத் துக்கு உறுதியான ஆதரவை வழங்க வைத்தது.

இலங்கை அரசியல் அரங்கில் தோழர் பாலா வகித்த மிகவும் முக்கி யத்துவம் வாய்ந்த, பேராற்றல்வா ய்ந்த பாத்திரத்தை சமூகத்தில் உள்ள சகல இடதுசாரி மற்றும் முற்போக்கு சக்திகள் மாத்திரமல்ல, மக்கள் ஜனநா யகத்தில் நம்பிக்கைகொண்ட சகல ரும் கூட மனமாரப் பாராட்டி மதிப் பர் என்பதில் சந்தேகமில்லை. ஜே.வி.பி.யின் முன்னாள் உறுப்பினர் என்ற வகையில் தோழர் பாலாவுட னான எனது அனுபவங்களை மாத் திரம் நினைவுபடுத்துவதுடன் கருத்து களை இங்கு மட்டுப்படுத்திக்கொள் கிறேன். ஜே.வி.பி. ஒரு தலைமறைவு இயக்கமாகச் செயற்படத் தொடங் கிய அதன் ஆரம்பகட்டங்களில் அதற்கு விமர்சன ரீதியான ஆதரவை வெளிக்காட்டிய முதல் குழுக்களில் தோழர் பாலா தலைமையிலான புரட் சிகர மார்க்சிஸ்ட்கட்சி ஒன்றாகும்.

1970ஆம் ஆண்டு தோழர் ரோஹன விஜேவீர அரசினால் சிறை யில் அடைக்கப்பட்டிருந்த போது அவரின் சார்பில் லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த ஆனந்த பிரேமசி ங்கவும் மார்ஷால் பெரேராவும் ஆஜ ரான சந்தர்ப்பங்களே சமசமாஜிகளில் புரட்சிகரமான போக்குக்கொண்டவர் களுடனான ஜே.வி.பி.யின் முதல் ஊடாட்டமாக அமைந்தது. அவர்கள் ரொட்ஸ்கியவாத அரசியல் போக் கைக் கொண்டவர்களாகவும் நாம் ஸ்ராலினிச, மாஓவாத அரசியல் போக்குகளைக் கொண்டவர்களாக வும் இருந்த போதிலும், அரசின் அடக்குமுறையை எதிர்க்கின்ற விட யத்தில் அந்த வேறுபாடுகள் பொருட்

> “ ஜே.வி.பி. ஒரு தலைமறைவு இயக்கமாக செயற் படத் தொடங்கிய ஆரம்பகட்டங்களில் அதற்கு விமர்சன ரீதியான ஆதரவை வெளிக்காட்டிய முதல் குழுக்களில் தோழர் பாலா தலைமையிலான புரட்சிகர மார்க்சிஸ்ட் கட்சி ஒன்றாகும். ஜே.வி.பி. யின் தலைவர்களும் தொண்டர்களும் சட்ட விரோ தமாக தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டதை ஆட்சேபித்து தோழர் பாலாவும் வர்த்தக ஊழியர் சங்கத்தினரும் தங்களது எதிர்ப்பை துணிச்சலு டன் வெளிக்காட்டினார்கள் ”

கள் இழைத்த வர்க்கத் துரோகத்துக்கு எதிராக சளைக்காத ஒரு போராளி யாக, மனித உரிமைகள் போராளி யாக இறுதிவரை அர்ப்பணிப்புச் சிந்தையுடன் தொடர்ந்தார். அரசி னால் வழக்குத் தொடரப்பட்ட ஜே.வி.பி. உறுப்பினர்கள் போன்ற அரசியல் செயற்பாட்டாளர்களுக்கு உதவுவதற்காக பிரதிபலனை எதிர்பா ராது பெருந்தன்மையுடன் தனது நேரத்தைச் செலவிட்டார். அவரது பிரதான நடவடிக்கைகள் நகர்ப்புறத் தொழிலாளர்கள் மத்தியிலேயே அமைந்தன. கண்ணியமான வேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தப்படவில்லை. நாம் அக்கறைப் படுவதற்கு பொதுவான அம்சங்கள் இருந்தன. அதாவது, அரசியல் கருத்துகளை சுதந்திரமாக வெளிப்படுத்துவதற்கு எமக்கு இருக்கின்ற ஜனநாயக உரிமைகளுக்கு ஆளும் வர்க்கத்திடமிருந்து வந்த ஆபத்தே அதுவாகும்.

ஜே.வி.பி.யின் தலைவர்களும் தொண்டர்களும் சட்டவிரோதமாக தொடர்ந்து தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்ததை ஆட்சேபித்து தோழர் பாலாவும் புரட்சிகர மார்க்சிஸ்ட் கட்சியும் வர்த்தக ஊழியர் சங்கமும் இடையறாது எதிர்ப்பை வெளிக்காட்டினார்கள். ஜே.வி.பி. செயற்பாட்டாளர்களில் சிலரின் சார்பில் நீதிமன்றங்களில் ஆஜரானதன் மூலமாக, அவர்கள் அரசியல் கருத்துகளை வெளிப்படுத்துவதற்கு ஜே.வி.பி.க்கு இருக்கின்ற ஜனநாயக உரிமைகளை பாதுகாத்தார்கள். சுமார் 4 ஆயிரம் ஜே.வி.பி. செயற்பாட்டாளர்கள் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டதை எதிர்த்து வர்த்தக ஊழியர் சங்கம் ஆர்ப்பாட்டம் செய்தது. அந்தச் செயற்பாட்டாளர்களில் பலர் பாதுகாப்புப் படைகளினால் படுமோசமான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டார்கள். 1971 மார்ச்சில் பிரகடனம் செய்யப்பட்ட அவசரகால நிலையையும் வர்த்தக ஊழியர் சங்கம் எதிர்த்தது. பிரேதப் பரிசோதனை செய்யாமல் சடலங்களை தகனம் செய்வதற்கு அல்லது புதைப்பதற்கு அந்த அவசரகாலச் சட்டம் பாதுகாப்புப் படைகளுக்கு அதிகாரமளித்தது.

1970களில் நாம் சிறையில் இருந்த போது தோழர் பாலாவும் வேறுபலரும் சேர்ந்து மனித மற்றும் ஜனநாயக உரிமைகள் அமைப்பொன்றைத் தோற்றுவித்து எமது விடுதலைக்காகப் போராட்டங்களை முன்னெடுத்தார்கள். தோழர் பாலாவுக்கு மார்க்சியத்திலும் சட்டத்துறையிலும் இருந்த சிறப்பு வாய்ந்த அறிவும் விளக்கப்பாடும் 1971 ஆம் ஆண்டிலும் 1972 ஆம் ஆண்டிலும் குற்றவியல் நீதி விசாரணை ஆணைக்குழுவின் (Criminal Justice Commission) விசாரணைகளுக்கு இன்னொரு பரிமாணத்தைச் சேர்த்தன. அந்த விசாரணைகளில் தோழர் பாலா முன்வைத்த வாதங்களின் மூலமாக 1971 ஏப்ரில் கிளர்ச்சியின் முழுமையான வர்க்க ரீதியான நோக்கு முழு உலகிற்கும் புலப்படுத்தப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்து லங்கா சமசமாஜக்கட்சியும் கம்யூனிஸ்ட்கட்சியும் கூட்டுச் சேர்ந்து அமைத்திருந்த ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஜே.வி.பி. யை ஒரு கொலைகாரப் பயங்கரவாதக் கும்பல் என்று உலகிற்கு காண்பிக்க கீழ்த்தரமான முறையில் முயற்சித்துக் கொண்டிருந்த வேளையில், தோழர் பாலாவினதும் அவரது குழுவினரினதும் உதவியுடன் அந்தக் குற்றச் சாட்டுகளையெல்லாம் நாம் ஆணித்தரமாக மறுதலிக்கக்கூடியதாக இருந்தது. ஜே.வி.பி. இளைஞர்களைப் பாதுகாப்பதில் தன்னை அர்ப்பணித்த தோழி மே விக்கிரமசூரியவைப் பற்றிக் குறிப்பிடாவிட்டால் நான் எனது கடமையிலிருந்து தவறியவனாவேன். தனது கணவர் தோழர் பாலாவுக்கு முழு நேரமும் இதுவிடயத்தில் உறுதுணையாக மனைவியார் செயற்பட்டார்.

1977 நவம்பரில் ஜே.வி.பி. தலைவர்கள் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்ட போது, நாம் போவதற்கு ஒரேயொரு உறைவிடமே இருந்தது. கொள்ளுப்பிட்டியில் உள்ள வர்த்தக ஊழியர் சங்கத்தின் அலுவலகமே அது. அந்த மகிழ்ச்சிகரமான நாளில் வர்த்தக ஊழியர் சங்கத்தின் பல தோழர்களை நாம் சந்தித்ததுடன், சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் எமது முதலாவது செய்தியாளர் மகாநாட்டையும் நடத்தினோம். அதையடுத்தே நாம் 1977க்குப்பின்னரான ஜே.வி.பி.யின் அரசியல் பயணத்தை ஆரம்பித்தோம். இடதுசாரி இயக்கத்திற்குள் இருக்கக்கூடிய சுபட்டுப்போன மரங்கள்' புதியதளிர்கள் செழித்துவளர்வதற்கு விட்டுக்கொடுக்க வேண்டிய தேவைபற்றி 1970களில் நாம் நடத்திய நீண்ட அரசியல் கலந்துரையா


மனைவி மே விக்கிரமசூரியாவுடன் தோழர் பாலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டல்களின் போது தோழர் பாலா அடிக்கடி கூறுவார். 1977ஆம் ஆண்டு ஐக்கிய செம் மே தினப் பேரணி நடத்தப்பட்ட போது இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத் துக்கும் ஜே.வி.பி.க்கும் இடையே யான அரசியல் ஒத்துழைப்பை தெளி வாகக் காணக்கூடியதாக இருந்தது.

மக்களின் மனித உரிமைகள் அல் லது ஜனநாயக உரிமைகளுக்கு அச்சு றுத்தல் ஏற்பட்ட வேளைகளில் அல் லது மீறப்பட்ட வேளைகளில் எல் லாம் தோழர் பாலா முன்னரங்கத்தில் நின்று அந்த நிலைவரங்களின் பாரதூ ரத்தன்மை குறித்து மக்களுக்கு விளக் கமளித்து, அத்தகைய மீறல்கள் முடி வுக்குக் கொண்டுவரப்பட வேண்டு மென்று உணர்ச்சி வேகத்துடன் கோரிக்கை விடுத்து போராட்ட இயக் கத்தை முன்னெடுத்தார். தோழர் பாலாவும் வர்த்தக ஊழியர் சங்கமும் இன, மொழி மற்றும் மத வேறுபாடுக ளுக்கு அப்பால் சகல உழைக்கும் மக் களினதும் ஒடுக்கப்பட்ட மக்களின தும் கொள்கைப்பற்றுள்ள போராளி களாக விளங்கினார்கள். இன, மொழி மற்றும் மத அடிப்படையில் மக்களை நேர்மையற்ற முறையில் பாரபட்ச மாக நடத்தும் அரசாங்கத்தின் கொள் கைகளை கர்ணகடூர மாக எதிர்த்த புரட்சிகர மார்க்சிஸ்ட் கட்சியும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கமும் தேசிய இனப்பிரச்சினைக்கான நீதி யான தீர்வாக தமிழ் பேசும் மக்களு க்கு பிராந்திய சுயாட்சி வழங்கப் படவேண்டும் என்று குரல் கொடுத் தன. இன மோதலில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினராலும் செய்யப்பட்ட கொலைகளை தோழர் பாலாவும் வர்த்தக ஊழியர்சங்கமும் இடைய றாது கண்டனம் செய்து வந்தனர். கிளர்ச்சிகள் அதிகரிப்பதற்கும் அர சாங்கத்துக்கு எதிரான செயற்பாடு கள் தீவிரமடைவதற்கும் தேசிய ஐக் கியம் சீர்குலைவதற்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் எவ்வாறு பங்களிப்புச் செய்தன என்பதையும் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

தனது முன்னாள் சகாக்களில் பலர் ஆளும் வர்க்கத்தின் அணியில் சேர்ந்து விட்டபோதிலும் கூட, தோழர் பாலா தனது இடதுசாரி இலட்சியவாத நம்பகத்தன்மையைத் தொடர்ந்து உறுதியுடன் பேணிவந் தார். பல தேசிய அரசியல் விவகாரங் கள் தொடர்பில் நீதியானதும் நேர்மை யானதுமான நிலைப்பாடுகளை வர்த்தக ஊழியர் சங்கம் எடுப்பதற்கு வழிகாட்டும் சக்தியாக அவர் விள ங்கி வந்தார். மனவுறுதி கொண்ட புரட்சிவாதி என்ற வகையில் அவர் சமரசத்துக்கு இடந்தராத வர்க்க நிலைப்பாடுகளில் இருந்து ஒரு போதும் தடுமாறியதில்லை. வர்த்தக ஊழியர் சங்கத்தை மீளக் கட்டி யெழுப்பி, நாடு எதிர்நோக்குகின்ற பெருவாரியான பிரச்சினைகளை மனந்திறந்து வெளிப்படையாகவும் முற்றுமுழுதான நேர்மையுடனும் நாம் விவாதிப்பதே தோழர் பாலா வின் புரட்சிகரச் சிந்தனைகளுக்கும் இலட்சியங்களுக்கும் மதிப்பளிப்ப தற்கான சிறந்த வழியாகும். வர்த்தக

“1977 நவம்பரில் ஜே.வி.பி. தலைவர்கள் சிறை யிலிருந்து விடுதலை செய்யப்பட்டபோது நாம் போவதற்கு ஒரேயொரு உறைவிடமே இருந்தது. கொள்ளுப்பிட்டியிலுள்ள வர்த்தக ஊழியர் சங்கத்தின் அலுவலகமே அது. அந்த மகிழ்ச்சி கரமான நாளில் சங்கத்தின் தலைமையகத்தில் எமது முதலாவது செய்தியாளர் மகாநாட்டை நடத்தி 1977க்குப் பின்னரான ஜே.வி.பி.யின் அரசியல் பயணத்தை ஆரம்பித்தோம்”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியர் சங்கம் அதன் அன்றாட போராட்டங்களில் வெற்றி பெறுவதற்கு வழிகாட்டக்கூடிய தலைவர்களை உருவாக்க வேண்டியிருக்கிறது. அவ்வாறு உருவாக்கப்படக்கூடிய தலைவர்கள் அந்தச் சங்கம் அதன் தொடக்கத்தில் இருந்தே போற்றிப் பேணிக்காத்த ஜனநாயக ரீதியானதும் நியாயபூர்வமானதுமான பாரம்பரியங்களை உறுதியாகக் கடைப்பிடிக்கக் கூடியவர்களாக இருப்பதும் அவசியம். வர்த்தக ஊழியர் சங்கம் தொழிற்சங்கங்களின் சுயாதீனத்துக்காகப் போராடியதுடன் பூர்ஷுவாக்களின் விருப்பு வெறுப்புகளுக்கு தொழிலாளர்களை அடிபணியவைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய எந்தவொரு முயற்சிக்கும் எதிராக அவர்களை அணிதிரட்டிய ஒரு இயக்கமாகும். தொழிலாளர்வர்க்க இயக்கம் தொழிலாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்பதற்காகவும் அவர்கள் போராடினார்கள். வர்த்தக ஊழியர் சங்கம் சுயாதீனமாகச் செயற்பட்டது. இப்போதும் அவ்வாறே செயற்படுகிறது. அதனால் கருத்துகளை அச்சமின்றி வெளிப்படுத்தவும் மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக உரிமைகள் மீறல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கூடியதாகவும் இருந்தது. வர்த்தக ஊழியர் சங்கத்தின் வலிமை அதன் உறுப்பினர்களிலும் அவர்களின் தரமிக்க தலைமைத்துவத்திலும் தொடர்ந்தும் தங்கியிருக்கும்.

1970களிலும் 1980களிலும் ஜே.வி.பி.யில் இருந்தவர்களும் நீதிக்கும் நேர்மைக்குமாக இன்று வரையும் தொடர் ந்து பாடுபட்டுக்கொண்டிருக்கின்றவர்களும் தோழர் பாலாவுக்கு எமது புரட்சிகர வணக்கத்தையும் தோழமையுடனான ஆழமான மதிப்பையும் நன்றியுணர்வையும் தெரிவிப்பதில் என்னுடன் இணைந்து கொள்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. அரசியல் மற்றும் தொழிற்சங்க வரலாற்றில் தான் முன்னெடுத்த முன்னுதாரணமான பணிகளின் மூலமாக தோழர் பாலா ஐக்கியப்பட்டு கட்டுறுதியாக செயற்படக்கூடிய தொழிலாளர் வர்க்கத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தினார்.

போரின் முடிவுக்குப் பின்னரான இலங்கையின் வரலாற்றில் தோழர் பாலாவும் அவரின் ஆற்றல் மிகு தலைமைத்துவத்தின் கீழ் இயங்கிய வர்த்தக ஊழியர் சங்கத்தின் உறுப்பினர்களும் வகித்திருக்கக்கூடிய நேர்மறையான பாத்திரத்துக்காகவும் 1970 களில் நாம் சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் இருந்தபோது எமக்கு மிகவும் தேவைப்பட்ட உதவிகளை மானசீகமாகவும் நேர்மையாகவும் வழங்கியமைக்காகவும் எமது புரட்சிகர வணக்கத்தையும் தோழமையுடனான அரசியல் மற்றும் தனிப்பட்ட நன்றியறிதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

"தோழர் பாலா..... இலங்கையில் உழைக்கும் மக்களுக்காக நீங்கள் ஆற்றிய தோழமையுடனான சேவைகள் ஒருபோதும் மறக்கப்படமாட்டாது. உழைக்கும் மக்களின் இலட்சியங்கள் மீதான உங்கள் அர்ப்பணிப்பு, விசுவாசம் மற்றும் ஈடுபாடு ஆகியவை எங்களது இதயங்களில் என்றென்றைக்கும் உறைந்திருந்து, உங்களது முன்னுதாரணமான வாழ்வின் ஊடாக நீங்கள் வகுத்த பாதையில் நாம் செல்வதற்கு எமக்கு உற்சாகத்தை தந்து கொண்டேயிருக்கும்''. ■

***(லயனல் போபகே, ஜே.வி.பி.யின் முன்னாள் பொதுச் செயலாளர் 1971 ஏப்ரில் கிளர்ச்சிக்குப் பிறகு நடைபெற்ற குற்றவியல் நீதிவிசாரணை ஆணைக்குழு விசாரணைகளில் இரண்டாவது பிரதிவாதி. தற்போது அவுஸ்திரேலியாவில் வசிக்கிறார்)***

---

***(38ஆம் பக்கத்தொடர்ச்சி...)***

என்னவென்றால், இந்த இஸ்லாமிய 'வைரஸினால்' இந்திய முஸ்லிம்கள் பாதிக்கப்படாமல் இருந்தமையாகும். குவாண்டனாமோ தடுப்பு முகாமில் அமெரிக்கப்படைகளினால் அமெரி க்கா, அவுஸ்திரேலியா, ஜேர்மனி, ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம்களை தீவிரவாதச் சந்தேக நபர்கள் என்ற பெயரில் தடுத்து வைத்திருக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால், அந்தத் தடுப்பு முகாமில் இருக்கும் கைதிகளில் இதுவரையில் ஒரு இந்திய முஸ்லிமைக் கூட காணக்கூடியதாக இருக்கவில்லை. சிரியாவில்கூட, ஜிஹாத் இயக்கத்தில் 100 இந்தியர்கள் இணைந்திருப்பதாக அண்மைய செய்திகள் தெரிவித்தன. ஆனால், மும்பையின் கல்யாண் நகரைச்சேர்ந்த நான்கு இளைஞர்கள் பற்றியே நேரடிச்சான்றுகள் கிடைத்திருக்கின்றன. ஆனால், அவர்கள் எவ்வாறு சிரியாவைச் சென்றடைந்தார்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லை. எந்த வகையில் நோக்கினாலும், இந்திய முஸ்லிம்கள் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய பயங்கரவாதச் செயல்கள் சகலவற்றையும் கருத்தில் எடுத்துப் பார்க்கும் போது, இந்தியாவின் முஸ்லிம் சனத்தொகையின் அளவுடன் ஒப்பிடும் போது அந்த எண்ணிக்கை புள்ளிவிபர அடிப்படையில் புறக்கணிக்கத்தக்கதாகும். இந்தப் பயங்கரவாதச் செயல்களில் சில சம்பவங்கள் பாகிஸ்தானின் உளவு சேவையான ஐ.எஸ்.ஐ.எஸ்.யின் தூண்டுதலில் மேற்கொள்ளப்பட்டவையாகும். அதன் விளைவாக இந்தியாவில் முஸ்லிம்கள் இனவாத வன்முறையை எதிர்நோக்கினர் என்பது முக்கியமாகக் கவனத்திற்கொள்ளப்பட வேண்டியதாகும்.

அதனால் ஐ.எஸ்.ஐ. லஷ்கர்-ஈ-தய்பா அல்லது இந்தியா முஜாஹிதீன் போன்று அல்-கயெடாவினால் இந்தியாவில் வெற்றிகரமாகச் செயற்பாடுகளை முன்னெடுப்பது சாத்தியமில்லை.

ஏனென்றால், இந்திய முஸ்லிம்கள் மதச்சார்பற்ற ஜனநாயகமொன்றில் திருப்திகரமாக வாழ்கிறார்கள். சவாஹிரியும் கூட இதை விளங்கிக்கொள்வார். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெளியுறவு விவகாரத்தில் மோடிக்கு முக்கியமானதாக அமையும் செப்டெம்பர்

இந்திய பிரதமர் நரேந்திரமோடியின் வெளியுறவுக் கொள்கையைப் பொறுத்தவரை, செப்டெம்பர் மாதம் முக்கியமானதொன்றாக இருக்கிறது. சீன ஜனாதிபதி சி ஜின் பிங்குடனும் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுடனுமான மோடியின் சந்திப்புகளே இதற்குக் காரணம். உலகின் அதிமுக்கியமான இவ்விரு தலைவர்களும் மோடியையும் அவர் மூலமாக இந்தியாவையும் தங்கள் பக்கம் இழுக்க விரும்புகிறார்கள். இம்மாத ஆரம்பத்தில் அவுஸ்திரேலிய பிரதமர் ரொனி அபொட்டுடன் மோடி புதுடில்லியில் மிகவும் வெற்றிகரமான பேச்சுவார்த்தையை நடத்தியிருந்தார்.

சீனஜனாதிபதி செப்டெம்பர் 17 தொடக்கம் 19 வரை இந்தியாவில் விஜயம் மேற்கொண்டிருந்தார். சி ஜின் பிங்கிற்கும் மோடிக்கும் இடையிலான முதற் சந்திப்பு இதுவல்ல. அவர்கள் இருவரும் கடந்த ஜூலையில் பிரேசில் நாட்டில் நடைபெற்ற 'பிரிக்ஸ்' (BRICS) உச்சி மகாநாட்டில் கலந்து கொள்ளச் சென்ற வேளையில் அங்கு சந்தித்துக் கொண்டார்கள். மோடி பிரதமராகப் பதவியேற்று ஒருமாதத்துக்கும் சற்று கூடுதலான காலத்துக்குப் பிறகு அச்சந்திப்பு இடம்பெற்றது. பல்வேறு விவகாரங்கள் குறித்து மனந்திறந்த பேச்சுவார்த்தைகளை நடத்திய அவர்கள் மேலும் அவற்றை முன்னெடுப்பதென்று உறுதி பூண்டார்கள்.

இந்தப் பின்புலத்திலேயே சி ஜின்பிங் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசிய கண்டத்தின் புவிசார் அரசியலை வடிவமைக்கப்போகின்ற இரு பெரிய நாடுகளான இந்தியாவினதும் சீனாவினதும் வரலாற்றில் ஜனாதிபதி சி ஜின்பிங்கின் டில்லி விஜயம் ஒரு மைல்கல்லாகும்.**



# டில்லி டயரி



எம்.பி.வித்தியாதரன்

முக்கியத்துவம் பெற்றதாக அமைந்தது. அத்துடன் அவர் டில்லியில் நடத்திய பேச்சுவார்த்தைகள் இந்தியாவுக்கும் எமது பிராந்தியத்துக் கும் மாத்திரமல்ல, முழு உலகிற்குமே முக்கியமான விளைவுகளைக் கொண்டுவரும் என்பதிற் சந்தேகமில்லை. சி ஜின் பிங் இந்தியாவுக்கு மாத்திரமே விஜயம் செய்தார். பாகிஸ்தானில் தற்போது நிலவுகின்ற அரசியல் நெருக்கடி காரணமாக அந்த நாட்டுக்கான விஜய த்தை அவர் ரத்துச் செய்தார். அதன் காரணமாக இந்தியாவுக்கான அவரது விஜயம் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் சுமுகமானதாக அமைந்தது எனலாம்.

சீன ஜனாதிபதியின் இந்திய விஜயத்தை இருநாடுகளுமே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதின. இந்த விஜயத்துக்கான முன்னேற்பாடுகளைச் செய்வதற்காக இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவால் பெய்ஜிங்கிற்குச் சென்றிருந்தார்.

ஆசிய கண்டத் தின் புவிசார் அரசியலை வடிவமைக்கப்போகின்ற இரு பெரிய நாடுகளினதும் வரலாற்றில் சி ஜின் பிங்கின் டில்லி விஜயம் ஒரு மைல்கல்லாக அமைந்தது என்றால் மிகையில்லை.

இந்தியாவின் முதல் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் நிருவாகத்தின் கீழ் 1960களின் ஆரம்பத்தில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான உறவுகள் தடம் புரண்டுபோனதற்குப் பிறகு 1988 இல் அவரது பேரனான ராஜீவ் காந்தியின் ஆட்சியின் கீழ் மீண்டும் சரியான தடத்தில் அந்த உறவுகள் கொண்டுவரப்பட்டன என்ற போதிலும் அடல் பிஹாரி வாஜ்பாய் தலைமையிலான முன்னைய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கம் உண்மையில் சீனாவுடன் நல்லுறவுகளைக் கொண்டிருந்தது. மொரார்ஜி தேசாய் தலைமையிலான ஜனதா அரசாங்கத்தில் வெளியுறவு அமைச்சராக இருந்த வாஜ்பாய் தான் நேருவுக்குப் பிறகு சீனாவுக்கு முதலில் நேசக்கரத்தை நீட்டியவர்.

ராஜீவ் காந்தி போவதற்கு சுமார் ஒரு தசாப்தம் முன்னதாகவே வாஜ்பாய் பெய்ஜிங்கிற்கு விஜயம் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோடியின் ஜப்பானிய விஜயம்

சீனாவுடன் பல தகராறுகளைக் கொண்டிருக்கும் ஒரு நாடான ஜப்பானுக்கு பிரதமர் மோடி கடந்த மாத இறுதியில் மிகவும் வெற்றிகரமான தொரு விஜயத்தை மேற்கொண்டிருந்தார். அங்கு ஜப்பானிய பிரதமர் ஷின்சோ அபே இராஜதந்திர நடைமுறைகளை ஒதுக்கிவைத்துவிட்டு, டோக்கியோவில் உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைகள் தொடங்குவதற்கு முன்னதாகவே கியோட்டோ நகரில் மோடியுடன் காணப்பட்டார். இரு தலைவர்களுக்கும் இடையே மிகவும் நெருக்கமான உறவுகள் இருக்கின்றன என்பதை புகைப்படங்கள் வெளிக்காட்டின. மோடி இந்தியாவின் பிரதமராவதற்கு முன்னதாகவே, குஜராத் மாநில முதலமைச்சராக இருந்த காலத்திலேயே அவருக்கும் ஜப்பானிய பிரதமருக்கும் இடையே நல்லுறவுகள் இருந்தன. பாரம்பரிய நகரான கியோட்டோவில் மோடியுடன் அபே பல இடங்களுக்கும் கூடச் சென்றார். தனது தொகுதியான வாரணாசியை இந்துக்களுக்கான ஒரு முக்கியமான யாத்திரைத்தலமாக (கியோட்டோவின் பாணியில்) அபிவிருத்தி செய்வதில் மோடி அக்கறை கொண்டிருக்கிறார். டோக்கியோவில் நடத்திய உச்சசந்திப்புக்குப் பிறகு கேந்திர முக்கியத்துவ கூட்டுப்பங்காண்மையை மேலும் வலுப்படுத்துவதற்கு மோடியும் அபேயும் கூட்டுப் பிரகடனம் ஒன்றில் கைச்சாத்திட்டனர்.

இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான உறவுகள் மகத்தான ஆற்றலைக் கொண்டிருக்கிறது என்று நான் எப்போதும் கூறி வந்திருக்கிறேன். மோடியுடன் நெருக்கமாகச் செயற்பட்டு, சகலதுறைகளிலும் உறவுகளை மேம்படுத்துவதன் மூலமாக எமது இருதரப்பு உறவுகளை விசேட கேந்திரமுக்கியத்துவமுடைய உலகளாவிய கூட்டுப்பங்காண்மையாக உயர்த்த விரும்புகிறேன் என்று கூட்டுப் பிரகடனத்தில் கைச்சாத்திட்ட பிறகு மோடியுடன் இணைந்து நடத்திய செய்தியாளர் மகாநாட்டில் ஷின்சோ அபே கூறினார்.

தனது ஜப்பானிய விஜயம், இரு நாடுகளுக்கும் இடையிலான பரஸ்பர நம்பிக்கையையும் உறவுகளின் ஆழத்தையும் வெளிச்சம் போட்டுக்காட்டியிருப்பதாக பிரதமர் மோடி கூறினார். எமது வெளியுறவுக் கொள்கையில் ஜப்பான் மிகவும் உயர்ந்த இடத்தில் இருக்கிறது. இந்தியாவின் வளர்ச்சியில் ஜப்பான் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பைச் செய்திருப்பதே இதற்குக் காரணமாகும் என்றும் மோடி குறிப்பிட்டார், விஸ்தரிப்புவாத நோக்கத்துடன் சில நாடுகள் மேற்கொள்கின்ற நகர்வுகள் பற்றியும் கூட இந்தியப் பிரதமர் கூறினார். இது ஜப்பானின் பிராந்தியங்கள் சிலவற்றுக்கு சீனா உரிமை கோருவது பற்றிய ஒரு மறைமுக குறிப்பு என்பதிற் சந்தேகமில்லை. இக்கூற்று ஜப்பானியர்களை சந்தோசப்படுத்திய அதே வேளை சீனர்களுக்கு எரிச்சலைக் கொடுத்தது.

## அமெரிக்காவுடனான உறவுகள்

தனது வெளியுறவுக் கொள்கையில் பிரதமர் மோடி சீனாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே எவ்வாறு சமநிலையைப் பேணப்போகின்றார் என்பது முக்கியமானதொரு கேள்வியாகும். 2002 குஜராத் கலவரங்கள் காரணமாக தனக்கு அமெரிக்கா விசா வழங்க மறுத்ததால் வாஷிங்டனிடமிருந்து விலகிச் செல்லும் ஒரு கொள்கையை மோடி பின்பற்றுவதில் நாட்டம் காட்டக்கூடும் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அவர் மிகுந்த மதிநுட்பமுடைய ஒரு தலைவர். டில்லியில் அதிகாரத்துக்கு வந்த பிறகு அவர் அத்தகைய கொள்கையெதையும் கடைப்பிடிப்பதில் நாட்டம் இருக்கின்றது என்பதை உணர்த்தக்கூடிய சமிக்ஞை எதையும் காட்டவேயில்லை.

உண்மையில் வெளியுறவு அமைச்சு அதிகாரிகளே குழம்பிப் போயிருக்கிறார்கள். பிரதமர் எவ்வாறு சிந்திக்கிறார் என்பதைப் புரிந்துகொள்ள முடியாதவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். தற்போது மீண்டும் பலம்பொருந்தியதாக மாறியிருக்கும் பிரதமர் அலுவலகத்திலிருந்து தெளிவான வழிகாட்டல் எதுவும் வெளியுறவு அமைச்சக அதிகாரிகளுக்கு வருவதாகவும் இல்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களுடன் கடந்த மாதம் வெளிப்படையாக மோடி கருத்துகளை வெளியிட்டது இதற்கு ஒரு உதாரணம். தமிழர்களின் நிலைமையை மேம்படுத்துவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் சேர்ந்து தமிழ்த் தலைவர்கள் பணியாற்ற வேண்டும் என்று வலியுறுத்துவதற்கு பிரதமர் தயங்கவில்லை. அதைவிட வேறுமார்க்கமில்லை. அவ்வாறு செயற்படாவிட்டால் அவர்களுக்கு யாரும் உதவப் போவதில்லை என்பதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு மோடி தெளிவாகக் கூறியிருந்தார்.

எவ்வாறெனினும், அமெரிக்கா தொடர்பில் மோடியின் வெளியுறவுக் கொள்கை எத்தகையதாக இருக்கும் என்பதை இம்மாத இறுதியில் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். ஒரு தசாப்தத்துக்கும் கூடுதலான காலமாக அமெரிக்காவினால் புறக்கணிக்கப்பட்ட நிலையில், மோடி ஐக்கியநாடுகள் பொதுச்சபையின் 69ஆவது வருடாந்த கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக அமெரிக்காவுக்குச் செல்கிறார். அந்த கூட்டத்தொடர் செப்டெம்பர் 24ஆம் திகதி தொடங்குகிறது என்றபோதிலும் மோடி அதில் 27ஆம் திகதியே உரையாற்றுகிறார். அன்றைய தினம் சீனா, ரஷ்யா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் தலைவர்களும் உரையாற்றுகிறார்கள்.

இந்தக் கூட்டத்தொடரின்போது முக்கிய தலைவர்கள் சிலரை மோடி சந்திக்கவிருக்கிறார். இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கும் மோடிக்கும் இடையேயான சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால், அது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்றாலும் இருவரும் சந்தித்துப் பேசுவதற்கான சாத்தியம் இருப்பதாக சில வட்டாரங்கள் கூறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கின்றன. சந்திப்பு இடம்பெறுமானால், இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்து வதற்கும் தமிழர்களின் நிலைமையை மேம்படுத்துவதற்கும் மோடியும் ராஜ பக்ஷவும் மனந்திறந்த கருத்துப்பரி மாற்றங்களைச் செய்வர் என்று எதிர் பார்க்கப்படுகிறது. தமிழர்களுக்கு எதிரான பாரபட்சங்களைக் குறைப்ப தற்கும் பொருளாதார அபிவிருத் தியை ஏற்படுத்துவதற்கும் அவசிய மான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ராஜபக்ஷவை இணங்கவைக்க தன் னால் முடியுமென்று மோடி நம்புகி றார் என்றும் அந்த வட்டாரங்கள் கூறின.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தொட ரில் உரையாற்றிய பிறகு அமெரிக்கா வில் தொடர்ந்து தங்கியிருந்து மோடி 29,30 ஆம் திகதிகளில் பராக் ஒபாமா வைச் சந்திக்கவிருக்கிறார். இந்தியப் பிரதமரை வரவேற்க ஜனாதிபதி ஒபாமா ஆவலுடன் காத்திருப்பதாக வெள்ளைமாளிகை தெரிவித்திருக்கி றது. இருதலைவர்களும் அமெரிக்கா வுக்கும் இந்தியாவுக்கும் இடையி லான கேந்திர முக்கியத்துவ கூட்டுப் பங்காண்மையை விரிவுபடுத்துமுக மாக பரஸ்பர நலன்களுக்குரிய பல் வேறு விவகாரங்கள் குறித்து ஆராய் வார்கள் என்றும் வெள்ளைமாளிகை யின் ஊடகச் செயலாளர் அறிக்கை யொன்றில் தெரிவித்திருந்தார்.

பொருளாதார வளர்ச்சியைத் துரி தப்படுத்துவதற்கும் பாதுகாப்பு ஒத்து ழைப்பை வலுப்படுத்துவதற்கும் இரு நாடுகளுக்கும் உலகிற்கும் நீண்டகால அடிப்படையிலான நலன்களைக் கொண்டுவரக்கூடிய செயற்பாடுக ளில் ஒத்துழைப்பதற்குமான வழிவ கைகளை ஒபாமாவும் மோடியும் ஆராய்வர். ஆப்கானிஸ்தான், சிரியா, ஈராக் நிலைவரங்கள் உட்பட தற்போ தைய பிராந்திய மற்றும் உலக விவகா ரங்கள் குறித்தும் ஆராய்வர். இந்த விவகாரங்களில் சாதகமான விளைப யன்களைக் கொண்டுவரக்கூடியதாக இந்தியாவும் அமெரிக்காவும் ஒன்றி ணைந்து பணியாற்ற முடியும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட் டின், சீன ஜனாதிபதி சி ஜின் பிங், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் உட்பட பல தலைவர்களுடன் இது வரையில் மோடி சுமுகமானதும் வெளிப்படையானதுமான பேச்சு வார்த்தைகளை நடத்தியிருக்கும் நிலையில், உலகின் ஒரு வசீகரமான தலைவர் ஒபாமாவுடனான அவரின் சந்திப்பு எவ்வாறு அமையப் போகி றது என்பதை அறிய நாம் சில தினங் கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது.

## தெற்காசிய அல்-கயெடா புதிய அச்சுறுத்தல்

தெற்காசியா மீண்டும் ஜிஹாதிக ளின் நடவடிக்கைகளினால் அச்சுறுத் தலை எதிர்நோக்கும் நிலைமை ஏற் பட்டிருக்கிறது. இந்தப் பிராந்தியத்தில் அல்-கயெடாவின் பிரிவொன்றை அமைப்பது தொடர்பான அறி விப்பை அவ்வியக்கத்தின் தலைவர் அய்மான் அல்-சவாஹிரி இணையத் தளங்களில் வீடியோ மூலம் வெளி யிட்டிருக்கிறார். இந்திய உபகண்ட அல்-கயெடா என்ற பெயரில் (Al Qaeda in the Indian Subcontinent AQIS) அப்பிரிவு அழைக்கப் படும். அதன் தலைவராக மௌலானா அசீம் உமர் இருப்பார். தெஹ்ரீக்- ஈ- தலிபானின் பாகிஸ்தானிய தளபதி யாக இருக்கும் உமர் அல்-கயெடா வின் பாகிஸ்தானிய பிரசாரகராவார்.

அந்த 56 நிமிட வீடியோ ஒளிபரப் பில் அல்கயெடா தலைவர் அநீதிக் கும் அடக்குமுறைக்கும் எதிராக போராடுமாறு பங்களாதேஷ், மியன் மார் நாடுகளின் முஸ்லிம்களையும் இந்திய மாநிலங்களான ஜம்மு- காஷ் மீர், அசாம், குஜராத் ஆகியவற்றின் முஸ்லிம்களையும் கேட்டிருக்கிறார்.

மத்திய கிழக்கில் ஜிஹாதி இயக்கங் கள் மீதான செல்வாக்கை அல்கயெடா இழந்துவருகின்ற ஒரு நேரத்திலேயே இந்திய உபகண்ட அல்-கயெடா அமைக்கப்பட்டிருக்கிறது. மத்திய கிழக்கு இஸ்லாமிய அரசு (Islamic State) இயக்கம் பெரும் செல்வாக் குப் பெற்றிருக்கிறது. அதனால் தெற் காசியாவில் அல்-கயெடா மீண்டும் எழுச்சிபெறும் சாத்தியம் குறித்து கேள்வி எழுகிறது.

அல்-கயெடாவுடன் கோட்பாட்டு ரீதியானதும் செயற்பாட்டு ரீதியானது மான தொடர்புகளைக் கொண்டிருக் கும் லஷ்கர்-ஈ-தய்பா, ஹக்கானி வலையமைப்பு, தெஹ்ரிக்-ஈ-தலி பான் பாகிஸ்தான், ஹர்கட்-உல்-ஜி ஹாத் - அல்-இஸ்லாமி மற்றும் லஷ் கர் -ஈ-ஜாங்வி என்ற பல்வேறு தீவிரவாத இயக்கங்களின் இலக்காக பிராந்தியம் இருந்துவந்திருக்கிறது. ஆனால், தெற்காசியப் பிராந்தியத் தின் மீது பிரத்தியேக கவனத்தைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செலுத்துவதற்கென்று அல்-கயெடா பிரிவொன்று அமைக்கப்படுகின்ற செயல் உலகளாவிய இஸ்லாமிய இயக்கத்தின் பரவலின் திசையில் ஒரு நகர்வைப் பிரதிபலித்து நிற்கிறது.

காஷ்மீர் முஸ்லிம்களும் பங்களாதேஷ் முஸ்லிம்களும் தங்களது அரசுகளுக்கு எதிரான 'புனிதப் போரை' (ஜிகாத்)த் தொடுத்து இஸ்லாமிய தேசத்தை மீள்விக்கவேண்டுமென்று சவாஹிரியும் உமரும் ஏற்கனவே அறைகூவல் விடுத்திருந்தார்கள். தீவிரமான ஆட்திரட்டல் நடவடிக்கைகளின் மூலமாக( விசேடமாக காஷ்மீர் முஸ்லிம்கள், மியன்மாரின் ரொஹிங்கியாஸ் மத்தியிலிருந்து) தெற்காசியாவில் ஜிஹாதி இயக்கத்தை அமைத்து தனது அதிகாரத்தை நிலைநிறுத்தவேண்டுமென்பதில் அல்-கயெடா தலைமைத்துவம் விரக்தியுடன் விடாப்பிடியாக இருக்கிறது என்பதையே இந்திய உபகண்ட அல்-கயெடாவின் உருவாக்கம் வெளிக்காட்டுகிறது.

ஜிஹாதி இயக்கத்தைப் பலப்படுத்துமுகமாக ஆப்கானிஸ்தான் தலிபான்களுடனான அதன் உறவுகளை சுமுகமாக்க அல்-கயெடா முயற்சித்துக் கொண்டிருக்கிறது. முல்லா உமருக்கான விசுவாசத்தை புதுப்பித்துக் கொள்வதாக சவாஹிரியிடமிருந்து வெளிப்பட்ட சூளுரையில் இருந்து இது தெளிவாகிறது. ஜிஹாத்தின்

**2002 படுகொலைகளுக்காக குஜராத் மாநிலத்தை பிரத்தியேகமாக தனது வீடியோ உரையில் குறிப்பிட்ட சவாஹிரி முஸ்லிம்களுக்கு எதிராக இனவாத வன்செயல்கள் அடிக்கடி கட்டவிழ்த்து விடப்படுகின்ற உத்தரப் பிரதேசம் அல்லது மகாராஷ்டிரா மாநிலத்தை குறிப்பிடாமல் விட்டது பெரும் புதிராக இருக்கிறது**

அரங்கமாக ஆப்கானிஸ்தானைப் பயன்படுத்தி இந்திய உபகண்டத்தின் ஏனைய நாடுகளுக்குள் ஊடுருவும் தந்திரோபாயமாகவே இந்த நகர்வுகள் அமைகின்றன.

இந்திய உபகண்ட அல்-கயெடா என்று அழைக்கப்படுகின்ற அமைப்பு பாகிஸ்தானிய ஜிஹாதிகளைக் கொண்டிருக்கிறது. பாகிஸ்தானை மையமாகக் கொண்டியங்கும் பயங்கரவாத அமைப்புகளின் நிரந்தரமான இலக்காக இருந்துவந்திருப்பதால் இந்தியாவைப் பொறுத்தவரை இது பாரதூரமான பாதுகாப்பு அக்கறைகளைக் கிளப்புகிறது. 2002 குஜராத் கலவரம், அசாமில் உள்ளூர் போடோ இனத்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான மோதல்கள் மற்றும் ஜம்மு-காஷ்மீரின் கிளர்ச்சி ஆகியவற்றின் மீது இந்திய உபகண்ட அல்-கயெடா கவனத்தைச் செலுத்துகிறது. இந்தியாவில் இயக்கத்துக்கு உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கான பிரசாரத்துக்கு இந்த நிலைவரங்களைப் பயன்படுத்த முடியும் என்று அவர்கள் கருதுவதே இதற்குக் காரணம்.

இந்திய உபகண்டத்தில், பர்மாவில், பங்களாதேஷில், அசாம், குஜராத், காஷ்மீர் மாநிலங்களில் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ள முஸ்லிம்களை புதிய அல்-கயெடா பிரிவு பாதுகாக்கும் என்று சவாஹிரி தனது வீடியோ உரையில் தெரிவித்திருந்தார். 2002இல் இடம்பெற்ற படுகொலைகளுக்காக குஜராத் மாநிலத்தைப் பிரத்தியேகமாகக் குறிப்பிட்ட சவாஹிரி, முஸ்லிம்களுக்கு எதிராக இனவாத வன்செயல்கள் அடிக்கடி கட்டவிழ்த்து விடப்படுகின்ற உத்தரப் பிரதேசம் அல்லது மகாராஷ்டிரா மாநிலத்தை குறிப்பிடாமல் விட்டது பெரும் புதிராக இருக்கிறது.

இந்தியாவின் மதச்சார்பற்ற ஜனநாயக முறையை ஒரு கானல் நீர் என்று வர்ணித்திருக்கும் சவாஹிரி அந்த முறை மீதான நம்பிக்கையை இந்திய முஸ்லிம்கள் கைவிடவேண்டும் என்றும் ஷரியா அடிப்படையிலான உண்மையான ஆட்சிமுறைப்பாதையில் செல்வதற்குத் தயாராகுமாறும் அறைகூவல்விடுத்தார். இந்தியாவின் மதச்சார்பற்ற ஜனநாயகம் முஸ்லிம் சமூகத்தை பலவீனப்படுத்திச் சீரழித்துவிட்டது என்பதே அவரின் நிலைப்பாடு.

இந்த இடத்தில் தான் அவர் குறிதவறாமல் பேசியிருக்கிறார். கடந்த 15-20 வருட இஸ்லாமிய தீவிரவாத இயக்கத்தின் செயற்பாடுகளைப் பொறுத்தவரை ஒரு விந்தை

***(33ஆம் பக்கம் பார்க்க...)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# அரசியல் நிகழ்ச்சி நிரலை மீண்டும் ஆக்கிரமிக்கும் தேர்தல்கள்



கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து



அரசியல் நிகழ்ச்சி நிரலை மீண்டும் தேர்தல்கள் ஆக்கிரமித்துக்கொண்டிருக்கின்றன. அடுத்த வருடம் ஜனவரியில் அல்லது மார்ச்சில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுமென்று ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. இவ்வருடம் நவம்பர் மாதத்திலேயே அத்தேர்தல் நடத்தப்படக்கூடும் என்று கூட சிலர் வாதிடுகிறார்கள். தேர்தல்கள் பற்றிய இந்தப் பேச்சுகள் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறல் போன்ற விவகாரங்களை பின்னரங்கத்துக்குத் தள்ளிவிடுகின்றன. தேர்தல்கள், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கான உறுதிமொழியுடன் எதிரணியின் பொதுவேட்பாளர் ஒருவர் களத்தில் இறக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள், மூன்றாவது பதவிக் காலத்துக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போட்டியிட முடியாது என்று முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா முன்வைத்து வரும் வாதத்துக்கு ஊடகங்கள் கொடுக்கின்ற முக்கியத்துவம்- இவையெல்லாம் அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான பிரச்சினைகளுக்கு முக்கியத்துவத்தைக் கொடுக்கின்றன. எதிரணியின் கோரிக்கைகளை மழுங்கடிக்கும் நோக்குடன் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களைச் சிறிது மாற்றியமைக்கும் வகையிலான அரசியலமைப்பு வரைவு சட்டமூலம் ஒன்றைத் தயாரிப்பதில் அரசாங்கம் இறங்கியிருப்பதாகவும் வதந்திகள் அடிபடத் தொடங்கியிருக்கின்றன. கடும்போக்கு சிங்கள வலதுசாரி சக்திகளை திருப்திப்படுத்துவதற்காக அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை மாற்றியமைப்பதும் இந்த முயற்சியின் நோக்கங்களில் ஒன்று என்றும் பேசப்படுகிறது. மாகாண சபைகளுக்கு இருக்கக்கூடிய எந்தவொரு காணி அதிகாரத்தையும் பொலிஸ் அதிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத்தையும் அகற்றுவதாக இது அமையக்கூடும்.

இந்தக் காரியங்கள் எல்லாம் நடைபெறுவதாக இருந்தால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் விசாரணை, போர்க்குற்றங்களையும் ஆராய்வதற்கான ஆணையுடனும் சர்வதேச நிபுணர்கள் அடங்கிய ஆலோசனைக்குழுவின் உதவியுடனும் கூடிய (காணாமல் போனோர் தொடர்பான) உள்நாட்டு ஆணைக்குழுவின் விசாரணை ஆகியவற்றின் பின்புலத்திலேயே நிகழ்ந்தாக வேண்டும். உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக பெருமளவு கடனுதவியுடன் இலங்கைக்கு வருகை தந்த ஜப்பானியப் பிரதமர் மற்றும் சீன ஜனாதிபதி ஆகியோரின் விஜயங்களின் பின்புலத்திலும் அவை நடந்தாக வேண்டும். தமிழ் மக்களையும் அவர்களின் அரசியல் பிரதிநிதிகளையும் பொறுத்தவரை, பழைய பிரச்சினைகள் அப்படியே தொடரவே செய்யும். தேர்தல் முடிவுகள் எந்த மாற்றத்தையும் கொண்டுவராமல்,அதிகாரங்களையும் சுதந்திரங்களையும் மேலும் நறுக்குமானால், தமிழர்களின் பிரதிநிதிகள் கூடுதல் உறுதிப்பாட்டுடன் தங்கள் பிரச்சினைகளின் தீர்வுக்காக குரல்கொடுக்க வேண்டியிருக்கும்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர்கள் இந்தியாவுக்குச் சென்று பிரதமர் நரேந்திர மோடியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்கள். வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை சந்திப்பதில் ஆர்வம் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பெரிய அங்கத்துவக்கட்சியான இலங்கைத் தமிழரசுக்கட்சியின் புதியதலைவராக மாவை சோனதிராஜா தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். டில்லியில் உள்ள பாரதிய ஜனதா அரசாங்கம் 13 ஆவது திருத்தத்தைக் கைவிடப்போவதில்லை என்றும் மாகாண அதிகாரப் பரவலாக்கலுக்கு உறுதியான ஆதரவை அளிக்கும் என்றும் ஊடகச் செய்திகள் மூலமாக அறியக்கூடியதாக இருக்கிறது. அர்த்த புஷ்டியான அதிகாரப் பரவலாக்கத்தை உறுதி செய்யக்கூடிய அரசியல் தீர்வொன்றைக் காண்பதை நோக்கி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் இலங்கை அரசாங்கமும் மீண்டும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவேண்டும் என்றும் இந்திய அரசாங்கம் விரும்புகிறது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் பரிசீலனைக்குச் சமர்ப்பிப்பதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் கருத்தொருமிப்பைக் கண்டு யோசனைகளை வகுப்பதில் அரசாங்கத்துக்கு இருக்கின்ற இயலாமை அல்லது விருப்பமின்மை இதுவிடயத்தில் தொடர்ந்தும் முட்டுக்கட்டையாக விளங்குகிறது. அரசியல் தீர்வொன்றைக் காண்பதில் தனது தரப்பில் உள்ள இணங்காப் போக்கையும் கோட்பாட்டுப் பிடிவாதத்தையும் மறைப்பதற்கு அரசாங்கம் பயன்படுத்திய சகல உபாயங்களும் இதுவரையில் பயன்தரவில்லை.

அரசாங்கத்தைக் கொண்டு அரசியல் தீர்வொன்றை வகுக்கச் செய்வதற்கான கருவியாகத்தான் பொறுப்புக்கூறல், உண்மை மற்றும் நீதியுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன என்றால், பொறுப்புக் கூறல் விடயத்தைப் பொறுத்தவரை நிலைவரங்களைக் குழப்பியடிப்பதற்கு அரசாங்கம் இப்போது காணாமல் போனோர் தொடர்பான ஆணைக்குழுவையும் சர்வதேச நிபுணர்களைக் கொண்ட ஆலோசனைக்குழுவையும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. அதேவேளை அதிகாரப்பரவலாக்கத்தின் சாரத்தை அகற்றுவதற்கும் அரசியல் இணக்கத் தீர்வொன்றை தவிர்ப்பதற்கும் அதை அரசாங்கம் ஒரு திரையாகப் பயன்படுத்துகின்றது. சர்வதேச நிபுணர்கள் அடங்கிய ஆணைக்குழுவை ஜப்பானியப் பிரதமர்

**அரசியல் தீர்வொன்றைக் காண்பதில் தனது தரப்பிலுள்ள இணங்காப்போக்கையும் கோட்பாட்டு பிடிவாதத்தையும் மறைப்பதற்கு அரசாங்கம் இதுவரையில் பயன்படுத்திய சகல உபாயங்களும் பயனைத்தரவில்லை.**

ஏற்கனவே ஆதரித்திருக்கிறார். நிலைவரங்களைக் குழப்பியடிப்பதற்கு Third Narrative என்று அழைக்கப்படுகின்ற அரசாங்க ஆதரவு சிவில் சமூக முன் முயற்சி ஜெனீவாவிலும் நியூயோர்க்கிலும் கவனத்துக்குக் கொண்டுவரப்படுகிறது.

பொறுப்புக் கூறல் விவகாரத்தைப் பொறுத்தவரை, காணாமல் போனோர் தொடர்பான ஆணைக்குழுவையும் ஆலோசனைக் குழுவையும் பயன்படுத்தி அரசாங்கம் காலத்தை இழுத்தடித்துக் கொண்டுபோகும் என்கின்ற அதேவேளை, அதிகாரப் பரவலாக்கல் கோரிக்கை மறக்கப்பட்ட ஒன்றாக்கப்படவும் கூடும். மகிந்த சிந்தனையின் அடுத்த பதிப்பு 13 ஆவது திருத்தத்தை உள்ளுக்குள்ளால் குடைந்து சாரத்தை எடுத்துவிடுமேயானால், அதை தென்னிலங்கை மக்களும் தேர்தலில் அங்கீகரித்துவிட்டால் அந்தத் திருத்தத்தை முற்று முழுதாக நடைமுறைப்படுத்துமாறு யார் வலியுறுத்துவார்கள்?

ஊவா மாகாணசபைத் தேர்தல் நடைபெற்று முடிந்த மறுநாள் வடமாகாண சபைத் தேர்தலின் முதலாவது வருடாந்த தினமாகும். வடமாகாண மக்களின் வாழ்வாதாரம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கு உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாததாக- செயற்திறனற்றதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் மாகாண நிருவாகம் இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவரான ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த எஸ்.தவராசா குற்றஞ்சாட்டியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால், மாகாண சபையோ மறுபுறத்தில், நிறைவேற்றப்படுகின்ற சட்ட மூலங்களுக்கு ஆளுநரின் சம்மதத்தைப் பெறுவதில் அநாவசியமான தாமதம் ஏற்படுவதாகக் கவலை தெரிவித்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் ஏனைய மாகாணங்களில் முதலமைச்சர் நிதியம் இருக்கின்றபோதிலும் அத்தகைய நிதியம் ஒன்றை வடக்கில் ஏற்படுத்துவதற்கு ஆளுநர் அனுமதிக்கவில்லை என்றும் முதலமைச்சர் குற்றஞ்சாட்டுகிறார். வடமாகாணசபை செயற்படுத்தப்படுவதோ அல்லது செயற்படுத்தப்படாமல் இருப்பதோ தற்போதுள்ள அதிகாரப்பரவலாக்கல் நடைமுறைக் கொவ்வாதது என்பதையும் உண்மையான பேச்சுவார்த்தை தற்போதைய அதிகாரப்பரவல் ஏற்பாட்டுக்கு அப்பால் செல்ல வேண்டும் என்பதையும் நிரூபிக்கவே என்று தென்னிலங்கையில் உள்ள கடும் போக்காளர்கள் மாத்திரம் தான் கூறுகிறார்கள் என்றில்லை.

13ஆவது திருத்தத்தில் குறித்துரைக்கப்பட்டிருக்கின்ற அதிகாரப் பரவலாக்கலைப் பொறுத்தவரை, அது இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வு என்ற வகையில் போதாததாகவே இருந்துவந்திருக்கிறது. இப்போதும் அவ்வாறே. மேலும், இன்று வடக்கில் இடம்பெற்று வருகின்ற இராணுவமயமாக்கலையோ, நில அபகரிப்பையோ, ஒடுக்குமுறையையோ, குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றவர்கள் தண்டனையில் இருந்து விடுபாட்டுரிமை கொண்டவர்கள் போன்று சுதந்திரமாக நடமாடக்கூடியதாக இருக்கின்ற நிலைவரத்தையோ மாற்றியமைப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையையும் எடுப்பதற்கு வகைசெய்யக்கூடியதாக மாகாணசபைகளின் அதிகாரங்கள் இல்லை. ஆனாலும், ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் சுயநிர்ணய உரிமைக்கான அரசியல் கட்டமைப்பு ஒன்று இல்லாத நிலையிலும் கூட, மக்களின் வாழ்வாதாரம் மற்றும் நல்வாழ்வை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டிய அவசியம் எப்போதுமே அரசியல் சவாலாக இருக்கிறது. அரசாங்கமும் அதன் ஆதரவாளர்களும் பொருளாதார செயற்பாடுகளைப் பயன்படுத்தி அரசியல் பிரச்சினைகளை மழுங்கடிக்கப் பார்க்கிறார்கள். உண்மை, இதுவிடயத்தில் அவர்கள் ஒருவருடத்துக்கு முன்னர் தோல்விகண்டார்கள். ஒருவருடத்துக்குப் பிறகு அரசியல் கலாசாரத்தில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறதா? விட்டுக்கொடுத்துச் செயற்படக்கூடியதாக அந்தக் கலாசாரத்தில் மாறுதல் ஏற்படக்கூடிய சாத்தியப்பாடு இருக்கிறதா?

### தமிழரசுக்கட்சியின் தீர்மானம்

இம்மாத ஆரம்பத்தில் வவுனியாவில் நடைபெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் மகாநாட்டில் 15 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் 15ஆவது தீர்மானம் பின்வருமாறு கூறுகிறது.

தொடர்ச்சியாக எமது மக்களை அடக்குமுறைக்கு உட்படுத்தி, தமது சொந்த நிலங்களுக்குச் செல்ல முடியாமல் அவர்களைத் தடுத்து, அந்நிலங்களை அபகரித்து எமது மக்களின் சொத்துகளை அழித்து எமது பெண்கள் மீதும் பிள்ளைகள் மீதும் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டு, அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்தாது வேண்டுமென்றே காலத்தை இழுத்தடித்து எமது இனத்தின் இருப்பை அழிக்கும் செயற்பாட்டிலிருந்து அரசாங்கம் இவ்வருட இறுதிக்குள் மாறாவிட்டால், 2015 ஆம் ஆண்டு தைமாதத்தில் இருந்து எமது இனத்தைப் பாதுகாப்பதற்காக மகாத்மா காந்தியின் வழியிலான அகிம்சைப் போராட்டத்தை நாம் ஆரம்பிப்போம் என்றும் அப்போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை நல்குமாறு எமது மக்களிடமும் இந்தியா உட்பட சர்வதேச சமூகத்திடமும் இந்நாட்டில் உள்ள சகல முற்போக்குவாதிகளிடமும் 2014 செப்டெம்பர் மாதம் 5,6,7 ஆம் திகதிகளில் வவுனியாவில் கூடுகின்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் மகாநாடு அறைகூவல் விடுக்கிறது.

> தமிழரசுக்கட்சியும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் தங்களது கோரிக்கையின் நியாயப்பாட்டை நாட்டின் ஏனையபகுதி மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் தெளிவாகவும் உறுதியாகவும் விளக்குவதில் நேரத்தைச் செலவிட வேண்டும்

தமிழரசுக்கட்சியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் இவ்வாறாக அரசியல் பிரச்சினைக்கு முக்கியத்துவத்தைக் கொடுப்பதற்கு உறுதிபூணுவதாக இருந்தால், தங்களது கோரிக்கைகளின் நியாயப்பாட்டை நாட்டின் ஏனைய பகுதி மக்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தெளிவாகவும் உறுதியான முறையிலும் விளக்குவதில் நேரத்தைச் செலவிட வேண்டும். அல்- பதாஹ் மற்றும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை இஸ்ரேலிய அரசாங்கங்கள் தசாப்தங்களாக எவ்வாறு நடத்தி வந்திருக்கின்றனவோ அதைப் போன்றே தமிழரசுக் கட்சியையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் இலங்கை அரசாங்கம் நடத்துவதில் நாட்டம் காட்டும். அதாவது மிதவாதிகளை தீவிரவாதிகள் என்று காட்டுவதற்கு மாத்திரமே அரசாங்கம் அக்கறை கொள்ளும்! ■

---


***(28ஆம் பக்கத்தொடர்ச்சி...)***

என்பதில் சந்தேகமில்லை.

எதேச்சாதிகார அரசாங்கத்தை மாற்றியமைப்பதற்கு பொது இணக்கப்பாடொன்றின் அடிப்படையில் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய அவசியத்தை விளங்கிக்கொள்ளத் தவறிய விக்கிரமசிங்க, மக்களின் அபிலாசைகளை பொருட்படுத்தாமல் தனது சொந்த நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் செயல்படுவதற்கு முனைந்திருப்பதன் மூலமாக அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தன்னை 'பொதுப்படையாயில்லாத' (Uncommon Candidate) வேட்பாளராக மாற்றியிருக்கிறார். ■

***(உபுல் குமாரப்பெரும ஒரு சட்டத்தரணியாவார்)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தனிப்பட்ட வாழ்க்கையில் இருவரும் ஏய்திய சாதனைகள், பொது வாழ்வில் அவர்கள் புரிந்த அளப்பரிய சேவைகளால் அவர்களின் தலைமுறையினருக்கும் முன்மாதிரியான மனிதர்களாக விளங்கினர். இப்பண்புகளை அடுத்து வந்த தலைமுறையினரிடம் காண்பது அரிதாயிற்று



## பொது வாழ்வில் வெவ்வேறு பாதைகளில் சென்று பிரகாசித்த

# இரு மகத்தான மனிதர்கள்



ராஜன் பிலிப்ஸ்

செப்டெம்பர் முதலாம் திகதி பாலாதம்பு காலமானார். சுதந்திரத்திற்குப் பிந்திய இலங்கையின் தனித்துவம்மிக்க இத்தலைவரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. அந்த வாரம் முழுவதும் அவருக்குரியதொன்றாக அமைந்தது. சில மேற்கு நாடுகள் செப்டெம்பர் முதலாம் திகதியைத் தொழிலாளர் தினமாகக் கொண்டாடுகின்றன. அந்நாடுகளில் மேதினம் கொண்டாடப்படுவதில்லை காரணம் மேதினம் புரட்சியைக் குறிப்பது. புரட்சி என்ற கருத்தில் அந்நாடுகளுக்கு உடன்பாடு இல்லை. இந்த வருடம் மேதினத்தன்று தம்பு சி.எம்.யுவின் கூட்டத்தில் உரையாற்ற மோட்டார் சைக்கிள் ஒன்றின் பின் ஆசனத்தில் அமர்ந்தவாறு சென்றதைப் படம் பிடித்துப் பத்திரிகைகள் வெளியிட்டிருந்தன.

அதுதான் அவரது இறுதி மேதினம் ஆக அமைந்தது. அவரது இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டு தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். மரணப்படுக்கையிலும் பணிந்து போகாத உறுதி அவர் முகத்தில் வெளிப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அவருக்கு அஞ்சலி செலுத்தினார். பாலாதம்பு பல திறமைகளும் ஒருங்கே அமைந்த ஆளுமைமிக்கவர். இலங்கையின் பொதுவாழ்வில் அவர் பல வகிபாகங்களை ஏற்றார். தொழிற்சங்க இயக்கத்தின் மாபெரும் தலைவராகத் திகழ்ந்தார். இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்தை (சி.எம்.யு) கட்டி வளர்த்து அதற்கு வளமும் பலமும் சேர்த்த அவரை அச்சங்கத்தினர் மறக்கமாட்டார்கள். அச்சங்கத்தின் ஆயிரக்கணக்கான ஊழியர்களின் உள்ளத்தில் அவர் நீங்கா இடத்தைப் பெற்றார். 1935 இல் சமசமாஜக் கட்சி தோன்றுவதற்கு முன்பு பிறந்தவர்களும் அண்மைக்காலம் வரை உயிர் வாழ்ந்தவர்களுமான சிலரில் இறுதியாக மறைந்த தோழர் பாலாதம்பு எனலாம். அவரின் மறைவு புரட்சிப் போராட்ட வரலாற்றை மீண்டும் ஒரு தடவை நினைவில் மீட்டுப் பார்க்கும் சந்தர்ப்பத்தை வழங்குகிறது. செங்கொடியைத் தாழ்த்தி அவருக்கு எம் மரியாதையைச் செலுத்துவோமாக.

அந்தவாரம் இன்னொரு முக்கிய பிரமுகரான சாம் விஜயசிங்கவும் மறைந்தார். பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகமாக 20 வருடங்களுக்கு மேல் பணியாற்றிய சாம் விஜயசிங்க தம்மையொரு தனிநிறுவனமாகவே உயர்த்திக்கொண்டவர். அப்பதவியில் இருந்து ஓய்வு பெற்றபின் ஒம்புட்ஸ்மன் ஆக பதவி வகித்தவர். தம்புவிற்கும் விஜயசிங்கவிற்கும் இறக்கும் போது சம வயது ஆகும். ஆயினும் இருவரும் நடந்து வந்த பாதை வெவ்வேறா னது. தனிப்பட்ட வாழ்க்கையிலும் பொதுவாழ்க்கையிலும் வெவ்வேறு திசைகளில் அவர்கள் பிரகாசித்தனர். அவர்கள் இருவரதும் பங்களிப்புகளின் தன்மையும் கூட வேறுபட்டவை. அவர்கள் இருவருக்கும் இடையில் பொதுத்தன்மை ஒன்று காணப்பட்டது. அறிவிலும் பண்பாட்டிலும் அவர்கள் இருவரும் மாமலைகள் போல் உயர்ந்து நின்றனர். நான் அவர்களின் கல்விச் சாதனைகளை மட்டும் கருதவில்லை. தாம் தேர்ந்துகொண்ட துறையில் காட்டிய அதிஉயர் தேர்ச்சி, பொதுநலனுக்கான அர்ப்பணி ப்பு என்பனவற்றாலும் அவர்கள் உயர்ந்து நின்றனர். தனிப்பட்ட வாழ்க்கையில் அவர்கள் இருவரும் எய்திய சாதனைகள், பொது வாழ்வில் அவர்கள் புரிந்த அளப்பரிய சேவை என்பனவற்றால், அவர்களின் தலைமுறையினருக்கும் முன்மாதிரியான மனிதர்களாக அவர்கள் இருவரும் விளங்கினர். இப்பண்புகளை அடுத்து வந்த தலைமுறையினரிடம் காண்பது அரிதாயிற்று. அவர்களின் முன்னிலையில் தகுதியோ திறமையோ இல்லாதவர்கள் நிற்பதற்குக் கூசுவர்; அஞ்சுவர். ஆனால் இன்றோ உயர்பதவிகளில் எல்லாம் தரக்குறைவானவர்களே நிறைந்துள்ளனர்.

பாலாதம்புவும், சாம்விஜயசிங்கவும் பொதுவாழ்வில் பின்பற்றிய கொள்கைகள் அவர்கள் சென்றபாதை அடிப்படையில் வெவ்வேறானவை. அவர்கள் இவ்வாறு வெவ்வேறு திசைகளில் சென்று தம் இலக்குகளை அடைவதற்கு பொது அரசியல் வெளியொன்று இடமளித்தது. அவர்கள் அவ்வெளியில் செயற்பட்டு வெவ்வேறு வகைப் பங்களிப்புகளை வழங்கினர். மனித உரிமைகள், ஜனநாயக உரிமைகள் என்பனவற்றை எப்போதும் மதித்ததோடு, வேற்றுமைகளை சகிப்புணர்வோடு ஏற்றுக்கொண்டு நீதியையும் சமத்துவத்தையும் வழங்கினர். 1963இல் துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தத்தை வழிநடத்திய பாலாதம்பு அதை அகில இலங்கை தழுவிய பொது வேலை நிறுத்தமாக மாற்றினார். தொழிற்சங்கத் தீவிரவாதத்திற்கு தலைமை கொடுத்த அவரும் அவரது

**இலங்கையை விட்டு பிரித்தானியர் வெளியேறிய 1948ஆம் ஆண்டு பாலாதம்புவுக்கு 25 வயது. 47ஆம் ஆண்டில் பொது வேலை நிறுத்த போராட்டத்தில் அவர் ஈடுபட்டார். இதையடுத்து அவர் புலமை உலகிலிருந்து ஒதுங்கிப் போனார். பல்கலைக்கழக பேராசிரியராக உயர்ந்திருக்க வேண்டிய தம்ப தொழிற்சங்க இயக்கத்தில் தலைவரானார்**

தொழிற்சங்கமும் திருமதி பண்டாரநாயக்காவின் அவசரகாலவிதிகளை யும் மீறி தொழிற்பட்டனர். அடுத்த ஆண்டு சிறிமாவோ தொழில்துறை அமைதியை வேண்டி லங்கா சமசமாஜக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தார். 1964இல் சமசமாஜக்கட்சியின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மகாநாட்டில் கூட்டணி அரசை அமைப்பது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டணி அரசை எதிர்த்து வெளியேறிய குழுவிற்கு பாலாதம்பு தலைமை தாங்கினார். இதே ஆண்டில் சாம் விஜயசிங்க பாராளுமன்றத்தில் 'கிளார்க்' என்ற பதவியில் இணைந்தார். அதற்கு முதல் பிரதிக் கிளார்க் என்ற நிலையில் ஆறாண்டுகள் பதவி வகித்த பின் அவர் அப்பதவியில் அமர்த்தப்பட்டார். சாம்விஜய சிங்கவின் பெயர் பாராளு மன்றத்துடன் அன்று முதல் பிரிக்கமுடியாது ஒட்டிக்கொண்டது. அதேபோல் தொழிற்சங்க இயக்கம் என்றால் பாலாதம்பு என்று நினைக்கும் அளவுக்கு பாலாதம்பு தொழிற்சங்க இயக்கத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன் ஒட்டிக்கொண்டார்.

பாராளுமன்றம், தொழிற்சங்க இயக்கம் என்ற இரண்டும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட விடயங்கள். ஆயினும் சுதந்திர இலங்கையின் வரலாற்றில் இரண்டினது இருப்பு ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதாக அமைந்துவிட்டது. தொழிற்சங்க இயக்கம் மிகவும் தீவிரம் பெற்றதாய் வளர்ச்சியுற்றிருந்தால் ஏற்பட்ட பயம் தான் பிரித்தானியர்களை நாட்டின் ஆட்சிப் பொறுப்பை கொம்பரடோர் முதலாளி வகுப்பிடம் கையளித்துவிட்டு ஓடச் செய்தது எனலாம். இலங்கையை விட்டு பிரித்தானியர் வெளியேறிய 1948ஆம் ஆண்டில் பாலாதம்புவிற்கு 25 வயது ஆகியிருந்தது. 1947ஆம் ஆண்டின் வேலை நிறுத்தத்தில் தம்பு ஈடுபட்டார். பிரித்தானியரை விரட்டியடிக்க ஒரு காரணமாக இருந்த இவ்வேலை நிறுத்தத்தில் தீவிரமாகத் தன்னை ஈடுபடுத்திய பாலாதம்பு புலமை உலகில் இருந்து ஒதுங்கிப் போனார். (பல்கலைக்கழகப் பேராசிரியராக உயர்ந்திருக்க வேண்டிய பாலாதம்பு) தொழிற்சங்க இயக்கத்தில் முக்கிய தலைவரானார்.

என்.எம். பெரேரா இறந்தபோது வில்சன் ஒரு அஞ்சலிக் கட்டுரை எழுதினார். அக்கட்டுரையில் இலங்கையின் ஜனநாயகத்தின் சிறந்த காவலராணாக தொழிற்சங்க இயக்கம் மிளிர்ந்தது. இந்த இயக்கத்தை கட்டி வளர்த்த என்.எம்.பெரேராவும் லங்கா சமசமாஜக் கட்சியும் ஜனநாயகத்தினைப் பாதுகாப்பதற்கு அருஞ்சேவை ஆற்றினர் என்று அழகாக வில்சன் எழுதினார். நான் வில்சனின் வாதத்திற்கு மறுதலையான கருத்தை முன்வைக்க விரும்புகிறேன். இலங்கையில் பாராளுமன்ற ஜனநாயகம் தான் இலங்கையின் தொழிற்சங்க இயக்கத்தைப் பாதுகாத்தது என்பதே எனது வாதம்.

இலங்கையின் விசேடமான வரலாற்றுப் பின்னணியில் இவ்வுண்மையை நாம் புரிந்து கொள்ள முடியும். அன்று பாராளுமன்றம் உயிர்ப்புடன் செயற்பட்டது. தொழிற்சங்க இயக்கமும் வீறுடன் தொழிற்பட்டது. இன்றோ எனில் பாராளுமன்றம் செத்துவிட்டது. தொழிற்சங்க இயக்கமும் பொய்யாய் பழங்கதையாய் போய்விட்டது. அரசியல் ரீதியில் அது பலமற்றதாகிவிட்டது. இதுதான் எமது கண்ணுக்குப் புலப்படாத விடயம். புரட்சிகர எழுத்திலும் பேச்சிலும் கூட மறக்கப்படும் விடயம் பாராளுமன்ற ஜனநாயகம் இருந்திருந்தால் தொழிற்சங்க இயக்கம் பாதுகாக்கப்பட்டிருக்கும் என்ற உண்மையாகும். தொழிற்சங்க இயக்கத்திற்கு பெரும்பணியாற்றிய பாலாதம்புவையும், பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு பெரும்பங்களிப்பை வழங்கிய சாம் விஜயசிங்கவையும் ஒருங்கே நினைவுகூரும் இவ்வேளையில் நாம் எமது அரசியல் சமூகத்தின் துணிச்சல் மிக்க காவலர்கள் இருவரைப் போற்றுகின்ற பணியினைச் செய்கின்றோம்.

இன்றைய அரசியல் தலைவர்களின் பாசாங்குத்தனம், போலித்தனம், தகுதியின்மை, திறமையின்மை ஆகியவற்றை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். ஆயினும் இத்தலைவர்கள் தான் இன்று இம்மாமனிதர்கள் இருவரினதும் உத்தியோகபூர்வ இரங்கல் நிகழ்வுகளின் தலைமைப்பங்கை எடுத்துக்கொண்டனர். அதேவேளை பாராளுமன்றத்தைச் செல்லாக்காசு ஆக்குவதிலும் தொழிற்சங்கங்களை முடக்கி இவ்விரு பெருநிறுவன அமைப்பு களையும் மேலும் மேலும் அழி

> ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்து லங்கா சமசமாஜக்கட்சி அமைத்த கூட்டரசை எதிர்த்து வெளியேறிய குழுவுக்கு தலைமைதாங்க பாலாதம்பு தன்னை அர்ப்பணித்த அதே ஆண்டில் சாம் விஜேசிங்க பாராளுமன்றத்தில் கிளாக் பதவியில் அமர்ந்தார். பின்னர் பாராளுமன்ற செயலாளர் நாயகமாக இரு தசாப்தங்களுக்கு மேலாக பதவி வகித்த அவரின் பெயர் பாராளுமன்றத்துடன் அன்று முதல் பிரிக்க முடியாது ஒட்டிக் கொண்டது

வுப் பாதைக்கு இட்டுச் செல்வதில் முனைந்து நிற்கின்றனர். முந்திய தலைமுறைத் தலைவர்களால் சாதிக்க முடியாததை இன்று எம்தலைவர்கள் சாதிக்கின்றார்கள் பாருங்கள் என்று இப்போலிகளின் புகழ்பாடிகள் கூறிக்கொள்வது எவ்வளவு தூரம் கேலிக்கிடமானது. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததையும், கொழும்பு நகரை அழகுபடுத்துவதையும், பாரிய பௌதீக உட்கட்டமைப்பு வேலைகளை பெரும் செலவில் பெரும் எடுப்பில் செய்வதையும் (இவற்றால் மக்களுக்கு சுவறிய நன்மைகள் யாவை?) பெரும் சாதனைகளாகக் காட்டப்படுகின்றன. ஆனால் உண்மையோ வேறு. போருக்குப்பிந்திய இலங்கையில் போர்க்காலத்தின் பிரச்சினைகள் பூதாகரமாக மீண்டெழுந்து நிற்கின்றன. இவற்றைத் தீர்ப்பதற்கு எவ்வித முயற்சிகளும் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்படவில்லை. போர் உருவாக்கிய பிரச்சினைகள் பல தீர்க்கப்படாமல் உள் ஏன. 50 வருடங்களுக்கும் மேலாக கட்டிவளர்க்கப்பட்ட சமூக நலன் உட்கட்டமைப்பு முறை ஒன்று இருந்து வந்தது. இவ் உட்கட்டமை ப்பு மக்கள் நலனில் அக்கறை கொண்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்றம், உயிர்ப்புடைய தொழிலாளர் வர்க்கம் என்ற இரண்டினாலும் உருவாக்கி வளர்க்கப்பட்டது. இன்று சமூகநலன் சேவைகளின் கட்டமைப்புச் சிதைக்கப்பட்டுவிட்டது. மக்கள் தமது சொந்த நிலங்களில் இருந்தும் வாழ்விடங்களில் இருந்தும் துரத்தப்படுகின்றார்கள். யாழ்ப்பாணத்தில் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்துதல் என்ற போர்வையில் இது நடக்கின்றது. கொழும்பில் கசினோ முதலாளிகளின் விருப்பங்களைப் பூர்த்தி செய்வதற்காக இவ்வேலை நடைபெறுகிறது. இதை எதிர்த்துக் குரல் கொடுக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் இல்லை. இதற்காகப் போராடுவதற்குத் தொழிற் சங்கங்கள் இன்று இல்லை. இடதுசாரி இயக்கத்தின் பொற்காலத்தில் போராட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றன.

ஒவ்வொரு நாளும் அல்லது ஒவ்வொரு வாரமும் எமது அரசியல் முறையில் விநோதமான சர்ச்சைகள், பிரச்சினைகள் எழுந்த வண்ணம் உள்ளதை செய்திகள் மூலம் அறிகிறோம். சென்ற இருவாரங்களுக்கு முன் பாராளுமன்ற உறுப்பினர்கள் செய்த குழப்படி பற்றிக் கேள்விப்பட்டோம். அவர்களில் பலர் பாராளுமன்றக் கூட்டத்திற்கு செல்லவில்லை. பாராளுமன்ற கட்டிடத்திற்குள் நின்ற சிலரும் அங்கும் இங்குமாக பல்வேறு சோலிகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

கூட்டம் நடத்துவதற்கு நிறைவெண் (quorum) இருக்கவில்லையாம். பாராளுமன்றப் பணியாளர்கள் எம்.பி.க்களை தேடிப்பிடித்துக் கூட்டத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டியதாயிருந்ததாம். அதிகாரத்தில் உள்ளவர்கள் இன்று சாம் விஜயசிங்கவின் இறப்புக்கு உத்தியோகபூர்வமாகத் துக்கம் அனுஷ்டிக்கிறார்கள். ஆனால் அவர் கட்டிக்காத்த ஒரு நிறுவனத்தை நாளாந்தம் உருக்குலைப்பதில் ஈடுபட்டுள்ளனர். சென்றவாரம் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா சட்டப்பிரச்சினை ஒன்றைக் கிளப்புவதன் மூலம் குண்டு ஒன்றை தூக்கிப் போட்டார். அவரது விளக்கப்படி 18ஆவது திருத்தப்படி இரண்டு தடவைக்குமேல் ஜனாதிபதியாக வரும் உரிமை எதிர்கால ஜனாதிபதிகளுக்கே அல்லாமல் தற்போது பதவியில் இருப்பவருக்கு இல்லை என்றார் சரத் என் சில்வா. அவர் சட்ட நுணுக்கங்களைக் கூறிவிவாதிப்பதில் புத்திசாலி தான்.

ஆனால் இதில் அரைப்பங்கு அளவுக்காவது தனது பதவிக்காலத்தில் நீதிவிவகாரங்களில் அவர் நேர்மையையும் தளம்பலில்லாத உறுதிப்பாட்டையும் ஒன்றுக்குபின் ஒன்று முரணான தன்மை இல்லாமையையும் அவர் கடைப்பிடித்திருந்தால் அவரின் நம்பகத்தன்மை உயர்ந்திருக்கும். புத்திசாலித்தனம், நம்பகத்தன்மை உயர்ந்திருக்கும். புத்திசாலித்தனம், இருந்தால் மட்டும் போதாது. நம்பகத் தன்மையும் வேண்டும். அவரின் இன்றைய முயற்சி பயன்தரமாட்டாது. பாலாதம்பு ஒரு நியாயவாதி என்ற முறையில் அசாதாரணமான புத்திசாலியாக இருந்தார். ஆனால் ஒரு தொழிற் சங்கத் தலைவர் என்ற முறையிலும் ஒரு மனிதர் என்ற முறையிலும் அவரின் நம்பகத்தன்மை அதைவிட உயர்ந்ததாக இருந்தது.

> அன்று பாராளுமன்றம் உயிர்ப்புடன் செயற்பட்டது. தொழிற்சங்க இயக்கமும் வீறுடன் தொழிற்பட்டது. இன்றோ பாராளுமன்றம் செத்துவிட்டது. தொழிற் சங்க இயக்கமும் பொய்யாய் பழங்கதையாய் போய்விட்டது.

இலங்கையில் ஒரு அரசியல் யாப்பில் இருந்து இன்னொரு அரசியல் யாப்புக்கு நாடு சறுக்கிக் கொண்டிருந்த காலத்தில் இலங்கையின் அரசியல் நிறுவனத் தொடர்ச்சிக்குச் சாம் விஜயசிங்க பங்களிப்புச் செய்தார். பாலாதம்பு இச்சறுக்கல்களைத் தூர இருந்து எதிர்த்தவாறு, அரசின் ஒடுக்குமுறைகளை எதிர்த்துப் போராடி குறிப்பிடத்தக்க வெற்றிகளை நிலைநாட்டினார். 'குற்றவியல் நீதி' நிறுவனமயப்படுதல், தொழிலாளர் உரிமைகள் பறிக்கப்படுதல் என்பனவற்றை எதிர்த்துப் போராடினார். 1972 இல் சிலோன் என்ற பெயர் 'லங்கா எனவும்' இலங்கை எனவும் மாற்றப்படுவதை அவர் ஆதரித்தார். ஆனால் 'சிறீ' என்ற அடைமொழியை மேலாதிக்கவாதம் என்று கூறி எதிர்த்தார். இவரது முன்மாதிரியைப் பின்பற்றி வேறு இருவரும் கருத்துக் கூறினர் என்பதைக் குறிப்பிடவிரும்புகிறேன்.

ஒருவர் கஸ்பர்ஸ், மற்றவர் சீலன் கதிர்காமர். தலைவர்கள் வருவார்கள் போவார்கள்; மக்களால் இடைக்கிடை தூக்கியெறியப்படுவார்கள் என்பதை பாலாதம்பு அரசியல் வாழ்க்கை அனுபவத்தால் கண்டுணர்ந்தவர். ஜயவர்த்தனவின் யு.என்.பி. ஆட்சி முடிவுக்கு வருவதை 1994இல் அவர் முன்கூட்டியே உணர்ந்தார். தொழிலாளர் பட்டயம் (workers charter) ஒன்றைத் தயாரிப்பதில் 1994 இன் பின்னர் ஆர்வத்தோடு உழைத்தார். ஆனால் அவரது நம்பிக்கைகள் விரைவில் வீண் போயின. அவரது 90 ஆவது பிறந்த தினத்தன்று ஜனாதிபதியிடமிருந்து வாழ்த்து வந்ததை விட தொழிலாளர் பட்டயம் பிரகடனம் செய்யப்பட்டிருந்தால் அவர் கூடுதல் மகிழ்ச்சி யடைந்திருப்பார். அந்தத் தலைமுறைக்கும் எமது தலைமுறைக்கும் இடையிலான வேறுபாடு இதுதான். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடம்புரளும் அ.தி.மு.க. – பா.ஜ.க. உறவு?

# அனைத்து மாநில முதல்வர்களின் ஆதரவைத் திரட்டும் ஜெயலலிதா



பிரதமர் மோடி பதவியேற்ற பிறகு முதல் முறையாக மற்ற மாநில முதல்வர்களின் ஆதரவினைத் திரட்டுகிறார் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா. மோடியின் ஆட்சி நூறு நாட்களைத் தாண்டியுள்ள சூழ்நிலையில், அவருக்கு அரசியல் ரீதியாக நெருக்கமாக இருக்கும் தமிழக முதலமைச்சரால், இப்படியொரு பனிப்போர் துவங்கியிருக்கிறது. பொருள் மற்றும் சேவை வரிச்சட்டம் (Goods and Service Taxes Act) அதாவது ஜி.எஸ்.டி என்பதை நாடு முழுவதும் கொண்டு வருவதில்தான் இந்தப் பிரச்சினை எழுந்திருக்கிறது. இந்தச் சட்டம் முன்பு ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு இருந்த போது நிதியமைச்சராக இருந்த ப.சிதம்பரத்தால் கொண்டு வரப்பட்டது. ஆனால் மாநிலங்களின் எதிர்ப்பினால் அச்சட்டம் நிறைவேற்றப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டது.


நரேந்திரமோடி தலைமையில் புதிய அரசு பொறுப்பேற்றவுடன் இச்சட்டத்தை நிறைவேற்றும் முஸ்தீபுகள் முடுக்கிவிடப்பட்டன. நிதிநிலை அறிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னை மெயில்

முத்தையா காசிநாதன்



யைத் தாக்கல் செய்து பேசிய நிதிய மைச்சர் அருண் ஜெட்லி, ஜி.எஸ்.டி. பற்றி போதிய விவாதங்கள் நடை பெற்றுவிட்டன. இனியும் அச்சட்ட த்தை நிறைவேற்றாமல் காலம் கடத்த முடியாது என்றே சுட்டிக்காட்டினார். அவரும் மாநில அரசுகளின் எதிர் ப்பை சரிக்கட்டுவதற்கான முயற்சிக ளிலும், பேச்சுவார்த்தைகளிலும் இற ங்கினார். அப்படிப்பட்ட ஜி.எஸ்.டி. சட்டம் கொண்டு வருவது பற்றி இந் திய நிதி அமைச்சர் அருண் ஜெட் லிக்கு எழுதியுள்ள கடிதத்தில், பெட்

**மோடி தலைமையிலான மத்திய அரசுடன் இருக்கும் நெருங்கிய நட்பை விரைவில் முறித்துக்கொள்ளும் மனநிலைக்கு ஜெயலலிதா வந்து விட்டது போலவே தெரிகிறது. மத்திய அரசுக்கு எதிராக மற்றைய மாநிலங்கள் முதலமைச்சர்களின் ஆதரவைத் திரட்டும் ஜெயலலிதாவின் கடித போக்குவரத்தை பிரதமர் எப்படி எடுத்துக்கொள்ளப்போகிறார் என்பது சற்று சிக்கலான கேள்விதான்**

ரோலியம் பொருள்களை ஜி.எஸ்.டி வரி விதிப்பில் கொண்டு வரக்கூடாது. ஜி.எஸ்.டி. அமுல்படுத்துப்படுவதால் மாநில அரசுக்கு ஏற்படும் இழப் பீட்டை அளிப்பது தொடர்பான விதி கள் அரசியல் சட்ட திருத்தத்திலேயே இடம்பெற வேண்டும். மாநிலத்திற் குள் அல்லது மாநிலங்களுக்கு இடை யில் ரூ.1.50 கோடி வர்த்தகம் செய் யும் டீலர்களின் கட்டுப்பாடு மாநில அரசிடமே இருக்க வேண்டும். புகை யிலை போன்ற பொருள்களுக்கு அதிக வரி விதிப்பதும் மாநில அர சிடமே இருக்க வேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகளை ஜெயல லிதா முன்வைத்துள்ளார். செப்டம்பர் 10ஆம் திகதி நிதியமைச்சர் அருண் ஜெட்லிக்கு எழுதியுள்ள அக்கடிதம் போல் முன்பே பிரதமராக பொறுப் பேற்றவுடன் மோடிக்கும் எழுதினார். அவரைச் சந்தித்த போது கூட இது பற்றிய கோரிக்கையினை முன்வைத் தார் முதல்வர் ஜெயலலிதா.

அருண்ஜெட்லிக்கு எழுதியுள்ள கடி தத்தின் ஈரம் காய்வதற்கு முன்பே அதாவது அக்கடிதம் நிதி அமைச்ச ரின் கைக்குக் கிடைக்கும் அதே நேரத் தில் மறுநாள் செப்டெம்பர் 11ஆம் திகதி அனைத்து மாநில முதல்வர்க ளுக்கும் மத்திய நிதி அமைச்சருக்கும் எழுதிய கடிதத்தை அனுப்பி, என் கருத்தை ஏற்றுக்கொள்வீர்கள் என்று கருதுகிறேன் என்று கூறியிருக்கிறார் ஜெயலலிதா. இது மாதிரி முயற்சி களை முன்பு பிரதமர் மன்மோகன்சிங் இருந்த போதும் தமிழக முதலமைச் சர் ஜெயலலிதா செய்தார். அதே முயற்சியை இப்போது பிரதமர் மோடி அரசாங்கத்தில் முதன் முதலா கத் தொடங்கியுள்ளார்.

பிரதமர் மோடியைப் பொறுத்தமட் டில் மாநிலங்களின் உணர்வுகளை மதிக்க வேண்டும் என்று தன் தேர்தல் பிரசாரத்தின் போதே சுட்டிக்காட்டிய வர். வெளிநாட்டு தலைவர்களின் கூட்டங்கள் கூட ஏன் டில்லியில் மட் டுமே நடக்க வேண்டும். மாநிலங்க ளின் தலைநகரில் நடைபெற்றால் என்ன? அடுத்த கூட்டம் (அதாவது நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிறகு) சென்னையில் நடத்தினால் என்ன? என்றெல்லாம் தமிழகத்திற்கு தேர்தல் பிரசாரத்திற்கு வந்த போதே சொன்ன வர். ஆனால் அவர் மத்தியில் ஆட்சி க்கு வந்த பிறகு வெளிநாட்டுத் தலை வர்கள் கூட்டமோ அல்லது வெளி நாட்டுப் பிரதிநிதிகளுடனான சந்திப்போ டில்லிக்கு வெளியில் நடைபெற்றதாகத் தெரியவில்லை. மாநிலங்களின் தலைநகரங்களிலும் நடக்கவில்லை. இது ஒரு புறமிருக்க, பிரதமர் நரேந்திர மோடியிடம் மாநில முதல்வர்கள் நிறைய எதிர்பார்த்தார் கள். அதுவும் குறிப்பாக தமிழக முதல் வர் ஜெயலலிதா அதிகமாகவே தமிழ கத்திற்கு திட்டங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார் என்பதில் சந்தே கம் இல்லை. ஏனென்றால் இருவ ருக்கும் இடையே நிலவும் அரசியல் ரீதியான நட்பு அப்படி. தேர்தலுக்கு முன்பு வரை குஜராத் முதல்வராக நரேந்திரமோடி பொறுப்பேற்கும் போது ஜெயலலிதா அங்கே சென்று பதவிப் பிரமாண நிகழ்ச்சியில் பங்கேற்றார். அதே போல் 2011இல் ஜெயலலிதா வெற்றி பெற்று தமிழக முதல்வரான போது நரேந்திர மோடி சென்னைக்கே வந்து பதவியேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். இது எல்லாமே பாராளுமன்றத் தேர்தல் நடந்த போதுதான் பகையாகிப் போனது. அதாவது பிரசாரத்தின் உச்ச கட்டத்தில் மோடியா அல்லது இந்த லேடியா என்ற கேள்வியை தமிழக வாக்காளர்களிடம் வைத்து பரபர ப்பை ஏற்படுத்தினார் முதல்வர் ஜெய லலிதா. இந்தியாவில் நரேந்திர மோடிக்கு இப்படி நேரடியாக சவால் விடுத்தவர் ஜெயலலிதா மட்டுமே!

ஆனாலும் பிரதமர் மோடி பதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேற்ற பிறகு அதே பழைய அரசியல் ரீதியான நட்பு தொடரும் என்ற நோக்கில்தான் பிரதமரை ஜூன் மூன்றாம் திகதி சந்தித்தார். தமிழகத்திற்கான பல இலட்சம் கோடி மதிப்பிலான வளர்ச்சி திட்டங்களுக்கு அனுமதியளிக்கும் படி வேண்டுகோள் விடுத்தார். எந்த மாநில முதல்வரும் கொடுக்காத அவ்வளவு பெரிய தொகைக்கான திட்டங்களை மத்திய அரசிடமிருந்து கேட்ட ஒரே மாநில அரசு தமிழக அரசாகத்தான் இருக்க முடியும். கோரிக்கை வைத்த ஒரே முதல்வர் ஜெயலலிதாவாகத்தான் இருக்க முடியும். ஆனால் மோடி அரசின் நிதி நிலை அறிக்கையிலும் சரி, ரயில்வே பட்ஜெட்டிலும் சரி முதல்வர் ஜெயலலிதா எதிர்பார்த்த நிதியுதவிகள் தமிழகத்திற்கு இல்லை. அது அப்படியென்றால் தமிழக மீனவர்கள் பிரச்சினையில் ஏதாவது மத்திய அரசு தலையிட்டு நிரந்தரத் தீர்வு காணும் என்று கருதினார். அதுவும் நடக்கவில்லை. ஆரம்பகட்டத்தில் பிடிபட்ட மீனவர்களை விடுதலை செய்ய மத்திய அரசு துரித நடவடிக்கை மேற்கொண்டது. அதற்கு பாராட்டுதலும் தெரிவித்தார். ஆனால் நிரந்தரத் தீர்வுக்கு எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்ற கோபம் தமிழக முதல்வருக்கு இருக்கிறது. அதனால் தான் ஜி.எஸ்.டி பற்றி நிதி அமைச்சருக்கு கடிதம் எழுதியுள்ள முதல்வர், மறுநாளே பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக மீனவர்களின் பிரச்சினை பற்றி கடிதம் அனுப்பியிருக்கிறார்.

இந்தப் புதிய கடிதத்திற்கு, மோடி அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கோபம் ஒருபுறம் இருந்தாலும், தமிழக மீனவர்களின் படகுகளை விடுவிக்க மாட்டோம் என்று இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷ இந்திய ஆங்கில நாளிதளான தி இந்து பத்திரிகைக்கு அளித்த பிரத்தியேகப் பேட்டியும் இன்னொரு முக்கிய காரணம். இந்தப் பேட்டியைச் சுட்டிக்காட்டியிருக்கும் ஜெயலலிதா, கச்சதீவு அருகில் 30 தமிழக மீனவர்களையும், 6 படகுகளையும் பிடித்துள்ளது இலங்கை கடற்படை. நாகபட்டினம் மீனவர்கள் 23 பேரையும், 6 தஞ்சாவூர் மீனவர்களையும் பிடித்துச் சென்றுள்ளது. இது தவிர ஜூன் 1ஆம் திகதியிலிருந்து பிடித்து வைக்கப்பட்டுள்ள 64 படகுகளையும் இலங்கை அரசாங்கம் விடுவிக்கவில்லை என்று சரமாரியாக குற்றம் சாட்டியிருக்கிறார். இந்த சூழ்நிலையில் பிடிக்கப்பட்ட படகுகள் விடுவிக்கப்படாது என்ற இலங்கை ஜனாதிபதியின் பேட்டியைக் கண்டித்துள்ளார். இறுதியாக, இலங்கை அரசின் உயர்மட்டத்தில் இருப்பவர்களுக்கு இனிமேலும் தமிழக மீனவர்களை இப்படிப் பிடிப்பதை சகித்துக்கொள்ள முடியாது என்று தெளிவான, உறுதியான செய்தியை இந்திய அரசு விடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

அதைவிட முக்கியமாக தமிழக மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண கச்சதீவை மீட்டே தீர வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள முதல்வர் ஜெயலலிதா, கடலுக்குள் வெகுதூரம் சென்று மீன் பிடிக்க வசதியாக படகுகளை வாங்கிக் கொடுக்க 50 சதவீத மானியம் ஜூன் மாதமே மத்திய அரசிடம் கேட்டேன். அதையும் இதுவரை மத்திய அரசு கொடுக்க முன்வரவில்லை என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார். ஜி.எஸ்.டி மற்றும் தமிழக மீனவர்கள் விடயத்தில் மத்திய அரசுடன் கடும் மோதலுக்கான துவக்கம் இது என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு முன்னோட்டமாக தமிழக அரசியல் சூழ்நிலைகளும் அமைந்து விட்டன. மாநிலத்தில் உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அ.தி.மு.க.வை எதிர்கொள்வது பா.ஜ.க.வும், கம்யூனிஸ்ட் கட்சிகளும் மட்டும்தான். ஏனைய கட்சிகள் அனைத்தும் தி.மு.க. உட்பட உள்ளாட்சித் தேர்தலைப் புறக்கணித்துவிட்டன. இத்தேர்தலில் பா.ஜ.க.விற்கும், மாநில அரசு அதிகாரிகளுக்கும்தான் போட்டியாக இருக்கிறது. உதாரணமாக நெல்லை மேயர் பதவிக்குப் போட்டியிட்ட பா.ஜ.க.வேட்பாளர் திடீரென்று தன் வேட்பு மனுவை வாபஸ் வாங்கிவிட்டார். அதனால் திருநெல்வேலி மேயர் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டுவிட்டார். புதுக்கோட்டை நகர் மன்ற தேர்தல் பதவிக்கு வேட்பு மனு தாக்கல் செய்ய வந்த பா.ஜ.க. வேட்பாளர் மிரட்டப்பட்டார் என்று புகார் கிளம்பியுள்ளது. மதுரை மாநகராட்சி 85ஆவது வார்டு தேர்தலுக்குப் போட்டியிட்ட பா.ஜ.க. வேட்பாளர் மனுவும் திடீரென்று வாபஸ் ஆகிவிட்டதாக அறிவிக்கப்பட்டது. சென்னை அருகில் உள்ள தாம்பரம் நகராட்சியில் உள்ள காலியிடங்களுக்குப் போட்டியிட்ட பா.ஜ.க. வேட்பாளர்களின் வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதாக திடீரென்று அறிவிக்கப்பட்டுவிட்டது. பல்லாவரம், ஆவடி போன்ற நகராட்சிகளில் நடைபெறும் உள்ளாட்சி தேர்தலிலும் இதே போன்று வாபஸ் படலம் அரங்கேறிவிட்டது. இதைவிட வேடிக்கை ஆலந்தூர் நகரசபை பா.ஜ.க. வேட்பாளரை திடீரென்று காணவில்லை. அவரும் வேட்பு மனுவை வாபஸ் பெற்றுவிட்டதாக பிறகு அறிவிக்கப்பட்டது.

அடுத்தடுத்து பா.ஜ.க. வேட்பாளர்களின் வேட்பு மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுவதும், திடீரென்று வாபஸ் பெறப்படுவதும் அக்கட்சியின் மாநிலத் தலைவர் தமிழிசை சவுந்திரராஜனை கொந்தளிக்க வைத்தது. இந்த உள்ளாட்சித் தேர்தலையே ரத்துச் செய்ய வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் போகிறேன் என்று கூறியிருக்கும் அவர், உள்ளாட்சித் தேர்தலில் அ.தி.மு.க.வினர் அராஜகம் செய்கிறார்கள் என்று பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டியிருக்கிறார். இறுதியில் வேட்பாளர்கள் களத்தில் நிற்கிறார்கள். அவர்கள் செப்டெம்பர் 18ஆம் திகதி தேர்தலை சந்திப்பார்களா என்பது சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கினைப் பொறுத்து இருக்கிறது. ஆனால் தமிழிசை சவுந்திரராஜன் தவிர இல. கணேசன், எச்.ராஜா, பொன்.ராதாகிருஷ்ணன் போன்ற பா.ஜ.க. தலைவர்கள் பெருமளவில் இந்தப் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பேசவில்லை. மத்தியில் மோடி அரசுக்கும், மாநில அரசுக்கும் பிரச்சினை என்றால், தமிழகத்தில் அ.தி.மு.க. விற்கும், பா.ஜ.க.வுக்கும் நேரடியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முட்டலும், மோதலுமாக இருக்கிறது.

இது ஒருபுறமிருக்க, டாக்டர் சுப்ரமணியன் சுவாமி. இவருக்கும் ஜெயலலிதாவிற்கும் அரசியல் ரீதியாக அநேகமாக சரிப்பட்டு வருவதில்லை. ஜெயலலிதா ஆட்சியில் இருக்கும் காலங்களில் எல்லாம் சுவாமி அவருடன் மோதத் தவறவில்லை. 1996இல் முதல் முறையாக முதல்வரான போதும் நல்லாட்சி இயக்கம் என்று தொடங்கி ஜெயலலிதாவிற்கு எதிராக பெரும் பிரசாரமே செய்தார் சுவாமி. அதன் ஒரு பகுதியாகத்தான் பெங்களூர் நீதிமன்றத்தில் தற்போது ஜெயலலிதா மீது போடப்பட்டிருக்கும் சொத்துக் குவிப்பு வழக்கு வந்தது. அந்த வழக்கின் துவக்கம் சுப்ரமணியம்சுவாமி தமிழக ஆளுநராக இருந்த சென்னாரெட்டிக்கு கொடுத்த புகாரின் அடிப்படையில்தான் எழுந்தது. அவர் இப்போதும் ஜெயலலிதாவிற்கு எதிராக அரசியல் நகர்வுகளைச் செய்யத் தொடங்கிவிட்டார். அவருக்கும், தமிழக அரசுக்கும் முதலில் இலங்கைத் தமிழர் பிரச்சினையிலும், பிறகு தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்வதிலும் பிரச்சினை வெடித்தது. அது பற்றி சில கருத்துக்களை சுவாமி சொல்ல, தமிழக அரசின் சார்பில் ஜெயலலிதா அடுத்தடுத்து இரு மான நஷ்ட ஈடு வழக்குகளை சுப்ரமணியன் சுவாமி மீது தொடுத்திருக்கிறார். சுப்ரமணியன் சுவாமி அடுத்தடுத்து இரு மான நஷ்ட வழக்குக்களை தமிழக நீதிமன்றத்தில் சந்திக்க வேண்டிய சூழல் உருவாகியிருக்கிறது.

ஆகவே பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அரசுடன் இருக்கும் நெருங்கிய நட்பை விரைவில் முறித்துக் கொள்ளும் மன நிலைக்கு முதல்வர் ஜெயலலிதா வந்துவிட்டது போலவே தெரிகிறது. அதனால்தான் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழக மீனவர்களுக்கு நிரந்தரத் தீர்வைக் காணும் பிரச்சினையை இனி மேலும் பின்னுக்குத் தள்ளி வைக்க முடியாது என்று திட்டவட்டமாக மத்திய அரசுக்கு அறிவித்துள்ளார். கச்சதீவை மீட்பது மட்டுமே நிரந்தரத் தீர்வுக்கு வழிவிடும் என்பதை தெளிவாக எடுத்து வைத்துள்ளார். மாநில அளவில் உள்ளாட்சித் தேர்தல் களத்தில் அ.தி.மு.க. மட்டுமே நிற்கிறது. அதற்கு போட்டியாக இருக்கும் பா.ஜ.க. ஒரு பொருட்டே அல்ல என்பதுதான்- அக்கட்சியின் வாக்கு வங்கி அடிப்படையில் அனைவரின் கருத்தும். அப்படியிருக்கையில் அக்கட்சியின் வேட்பாளர்களை வாபஸ் வாங்க வைத்தும், தள்ளுபடி செய்ய வைத்தும், தமிழகத்தில் பா.ஜ.க. ஒரு உள்ளாட்சித் தேர்தலில் கூட ஒழுங்காக வேட்பாளர்களை நிறுத்த முடியாத கட்சி என்பதை பறைசாற்றும் நோக்கில் ஏன் அ.தி.மு.க.வினர் செயல்படுகிறார்கள்? அதை ஏன் முதல்வர் ஜெயலலிதா தடுக்கவில்லை?- இவை இரண்டிற்குமே காரணம் அ.தி.மு.க. தலைமைக்கும், பா.ஜ.க. தலைமைக்கும் அரசியல் ரீதியான நட்பு சொல்லிக் கொள்ளும் விதத்தில் இல்லை என்பதே!


**பிரதமர் மோடியிடம் மாநில முதலமைச்சர்கள் நிறையவே எதிர்பார்த்தார்கள். குறிப்பாக தமிழக முதலமைச்சர் அதிகமாகவே தமிழகத்திற்கு திட்டங்கள் கிடைக்கும் என்று எதிர்பார்த்தார். ஆனால் இனிமேல் மத்திய அரசை நம்பிப் பிரயோசனமில்லை. பிரதமரையும் நம்ப முடியவில்லை என்ற முடிவிற்கு ஜெயலலிதா வந்துவிட்டது போன்ற காட்சிகளே தோன்றுகின்றன**

இதெல்லாம் தமிழகத்திற்குள் நடக்கும் அரசியல். ஆனால் மத்திய அரசுக்கு எதிராக மற்ற மாநில முதல்வர்களின் ஆதரவைத் திரட்டும் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் கடிதப் போக்குவரத்தை பிரதமர் நரேந்திர மோடி எப்படி எடுத்துக் கொள்ளப் போகிறார் என்பது சற்று சிக்கலான கேள்விதான். ஏற்கனவே முதல்வர் ஜெயலலிதாவின் தேசிய அரசியல் விருப்பம் தான் பிரதமருக்கும், அவருக்கும் உள்ள அரசியல் நட்பை விலக்கிவைத்தது என்று சொல்லலாம். ஒரு உறைக்குள் இரு கத்திகள் இருக்க முடியாது என்பது போல் பிரதமர் பதவிக்கு விருப்பப்படும் இரு வேட்பாளர்கள் ஒரே அணியில் இருப்பதும் கடினம். அதுதான் மோடிக்கும், ஜெயலலிதாவிற்கும் ஏற்பட்ட ஆரம்ப கட்ட கருத்து வேறுபாடு. இப்போது ஜி.எஸ்.டி. விவகாரத்தில் மற்ற மாநில முதல்வர்களின் கருத்துகளையும் தனக்கு ஆதரவாகத் திரட்டும் முயற்சியில் ஜெயலலிதா இறங்கியிருப்பது அந்த கருத்து வேறுபாட்டை மேலும் விரிவுபடுத்துகிறது. ஜெயலலிதாவிற்கு இருக்கும் தேசிய அரசியல் ஆசையையும், அதே நேரத்தில் மாநிலங்களின் உரிமைகளைக்காக்கும் விடயத்தில் இருக்கும் அக்கறையையும் இந்த மோதல்களின் பின்னணிகளாக அமைந்து விடுமோ என்று அ.தி.மு.க. எம்.பி.க்களே அச்சப்படுகிறார்கள். இந்த விவகாரம் முற்றினால் அ.தி.மு.க.விற்கும், பா.ஜ.க.விற்குமான உறவு சலசலப்பு நிறைந்ததாக இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் தெரியத் தொடங்கியுள்ளன. சில வாரங்களுக்கு முன்புதான் பாராளுமன்ற துணை சபாநாயகர் பதவியை அ.தி.மு.க. ஏற்றுக் கொண்டது. அதன் பிறகு மத்திய அமைச்சர்கள் ரவிசங்கர் பிரசாத், வெங்கய்யா நாயுடு போன்றவர்கள் எல்லாம் சென்னைக்கே வந்து முதல்வரை சந்தித்து விட்டுச் சென்றார்கள். ஆனால், மத்திய அரசு மற்றும் மாநில அரசு உறவைப் பொறுத்தமட்டில், இனி மத்திய அரசை நம்பிப் பிரயோசனமில்லை. பிரதமரையும் நம்ப முடியவில்லை என்ற முடிவிற்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா வந்துவிட்டது போன்ற காட்சிகளே கண்ணுக்குத் தெரிகின்றன. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க விவகாரம்



# கறுப்பு நகரம், வெள்ளைப் பொலிஸ், மைக்கேல் பிறவுண்

பேர்குசன் நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமும் அதைத் தொடர்ந்து மூண்ட வன்முறைகளும் சமூக சமத்துவமின்மை பற்றிய யதார்த்த நிலைமைகளைக் கருத்திலெடுக்காமல் மேற்கொள்ளப்படுகின்ற பொலிஸ் பணி ஆபத்தானதாக அமைந்துவிடக்கூடும் என்பதை புலப்படுத்துகிறது.



ஆர்.கே.இராகவன்

அமெரிக்காவின் மிசோரி மாநிலத்தின் பேர்குசன் நகரில் ஆகஸ்ட் 9 ஆம் திகதி மாலை 18 வயதான ஆபிரிக்கா- அமெரிக்க இளைஞனான மைக்கேல் பிறவுண் பொலிஸாரால் சுடப்பட்ட சம்பவத்தையடுத்து அந்நகரிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் பெரும் குழப்பநிலை மூண்டது. ஒரு வாரகாலமாக நீடித்த வன்முறைகளின் போது கும்பல்களினால் போத்தல்கள், பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டன. பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டினால் பிறவுணின் உடலில் குறைந்தது 6 காயங்கள் ஏற்பட்டன. தனது நண்பனான டோறியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜோன்சனுடன் பிறவுண் வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தபோது இருவரையும் ஒரு வெள்ளையின பொலிஸ்காரர் கைகாட்டி அழைத்தார். நடைபாதையால் செல்லாமல் நடுவீதியால் நடந்து சென்றமைக்காக அவர்களை அந்தப் பொலிஸ்காரர் எச்சரிக்கை செய்தார் போலும். இரு இளைஞர்களும் தன்னுடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டதாக பொலிஸ்காரரும் அட்டகாசமான முறையில் பொலிஸ்காரர் நடந்துகொண்டார் என்று இளைஞர்களும் பரஸ்பரம் குற்றஞ்சாட்டியதால் உண்மையில் நடந்தது என்ன என்பது சற்றுக் குழப்பமானதாகவே இருக்கிறது. விசாரணையில் முக்கியமான ஒரு சாட்சியான ஜோன்சன், நிராயுதபாணியான தனது நண்பனை நோக்கி அந்த பொலிஸ்காரர் எந்தவிதமான ஆத்திரமூட்டலுமின்றி பல தடவைகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக ஆணித்தரமாகக் கூறுகிறார்.

மதுபானக் கடையொன்றில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவமொன்றில் பிறவுண் சம்பந்தப்பட்டதாக சந்தேகிக்கப்பட்டதால் அவரை பொலிஸ்காரர் எதிர்கொண்டதாகக் கூறப்பட்டது. ஆனால், அந்தக் கடைக்குள் பதிவானதாக பொலிஸாரினால் வெளியிடப்பட்ட வீடியோவில் காணப்படும் நபர் உண்மையில் பிறவுண்தான் என்பது தெளிவாக நிரூபிக்கப்படவில்லை. தன்னால் இடைமறிக்கப்பட்ட ஆள் குற்றச்செயல் ஒன்றின் சந்தேகநபர் என்பதை பிறவுணைச்சுட்ட பொலிஸ்காரர் தெரிந்திருந்தார் என்பதை நிரூபிப்பதற்கான சான்றும்கூட இல்லை. அவ்வாறு அவருக்குத் தெரிந்திருந்தாலும் கூட, பிறவுணை நோக்கி பொலிஸ்காரர் 6 தடவைகள் துப்பாக்கியால் சுட்டார் என்பதை அறிந்து அச்சமூகம் ஆத்திரமடைந்தது. பிறவுணின் சடலம் பொலிஸாரால் கவனிக்கப்படாமல் பலமணி நேரமாக வீதியில் கிடந்ததை சமூகத்தினால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

இத்துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட பொலிஸ்காரரின் அடையாளத்தை வெளியிடுவதில்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிஸ் திணைக்களத்தின் தரப்பில் பல நாட்களாக தயக்கம் காட்டப்பட்டதும் விசித்திரமான ஒரு விடயமாகும். மக்களின் சீற்றம் உச்ச நிலையை அடைந்த போது பெர்குசன் நகர பொலிஸார் விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று. அந்தப் பொலிஸ்காரரின் பெயர் டாரென் வில்சன் என்று அறிவிக்கப்பட்டது. பிறகு அவர் வேலையில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டார். பூர்வாங்க விசாரணைக்கு (A grand jury Investigation)க்கு உத்தரவிடப்பட்டது. அந்த விசாரணையின் முடிவுகள் அக்டோபர் வரை வெளிவருவதற்கான சாத்தியமில்லை. முடிவுகள் வெளியான பின்னர் மாத்திரமே பொலிஸ்காரருக்கு எதிராக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படுவது சாத்தியமாகும். வில்சனைக் கைது செய்வதற்கு பெர்குசன் பொலிஸ் மறுத்தது அப்பட்டமான பக்கச்சார்பான செயல் என்று கடுமையாகக் கண்டனம் செய்யப்பட்டது.

மிசோரி மாநிலத்தின் சென். லூயிஸ் மாவட்டத்தின் வடபகுதியில் சுமார் 20 ஆயிரம் மக்கள் வாழும் ஒரு நகரமே பெர்குசன். சில தசாப்தங்களுக்கு முன்னர்வரை அது பெரும்பான்மையாக வெள்ளையினத்தவரையே கொண்டிருந்தது. ஆனால், இப்போது நகர சனத்தொகையில் பெரும்பான்மையினர் ஆபிரிக்க- அமெரிக்கர்களாகவே இருக்கிறார்கள். ஒரு விசித்திரமென்னவென்றால், நகரசபையின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் வெள்ளையினத்தவர்கள். மேயரும் வெள்ளையரே. இது அந்த நகரின் குடிசனப் பரம்பலின் இனவிகிதாசாரத்தைப் பிரதிபலிக்கவில்லை. பெர்குசனின் பொலிஸ் திணைக்களத்தில் 50 உத்தியோகத்தர்கள் இருக்கிறார்கள். அவர்களில் மூன்று பேர் மாத்திரமே ஆபிரிக்க- அமெரிக்கர்கள். மக்களின் ஆர்ப்பாட்டம் பல நாட்களாகத் தீவிரமடைந்திருந்தமை அந்தப்பகுதியில் பொலிஸாருக்கு எதிரான உணர்வுகள் எந்தளவுக்கு பாரதூரமானதாக இருக்கிறது என்பதை வெளிக்காட்டியது. பொலிஸாரின் தவறான நடத்தைகள் மற்றும் ஒழுக்கக்கேடுகள் குறித்து சமஷ்டி புலனாய்வுப் பணியகத்தின் சிவில் உரிமைகள் பிரிவினரால் விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் நிலைவரங்களை மேற்பார்வை செய்வதற்கும் மனமுடைந்துபோன ஆபிரிக்க-அமெரிக்க சமூகத்தவரின் உணர்வுகளை சாந்தப்படுத்துவதற்குமாக சட்டமா அதிபர் எரிக் ஹோல்டர் பெர்குசன் நகருக்கு விஜயம் செய்தார். (அமெரிக்காவின் சட்டமா அதிபராக பதவிவகிக்கும் முதல் கறுப்பினத்தவரான ஹோல்டர் தனது இளமைக்காலத்தில் பொலிஸாரினால் தான் அவமதிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்களை நினைவு கூரவும் தவறவில்லை).

## கடந்தகால நிகழ்வுகள்

பெர்குசன் நிகழ்வுகள் 1991 மார்ச்சில் இடம்பெற்ற ரொட்னி கிங் தாக்குதல் சம்பவம் மற்றும் 2012 பெப்ரவரியில் சான்போர்ட்டில் (புளோரிடா) இடம்பெற்ற ரேவோன் மார்ட்டின் மரணம் ஆகியவற்றையடுத்து மூண்ட மக்கள் கொந்தளிப்புகளை நினைவுக்குக் கொண்டு வருகின்றன.

ரொட்னி கிங்கின் வாகனத்தை நீண்ட தூரம் துரத்திக்கொண்டு வந்த லொஸ் ஏஞ்சல்ஸ் பொலிஸார் அவரை இடைமறித்து கொடூரமாகத் தாக்கினர். இச்சம்பவம் தொடர்பான வீடியோ பரவலாக ஒளிபரப்பப்பட்டதையடுத்து தேசிய ரீதியில் மக்கள் சீற்றமடைந்தனர். பல நகரங்களில் பதற்றநிலை ஏற்பட்டது. அச்சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட நான்கு பொலிஸாரும் 1992 ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்டனர். அதையடுத்து பரவலாக மூண்ட கலவரங்களில் 50 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டனர். மார்ட்டினின் கொலை இவையெல்லாவற்றையும் விட மூர்க்கத்தனமானதாக இருந்தது. 17 வயதான உயர்பாடசாலை மாணவன் மார்ட்டினை வெறுமனே சந்தேகத்தின் பேரில் மறித்து வாக்குவாதப்பட்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் (Neighbour hood watch officer) சுட்டுக்கொன்றார்.

இந்த துரதிர்ஷ்டவசமான மூன்று சம்பவங்களிலுமே பலியாட்கள் கறுப்பின இளைஞர்களாகவே இருந்தார்கள். புளோறிடா சம்பவத்தைத் தவிர மற்றைய இரு சம்பவங்களிலும் சம்பந்தப்பட்ட பொலிஸ்காரர்கள் வெள்ளையினத்தவர்களாக இருந்தார்கள்.

பொது இடமொன்றில் இடைமறிக்கப்படுகின்ற ஒரு நபர் ஏதோவொரு குற்றச் செயலில் ஈடுபட்டுவிட்டு தலைமறைவாகத் திரிகிற பேர்வழி என்று அல்லது குற்றச் செயல் ஒன்றைச் செய்வதற்குத் தயாராகின்ற ஒரு பேர்வழி என்ற நினைப்பில் பின்விளைவுகளைப் பற்றிச் சிந்திக்காமல் எடுத்த எடுப்பிலேயே நடவடிக்கைகளில் இறங்குகின்ற முனைப்பு பொலிஸாரிடம் காணப்படுகிறதென்று அமெரிக்காவில் நிலவுகின்ற பரவலான நம்பிக்கையை மேற்கூறப்பட்ட வகையான சம்பவங்கள் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. பொலிஸாரின் அத்துமீறல்களினால் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் தாங்கள் மாத்திரமே என்ற எண்ணம் சிறுபான்மையினத்தவர்கள் மத்தியில் பரவலாக இருக்கிறது.

பொலிஸாரின் பாரபட்சமான நடைமுறைகள் தொடர்பான விவாதம் பல தசாப்தங்களுக்கு முன்னர் இருந்தே தொடர்ந்து கொண்டிருக்கிறது. 1990 களில் பிலடெல்பியாவில் அமைந்துள்ள ரெம்பிள் பல்கலைக்கழகத்தில் குற்றவியல் நீதித்துறை மாணவனாக நான் கற்றுக்கொண்டிருந்தேன். பிலடெல்பியா பெரிய ஆபிரிக்க - அமெரிக்க சனத்தொகையைக் கொண்டது. அந்த நேரம் பொலிஸ் பிரதம அதிகாரியாக கறுப்பினத்தவர் ஒருவரே பதவிவகித்தார். சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற விடயத்தில் பல அம்சங்களில் பிலடெல்பியா பொலிஸ் திணைக்களத்துக்கு நல்ல பெயர் இருக்கவில்லை. அந்த பொலிஸ்படை ஊழல் நிறைந்ததாக மாத்திரமல்ல பாரபட்சமான நடைமுறைகளைப் பின்பற்றுகிறது என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது. அமெரிக்கப் பொலிஸ் வெள்ளையினத்தவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகப் பெரும்பான்மையாகக் கொண்டது என்பது துரதிர்ஷ்டவசமானதாகும். பொலிஸ் திணைக்களத்தில் கறுப்பினத்தவரின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட அக்கறையுடனான சில முயற்சிகள் ஓரளவுக்கே வெற்றியாக அமைந்தன. தற்போது அமெரிக்காவில் உள்ள பொலிஸில் 11 சதவீதமானவர்கள் மாத்திரமே கறுப்பினத்தவர்கள். 75 சதவீதமானோர் வெள்ளையினத்தவர்கள். மிகுதிப்பேர் ஹிஸ்பானியர்களாக அல்லது ஆசிய/பசுபிக்காரர்களாக இருக்கிறார்கள்.

பொலிஸ் திணைக்களத்தில் கறுப்பினத்தவர்களின் பிரதிநிதித்துவம் ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாக இருப்பதற்கு இரு காரணிகள். ஒன்று, கறுப்பின விண்ணப்பதாரிகள் போதுமான எண்ணிக்கையில் தெரிவு செய்யப்படுவதை ஊக்குவிப்பதற்காக ஆட்சேர்ப்புக்கான தராதரங்களில் கணிசமான தளர்வு செய்யப்படுவதில்லை. அடுத்தது, பொலிஸ் படையில் சேர்ந்ததும் ஒரு வெள்ளையின மேலதிகாரியினால் தொல்லைகளுக்குள்ளாக்கப்படக்கூடிய சாத்தியம் இருக்கிறதென்று சராசரி கறுப்பின இளைஞர், யுவதிகள் நினைக்கிறார்கள்.

பல நகரங்களில் சமூகத்துடனான பொலிஸ் உறவுகள் பொதுவில் விரிசல் நிறைந்ததாக இருக்கின்றன. இந்தக் குறைபாடே அமெரிக்கா பூராகவும் துப்பாக்கி வன்முறைகள் அதிகரிப்பதற்கு நேரடியாகப் பொறுப்பாக இருக்கிறது.

சட்டத்தைப் பேணுகின்ற விடயத்தில் பொலிஸார் கடுமையான நடைமுறைகளைப் பின்பற்றவேண்டுமென்ற வசதிபடைத்த வகுப்பினரின் கோரிக்கைக்கும் இன அடிப்படையில் பாரபட்சமாக நடந்துகொள்ளாமலும் கூடுதலான அளவுக்கு மனிதாபிமான முறையில் நடந்துகொள்ள வேண்டுமென்ற சிறுபான்மையினத்தவர்களின் வேண்டுதலுக்கும் இடையே பொலிஸார் சமநிலையைப் பேண வேண்டியிருந்தது. இதன் காரணத்தினால் தான் பொலிஸாரை 'இராணுவமயமாக்கும்' அண்மைய செயன்முறைகள் எதிர்பார்த்த விளைவுகளைத் தரவில்லை. அத்துடன் சிறுபான்மையினத்தவர்கள் ஆத்திரமடைந்தனர். கடந்த வருடத்தில் இடம்பெற்ற பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகங்களில் 400க்கும் அதிகமான கொலைகள் இடம்பெற்றதை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது சிறுபான்மையினத்தவர்களின் ஆத்திரத்தில் நியாயம் இருக்கிறது.



## பொலிஸாருக்கான பாடங்கள்

தற்போதைய காலகட்டத்தில், குறிப்பாக பிளவுற்ற சமூகத்தைக் கொண்ட ஜனநாயகமொன்றில் சட்டம், ஒழுங்கைப் பேணுகின்ற பொலிஸ் பணியை மேற்கொள்வதில் இருக்கக்கூடிய கடுஞ்சிக்கல்களை பெர்குசன் சம்பவம் வெளிச்சத்துக்குக் கொண்டுவந்திருக்கிறது. இந்தியப் பொலிஸாருக்கும் இதில் பாடங்கள் இருக்கின்றன. சமூக சமத்துவமின்மையின் யதார்த்த நிலைகளை கருத்திலெடுக்காமல் மேற்கொள்ளப்படக்கூடிய விவேகமற்ற பொலிஸ் பணிகள் ஆபத்தானவையாக அமையக்கூடும். எந்தவொரு சமூகத்திலும் பிரஜைகளின் நாகரிகமான நடத்தையையும் ஐக்கியத்தின் கட்டுமானத்தையும் அது சின்னாபின்னமாக்கிவிடக்கூடும். கடுமை வாய்ந்ததாகவும் அதேவேளை, ஆட்களை நாகரிகமான முறையில் நடத்துகின்றதுமான அணுகுமுறையே சரியான உபாயமாக இருக்க முடியும். இன்று பொலிஸார் எதிர்நோக்க வேண்டியிருக்கின்ற நெருக்கடியான சூழ்நிலைக்கு மத்தியில் நடைமுறைப்படுத்துவதற்கு சாத்தியமானதும் நியாயப்படுத்தக்கூடியதுமான கோட்பாட்டு ரீதியான அணுகுமுறை இது எனலாம்.

வீதியில் தவறான முறையில் நடந்துகொள்கின்ற ஒரு பொலிஸ்காரர்கள் அதுவும் தங்களது நடத்தைக்கு காரணமாக அமைந்திருக்கக்கூடிய எந்தவொரு ஆத்திரமூட்டலையும் நிரூபிக்க முடியாதவர்கள் எந்தவகையிலும் அனுதாபத்துக்குரியவர்கள் அல்ல. அட்டகாசமாக நடந்துகொள்கிற ஒருவரை கட்டுப்படுத்துவதற்கு மாத்திரம் பலத்தைப் பயன்படுத்துகின்ற பொலிஸ்காரர்களில் இருந்து இவர்கள் வேறுபடுகிறார்கள். இங்கும் கூட, தற்காப்புக்காக அல்லது பொதுமகன் ஒருவரைப் பாதுகாப்பதற்காக பலத்தைப் பிரயோகிக்கும் பொலிஸ்காரர்கள், (குறைந்தளவு பலத்தின் ஊடாக வம்புச்சண்டைக்காரரை மடக்குவதற்கு புத்தியைப் பயன்படுத்த அவகாசம் இருந்தும் கூட) அளவுக்கு மிஞ்சிய முறையில் பலத்தைப் பிரயோகிக்கிறார்கள் என்றால் அவர்கள் மீது பெருமளவுக்கு அனுதாபம் காட்ட வேண்டியதில்லை. சுருக்கமாகச் சொல்வதானால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பொலிஸ் நடத்தை பற்றிய மதிப்பீடு முன்கவனத்துடன், மதிநுட்பத்துடன் மேற்கொள்ளப்பட வேண்டியதாகும். அரசியல் அனுகூலத்தினால் அல்லது சம்பந்தப்பட்ட பொலிஸ் துறையுடன் தொடர்பற்ற அக்கறைகளினால் வழிநடத்தப்படுவதாக அந்த மதிப்பீடு இருத்தலாகாது. ■

*(ஆர்.கே.இராகவன் இந்தியாவின் மத்திய புலனாய்வுப் பணியகத்தின் (CBI) முன்னாள் இயக்குநர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஸியாவின் இராணுவமும் பிரயோசனமான இரு முட்டாள்களும்



பிராந்திய அரசியல்

'பிரயோசனமான முட்டாள்' (Useful idiot) என்ற பதத்தை லெனின் பயன்படுத்தியதாகக் கூறப்படுவதுண்டு. தனக்கு அறவே விளங்காத ஒரு குறிக்கோளுக்கோ அல்லது கோட்பாட்டுக்கோ ஆதரவாக தீவிரமாக பிரசாரம் செய்கின்ற அல்லது பிரசாரம் செய்யப்பயன்படுத்தப்படுகின்ற அரசியல் செயற்பாட்டாளரை அல்லது நபரையே இப்பதத்தின் மூலம் லெனின் குறிப்பிட்டார். இஸ்லாமாபாத் வீதிகளில் காணப்படக்கூடியதாக இருக்கின்ற கொந்தளிப்பான நிலைவரங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது பாகிஸ்தானின் மகத்தான கிரிக்கெட் காப்டனாக விளங்கிய இம்ரான்கான் இப்போது மிகவும் பிரயோசனமான பயனுடைய முட்டாளாக மாறியிருக்கிறார் என்ற முடிவுக்கு வருவதை தவிர்ப்பது பெரும் கஷ்டமானதாக இருக்கிறது.

மார்க்க அறிஞராக இருந்து பிறகு அரசியல்வாதியாக மாறி கனடாவில் வசித்துவரும் தாஹிர் -உல்- கத்ரி பாகிஸ்தானிய சமூகத்தை தூய்மைப்படுத்தப்போவதாகச் சூளுரைத்துக்கொண்டு அங்கிருந்து நாடு திரும்பியிருக்கிறார். அவருடன் சேர்ந்து கொண்டு இம்ரான் கான் பிரதமர் பதவியில் இருந்து நவாஸ் ஷெரீப் இராஜினாமா செய்ய வேண்டுமெனக் கோரிக்கை விடுத்து வீதி ஆர்ப்பாட்டங்களுக்குத் தலைமை தாங்கிக் கொண்டிருக்கிறார். 2013 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக்



அசோக் மாலிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(நவாஸ்) பெருவெற்றி பெற்றது. தேர்தலில் மோசடிகள் பெருமளவில் இடம்பெற்றதாக இம்ரான்கான் இப்போது குற்றஞ்சாட்டுகிறார்.

கானும் கத்ரியும் பாகிஸ்தான் இராணுவத்துக்கு நெருக்கமானவர்கள். நடுநிலையாக இருப்பது போன்று பாசாங்கு செய்து கொண்டு அதே வேளை, அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை இராணுவமே தூண்டிவிட்டுக் கொண்டிருப்பதாகப் பரவலாக நம்பப்படுகிறது. நவாஸ் ஷெரீப் பதவியில் தப்பிப்பிழைப்பது சாத்தியம் என்றே தெரிகிறது. ஆனால், நெருக்கடியில் இருந்து மீளும் போது அவர் பயனில்லாத ஒரு பிரதமராகவே இருப்பார். அவர் பல விவகாரங்களில் இராணுவ உயரதிகாரிகளுடன் விட்டுக்கொடுத்து இணங்கிப்போக வேண்டியிருக்கும். பெருவாரியான கிரிமினல் குற்றச்சாட்டுகளில் வழக்குகளை எதிர்நோக்கியிருக்கும் முன்னாள் இராணுவ ஆட்சியாளர் பெர்வெஸ் முஷாரப்புக்கு மன்னிப்பு அளிக்க வேண்டியிருக்கும். மேலும் முக்கியமாக, ஆப்கானிஸ்தான் மற்றும் இந்தியா தொடர்பான பாகிஸ்தானின் கொள்கையை இராணுவம் அதன் கட்டுப்பாட்டில் வைத்திருக்கவே விரும்புகிறது.




இந்தக் காரியங்கள் எல்லாம் நிறைவேறும்பட்சத்தில் பிரயோசனமான முட்டாள்கள் தங்களின் நோக்கத்தை நிறைவேற்றியதாயிருக்கும். கத்ரி மீண்டும் கனடாவுக்கும் கான் மீண்டும் தொலைக்காட்சிப் பேட்டிகளுக்கும் திரும்பிச் செல்வார்களேயானால் இராணுவம் மிகுந்த மகிழ்ச்சியடையும். ஆனால், இந்த நெருக்கடி முடிவுக்கு வரும் போது (இராணுவத்துக்கு அதன் நோக்கங்களில் முன்னேற்றமும் ஷெரீவுக்கு எதிர்பாராத பயனும் கிடைக்கப் போகின்ற நிலையில்) கானுக்கு ஏதாவது பயன் கிடைப்பதைக் காண்பது சாத்தியமில்லை.

மாயத் தோற்றங்களுக்கு இரையான-நாடகபாணியிலான கானின் அரசியல் ஒரு துணைக்காட்சி அல்லது இடைக்காட்சியேயாகும். பாகிஸ்தான் இராணுவம் இப்போது ஏன் இந்த மாதிரியாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பது ஒரு முக்கியமான கேள்வி. தனது செல்வாக்கு மீள்வெளிப்படுத்தப்படுவதை அறிவிக்க இராணுவம் ஏன் விரும்புகிறது? இந்தியாவுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை, வர்த்தகப் பேச்சுவார்த்தைகளையெல்லாம் துண்டிப்பதற்கு இராணுவம் ஏன் இச் சந்தர்ப்பத்தைத் தெரிவு செய்தது? சமாதானம் பற்றி இனிப்பாக பேச வேண்டிய தேவையில்லை என்ற நம்பிக்கை ஏன் இப்போது இராணுவத்துக்கு வந்தது?

பாகிஸ்தான் இராணுவம் ஒரு நிலையான ஞாபகசக்தியைக் கொண்டிருக்கிறது. அதன் நோக்கங்களில் அது எப்போதுமே முரண்பாடற்றதாக இருந்து வந்திருக்கிறது. இராணுவத்தின் இந்த குணாதிசயம் அதை தனக்காக திறமான முறையில் திட்டமிட்டுச் செயற்படத் தூண்டுகிறதே தவிர, அதன் நாட்டுக்காக தந்திரோபாயமாக சிந்திக்கத் தூண்டுவதாக இல்லை. 2015ஆம் ஆண்டு தனது ஆண்டு என்று பாகிஸ்தான் இராணுவம் உணருகிறது. அண்மைக்காலங்களில் (குறிப்பாக, ஜெனரல் முஷாரப் அதிகாரத்திலிருந்து நீக்கப்பட்டமை, 2008 இல் ஒரு அரசாங்கம் மக்களால் தெரிவு செய்யப்பட்டமை, மூன்று வருடங்கள் கழித்து ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டமை ஆகிய நிகழ்வுப் போக்குகளுக்குப் பிறகு இழந்துபோன அதன் செல்வாக்கை மீளப் பெறுவதற்கு அனுமதிக்கக் கூடியதாக உள்நாட்டுக் காரணிகளும் பிராந்திய மற்றும் சர்வதேசக் காரணிகளும் ஒருங்கிணைந்து கொண்டிருப்பதாக இராணுவம் உணருகிறது.

பாகிஸ்தான் இராணுவம் செய்கின்ற ஊகங்கள் சரியானவையாக இருக்குமானால், அதன் பாதிப்புகள் ஆழமானவையாக இருக்கும். ஒரு சமுதாயம் என்ற வகையில், ஒரு தேசம் என்ற வகையில், சர்வதேச விவகாரங்களில் ஒரு பாத்திரம் என்ற வகையில் பாகிஸ்தானுக்கு ஏதோ ஒன்று அடிப்படையில் நடந்துகொண்டிருக்கின்றது என்பதை அவை எமக்குக் கூறுகின்றன. எனவே, இராணுவம் செய்கின்ற ஊகங்கள் எவை? முதலாவது இவ்வருட இறுதியில் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கா தலைமையிலான வெளிநாட்டுத் துருப்புகளின் வெளியேற்றம் தங்களுக்கும் தாங்கள் அனுசரணை வழங்குகின்ற ஆப்கான் தலிபான் குழுக்களுக்கும் காபூலை அல்லது குறைந்தபட்சம் தெற்கு ஆப்கானிஸ்தானில் உள்ள பெருமளவு நிலப்பிராந்தியத்தை மீளப்பெறுவதற்கு வாய்ப்பைக் கொடுக்கும் என்று ராவல் பிண்டியில் உள்ள ஜெனரல்கள் கணக்குப் போடுகிறார்கள்.

இரண்டாவது, ஈராக்கிலும் சிரியாவிலும் 'இஸ்லாமிய அரசு' (Islamic State) இயக்கத்தின் வெற்றி (மேற்காசியாவில் ஏற்பட்டிருக்கும் பாரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுதல்களுடன் ஒப்பிடும் போது) ஆப்கானிஸ்தான்- பாகிஸ்தான் வலயத்தின் முக்கியத்துவத்தை தற்காலிகமாகக் குறைத்துவிட்டது. ஈரானுக்கும் சவூதி அரேபியாவுக்கும் இடையே ஷியா- சுன்னி மோதல்கள் மூண்டிருக்கின்றன. அதன் முதலாவது பிரதான தளமாக சிரியா இருக்கிறது. ஐ.எஸ்.ஐ.எஸ் (Islamic State in Iraq and Syria) இயக்கத்துக்கான சவூதியின் ஆதரவு ஷியா முஸ்லிம்களுக்கு எதிரான இந்தச் சண்டையின் அங்கமாக இருக்கின்ற அதேவேளை, சவூதி அரச குடும்பத்தினரால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு பெரியதாகவும் பலம் பொருந்தியதாகவும் ஐ.எஸ்.ஐ.எஸ். வளர்ந்துவிட்டது. இஸ்லாமியவாதத்தின் பிரத்தியேகமான அடிப்படைவாதத்தின் வெளிப்பாட்டை ஐ.எஸ்.ஐ.எஸ். பிரதிநிதித்துவப்படுத்தி நிற்கிறது. அதை சவூதி அரசாங்கத்தினால் கூட இனிமேல் கட்டுப்படுத்த முடியாது என்பதுடன், தங்களுக்கு எதிராகவே அது திரும்பக் கூடும் என்றும் அவர்கள் அஞ்சுகிறார்கள்.

ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தினால் மேற்கொள்ளப்படக்கூடிய தாக்குதலை எதிர்நோக்குவதற்கு சவூதி அரசாங்கம் தன்னைத் தயார்படுத்திக் கொண்டிருக்கிறது. உண்மையில் அத்தகைய தாக்குதல் ஒன்று மிக விரைவில் இடம்பெறுவதற்கான சாத்தியமில்லை. சவூதி அரேபியா மீது ஐ.எஸ்.ஐ.எஸ். தாக்குதலை நடத்துவதானால், அதற்கு முன்னதாக அந்த இயக்கம் மத்திய - வடக்கு ஈராக்கில் தன்னை வலுப்படுத்திக்கொண்டு, பிறகு தெற்கு ஈராக்கிற்கு வரவேண்டும். தெற்கு ஈராக் கணிசமான ஷியா முஸ்லிம் சனத்தொகையைக் கொண்டது. அந்தப் பகுதியை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துவிட்டுத்தான் சவூதி அரேபியாவின் வடபகுதிக்குள் படையெடுக்க முடியும். தீவிரவாத வஹாபிய இராணுவத்தினால் சவூதி அரேபியா அச்சுறுத்தப்படக்கூடிய நிலை ஏற்படும் பட்சத்திலேயே இது நடைபெற முடியும். வஹாபிய இராணுவம் பலகிப் பெருகுவதற்கு சவூதியே உதவியது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலக்காட்சிக்குள் பாகிஸ்தான் எந்த இடத்தில் வருகிறது. சவூதி- ஈராக் எல்லையை மூடுவதற்கு உதவவும் சவூதியின் பாதுகாப்பு நிலைகளைப் பலப்படுத்தவும் பாகிஸ்தான் துருப்புகள் அந்த எல்லைக்குள் நகர்ந்துள்ளன. பஹ்ரெயினில் பெரும்பான்மையினரான ஷியா முஸ்லிம்களை அடக்குவதற்கு சுன்னி ஆட்சியாளர்களுக்கு பாகிஸ்தான் துருப்புகள் உதவிக் கொண்டிருக்கின்றன. தற்செயலாகவோ என்னவோ, தற்போது பாகிஸ்தானுடனான ஈரானின் உறவுகள் மோசமடைந்திருக்கின்றன. ஈரானிய அரசாங்கம் என்ன நினைக்கின்றது என்பதைப் பற்றி பாகிஸ்தான் இராணுவம் கவலைப்படவில்லை. சவூதி ஆட்சியாளர்களுக்கு தாங்கள் இப்போது முக்கியமானவர்களாகிப் போயிருப்பதைக் குறித்து பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் குதூகலமடைந்திருக்கிறார்கள்.

இத்தகைய நிகழ்வுப்போக்குகளின் விளைவாக, பாகிஸ்தான் இப்போது தன்னை சுன்னி உலகின் கிழக்குப் பாகமாக மாற்றிக் கொண்டிருக்கிறது. மேற்காசியாவை சின்னாபின்னமாக்கிவிடக்கூடிய மதப்பிரிவினர்களிடையேயான மோதலுக்கு தன்னை பாகிஸ்தான் ஒரு முக்கிய பாத்திரமாக்கியிருக்கிறது. ஒரு தொழில்சார் இராணுவம் என்ற நிலையில் இருந்து இஸ்லாமிய இராணுவமாக மாறி பிறகு சுன்னி இராணுவமாக உருமாற்றம் கண்டிருப்பதென்பது ராவல்பிண்டியில் உள்ள ஜெனரல்களைப் பொறுத்தவரை ஒரு செங்குத்தான இறக்கச் சரிவாகும்.

இந்தச் சரிவு பாகிஸ்தான் சமுதாயத்தின் உருமாற்றத்தையே பிரதிபலித்து நிற்கிறது. சகல முஸ்லிம்களுக்குமான ஒரு தாயகமாக ஷியா முஸ்லிம் தலைவர் ஒருவரினால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு தேசம் சுன்னி மேலாதிக்கவாதத்தின் உருவமாக மாறியிருக்கிறது. மதச் சிறுபான்மையினர்கள் மாத்திரமல்ல, ஷியா முஸ்லிம்கள் கூட, கொல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் அல்லது வெளிநாடுகளுக்குத் தப்பியோடி தஞ்சமடைய நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.

மொங்கோலிய இனக்குழுமத்தைச் சேர்ந்த ஷியா முஸ்லிம்களான ஹசாராக்கள் தேடித்தேடி கொடுமைக் குள்ளாக்கப்படுவதை பார்க்கும் போது, பாகிஸ்தான் இராணுவத்தின் தளபதியாக அயூப் கானுக்குப் பிறகு ஒரு ஹசாரா இனத்தவரான ஜெனரல் முஹம்மட் மூசா கான் பதவியேற்றார் என்பது மிகவும் அமைவடக்கமாக நினைவுக்கு வருகிறது. இன்று இது ஒரு அதிசயமாக இருக்கும்.

1980களின் முற்பகுதியில் பாகிஸ்தான் டெஸ்ட் கிரிக்கெட் அணிக்கு ஷியா முஸ்லிம்களான அசீவ் இக்பாலும் சஹீர் அப்பாஸும் காப்டன்களாக இருந்தனர். (அது ஸியா-உல்-ஹக் ஆட்சியின் ஆரம்ப வருடங்கள்) அவர்களுக்குப் பிறகு அந்த அணிக்கு ஷியாக்களில் எவரும் காப்டனாக இருந்ததில்லை என்பது முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய தாகும்.

ஷியா -உல்- ஹக் யுகத்தில் பிறந்து வளர்ந்த கிரிக்கெட் வீரர்கள் இன்று பாகிஸ்தான் கிரிக்கெட் அணியை மிகவும் கண்டிப்பான சுன்னி மத ஒழுங்கினரான தப்லிக்கு ஜமாத் கும்பல் ஒன்றின் பிடிக்குள் தள்ளியிருக்கிறார்கள். அதேவேளை, ஸியா-உல்- ஹக் காலத்தில் புதிதாக இராணுவத்திற்கு சேர்க்கப்பட்டவர்கள் படிப்படியாக உயர்ந்து இன்று ஜெனரல்களாகியிருக்கிறார்கள். அவர்கள் பாகிஸ்தான் இராணுவத்துக்கு இஸ்லாத்தின் ஒரு மிகவும் குறுகிய நோக்குடைய கடுமையான சுன்னி- அரை வஹாபி கருத்து வகையை, பொருள் விளக்கத்தை மரபாகக் கொடுத்திருக்கிறார்கள். பாகிஸ்தானின் ஸியா (எதிர்ப்) புரட்சி அதன் முதிர்ச்சியை அடைந்திருக்கிறது. அது பற்றியே கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. கவலைப்பட வேண்டியது இம்ரானின் சாகச விளையாட்டுகளும் திருமண ஏற்பாடுகளும் அல்ல! ■

***(அசோக் மாலிக் - இந்திய சிரேஷ்ட பத்திரிகையாளர்)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுப்பரவல்



# மோடியின் நாட்டில் வாழ விரும்பாத அனந்தமூர்த்தி

வாழ்ந்த காலம் முழுவதும் சர்ச்சைகள், எதிர்ப்புகள், விருதுகள் மத்தியில் கழிந்தது போலவே யு.ஆர்.அனந்தமூர்த்தியின் மரணமும் நிகழ்ந்துள்ளது. அவரது வாழ்வு சர்ச்சைகளோடும் எதிர்ப்புகளோடும் மட்டுமல்ல ஏராளமான விருதுகள், நிறுவனத் தலைமைகள் ஆகியவற்றை அலங்கரிக்கும் வாய்ப்புகளோடும் அமைந்தது. இந்தியத் துணைக் கண்டத்தின் மிக உயர்ந்த இலக்கியப் பரிசான ஞானபீடம், இந்திய அரசின் பத்மபூஷண் முதலான உயர் விருதுகள் தவிர கோட்டயம் காந்தி பல்கலைக்கழகத் துணை வேந்தர், இந்திய எழுத்தாளர்களுக்கு இலக்கிய விருது வழங்கும் சாகித்ய அகாடமி நிறுவனத் தலைவர் திரைப்படம் மற்றும் தொலைக் காட்சிக் கழகத் தலைவர், தேசிய புத்தக நிறுவனத் (National Book Trust) தலைவர் ஆகிய பொறுப்புகளில் தொடர்ந்து ஒளிர்ந்தவர் அவர். மன்புக்கர் பரிசுக்கும் கூட அவரது நூல் இறுதிப்பட்டியல் வரை சென்றது. இறப்பிலும் ஒரு பக்கம் இந்துத்துவ சக்திகள் அதை வெடி கொளுத்திக் கொண்டாடிக் கொண்டிருந்த போதே இன்னொரு பக்கம் கர்நாடக அரசு மூன்று நாட்கள் துக்கம் அறி




அ.மார்க்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தது. அரசு மரியாதைகளோடு அவரது இறுதிச் சடங்கு நிகழ்த்தப்பட்டது.

கன்னட எழுத்தாளரும், சிந்தனையாளரும், பேராசிரியருமான உடுப்பி ராஜகோபாலாச்சாரிய அனந்தமூர்த்தி எதிர்கொண்ட சர்ச்சைகளை ஏதோ இந்துத்துவவாதிகள் எதிர்த்தனர், இடதுசாரிகளும் பகுத்தறிவாளர்களும் அவரைக் கொண்டாடினர் என்கிற ரீதியில் நாம் எளிமைப்படுத்திப் புரிந்து கொள்ள இயலாது. அவர்களைக் கொண்டாடியவர்களே பல நேரங்களில் அவரை எதிர்க்க நேர்ந்த சூழல்களும் இருந்தன. ஒரு பக்கம் இந்துத்துவவாதிகள் அவரை இந்து மத எதிர்ப்பாளர் என இறுதிவரை மன்னிக்கத் தயாராக இல்லாதபோதும் இன்னொரு பக்கம் என்ன இருந்தாலும் அவர் இந்தியச் சநாதனத்துக்குள்ளேயே இன்றைய சிக்கல்களுக்கு விடை தேடியவர் எனவும் தனது சநாதனப் பார்ப்பனப் பின்புலத்தை முற்றாக உதறித்தள்ள இயலாதவர் எனவும் பகுத்தறிவாளர்களால் விமர்சிக்கவும் பட்டவர் அவர்.

அவரது புகழ்பெற்ற நாவலான சமஸ்காரா சனாதனப் பார்ப்பனீயத்தின் போலித்தனத்தையும் அதன் காலத்திற்கு ஒவ்வாமையையும், அதில் உள்ளார்ந்து பொதிந்து கிடக்கும் வன்முறையையும் தோலுரித்தது எனினும் அனந்தமூர்த்தி இந்து மதத்தை முற்றாக மறுக்கவில்லை. அதை ஒரு மாபெரும் மதம் எனக் கூறிய அவர், இந்த பாசிஸ்டுகளால் (இந்துத்துவவாதிகளால்) அந்த மாபெரும் மதத்தைப் புரிந்து கொள்ள இயலாது என்றார். காவி ஒரு அழகிய வண்ணம், அதை அவர்களுக்குக் கையளித்துவிட முடியாது என்றார். 'எல்லோரையும்போல கங்கையைப் புனிதம் என நம்புவதிலும், இராமாயணம், மகாபாரதம் மற்றும் உபநிடதங்களில் ஆழ்ந்த ஆன்மீக தரிசனங்கள் உள்ளன என ஏற்பதிலும் ஒரு அகன்ற பார்வையில் நானும் ஒரு இந்துதான். எல்லாவற்றையும் நானும் நம்புகிறேன். என் மூதாதையர்கள் நம்பிய, அதாவது ஒரே ஒரு கடவுள் இல்லை, பல கடவுள்களை பல்வேறு விதமாக நம்மால் கற்பிதம் செய்து கொள்ள இயலும் என்கிற அந்த நம்பிக்கையை நானும் ஏற்கிறேன். (எனினும்) இந்துமதம் அது உள்ளார்ந்து ஏற்றுக் கொண்டுள்ள படிநிலை ஏற்றத்தாழ்வுகளைப் பொறுத்தமட்டில் பிரச்சினைக்குரியதுதான்' எனத் தன் நிலையை அவர் ஒரு நேர்காணலில் விளக்குகிறார்.



மோடிக்கு ஒரு அகவாழ்வு கிடையாது. 1984இல் சீக்கியர்களுக்கு எதிரான காங்கிரஸ் காரர்களின் வன்முறையை என்னால் மன்னிக்கவே முடியாது. ஆனால் அதற்காக வருத்தப்பட்ட காங்கிரஸ் காரர்களும் இருக்கத்தான் செய்தார்கள். ஆனால் 2002 குஜராத் வன்முறைகள் மோடியின் மனச்சாட்சியை கொஞ்சம்கூட அசைத்ததில்லை. இதுபற்றி மோடி சொல்லும்போது தனது கார்ச் சக்கரத்தில் மாட்டுப்பட்டு செத்துப்போன ஒரு நாயை உதாரணம் காட்டுகிறார். ஒரு படைப்பாளி என்கிற நிலையிலிருந்து சொல்கிறேன், இப்படியான ஒரு படிமம் ஒரு மனிதப் பிறவியிடமிருந்து உருவாக இயலாது.

– இது மோடியைப்பற்றி அனந்தமூர்த்தி சொன்னது

இந்து மதம் என ஒன்று இல்லை; அப்படி இருந்தது எனில் அது சாதியையும் தீண்டாமையையும் நியாயப்படுத்திய வகையில் அது மிகவும் எதிர்மறைக் கூறுகளைக் கொண்ட மதம் என நாமும் அதைக் கண்டிக்கிறோம். இந்து மதத்துக்கென ஒரு ஒற்றைக் கடவுள் இல்லாதது போலவே, ஒரு ஒற்றை வேதம் கிடையாது; ஒரு மையப்படுத்தப்பட்ட மத அமைப்பு கிடையாதென்கிற அடிப்படையில் இந்து மதம் என ஒரு மதமே கிடையாது என்கிறோம். ஆனால் ஒரு வகையில் யூதேய மதங்களுடன் ஒப்பிடுகையில் இந்து மதத்தின் இந்தப் பன்மைத்துவத்தை ஒரு வரவேற்கத்தக்க ஜனநாயக அம்சமாகவும் மதங்களை ஒப்பிட்டு ஆய்வோர் (comparative religion) கூறுவதுண்டு. அதற்குள் ஒரு ஒற்றைக் கலாசாரம், ஒரே வகையான வழிபாட்டு முறை, உணவு முறை, சடங்குகள் என்றெல்லாம் ஏதுமில்லாத வகையில் அதைப் பின்பற்றுவோருக்கு ஒரு கலாசாரச் சுதந்திரம் (cultural autonomy) உண்டு.

ஆனால் இந்துத்துவவாதிகள் இந்து மதத்தின் இந்த ஜனநாயகத் தன்மையைத்தான் வெறுக்கின்றனர். அதன் பன்மைத்துவத்தை ஒழிக்க முயல்கின்றனர். மையப்படுத்தப்பட்ட ஒருமத அமைப்பிற்குள் அதைக் கொண்டு வரும் முகமாகத்தான் விஸ்வ ஹிந்து பரிஷத் என்னும் கருத்தாக்கத்தை முன் வைக்கின்றனர். அந்த வகையில் இந்து மதத்தின் தனித்துவத்தையும், கீழைத் தேய மரபையும் அழித்து அதை மேற்கத்திய மயமாக்க (westernize) முனைகின்றனர்.

இந்துச் சாதியச் சமூகத்திற்குள் தலித்துகள் உட்பட எல்லோருக்கும் ஒரு கலாசாரச் சுதந்திரம் உண்டு என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கூறியதும் கூட சர்ச்சையானது. அப்படியானால் இந்தச் சாதிய அமைப்பை நீங்கள் ஏற்கிறீர்களா என்கிற கேள்வி அவர் முன் வைக்கப்பட்டது.

இந்தியாவுக்கென பிரத்தியேகமான, கவலைக்குரிய, உடனடியாகத் தீர்க்க வேண்டிய கலாசாரப் பிரச்சினைகள் மட்டுமின்றி பொருளாதாரப் பிரச்சினைகளும் உண்டு என்பதை ஏற்கும் அனந்தமூர்த்தி அதற்கான தீர்வு மேற்கத்தியமயமாதல் அல்ல என உறுதியாக நம்பினார். இந்தியப் பண்பாட்டின் பன்மைத்தன்மையை அழித்தும், வளர்ச்சி குறித்த மேலை அணுகல்முறையை ஏற்றும் மேற்கத்தியமயமாவது நமது பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது என்றார். இந்தியச் சமூகம் குறித்த ஒரு விமர்சனத்தை மேற்கொள்வதற்கு மேலைக் கருத்தியல்களின் போதாமையைச் சுட்டிக்காட்டிய வகையில் அவரிடம் ஒரு பின் காலனியச் சிந்தனை வேர்களையும் காண இயலும்.

அப்படியானால் மூர்த்தி ஒரு பழமைவாதியா? இந்தக் கேள்விக்கு அவரது பதில், 'பழமையோடு நாம் நம்மைத் தொடர்பு படுத்திக்கொள்ள (relate) வேண்டியதுதான். ஆனால் அதைப் புத்துயிர்க்க (revive) முடியாது' என்பதாக இருந்தது. பழமையையும் பாரம்பரியத்தையும் ஏற்கும் அதே நேரத்தில் அதன் ஆபத்தான கூறுகளுக்கு நாம் கடும் எதிரியாகவும் இருக்க வேண்டும் என்றார். அந்த வகையில் அவர் தன்னை ஒரு Critical Insider என அடையாளப்படுத்திக் கொண்டார். நான் வெளியே வந்து விடவில்லை; உள்ளே இருப்பவன்தான். ஆனால் எல்லாவற்றையும் கொண்டாடிக் கொண்டல்ல. விமர்சனம் செய்து கொண்டு இருப்பவன் என்கிற பொருளில் அவர் அதைச் சொன்னார். இந்தியப் பழைமை என்பது அனந்தமூர்த்தியைப் பொறுத்தமட்டில் மிகவும் விசாலமானது. அது வேத உபநிடதங்களோடு முடிந்துவிடுவதல்ல, சமணம், பவுத்தம், பசவர், அல்லாமா எனச் சகலத்தையும், சகலரையும் உள்ளடக்கியது.

பொருளாதாரம், வளர்ச்சி ஆகிய பிரச்சினைகளிலும் மேலை மாதிரியைத் தவிர்த்த ஒரு சுயேச்சையான வளர்ச்சிக்கு அவர் காந்தியின் சர்வோதயம் என்கிற கருத்தாக்கத்தை முன்மொழிந்தார், தனது சிந்தனைகளில் மேலைக் கருத்துகளின் பாதிப்பிற்கு இடங்கொடாத ஒரே சிந்தனையாளர் காந்திதான் என்றார். சர்வோதயம் என்பதன் பொருள் எல்லோருக்குமான வளர்ச்சி (சர்வ + உதயம்). இயற்கையோடு இயைந்த வளர்ச்சி. ஆனால் மேலை மாதிரியோ கார்பொரேட்கள் மற்றும் பெரு நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் எளிய மக்கள் மற்றும் இயற்கையின் அழிவுக்கும் வழிகோலுவது என்றார்.

அப்படியானால் அனந்தமூர்த்தியை ஒரு காந்தியவாதி எனலாமா? நிச்சயமாக இல்லை. அவர் தன்னை ஒரு சோஷலிஸ்ட் எனவும் லோகியாவாதி எனவும் கூறிக் கொண்டவர். 1952இல் அவரது சொந்த மாவட்டமான ஷிமோகாவில் லோகியாவின் சோஷலிஸ்ட் கட்சியின் தலைமையில் நடந்த ஒரு விவசாயப் போராட்டத்தில் 20 வயது இளைஞனான மூர்த்தி ஆர்வத்துடன் பங்கேற்றார். போராட்டத்தை ஆதரித்து எழுதுவது, துண்டறிக்கைகள் முதலானவற்றை தந்தையின் அச்சகத்தில் இலவசமாக அச்சிட்டுக் கொடுப்பது என்பதாக அவரது பக்களிப்புகள் அமைந்தன. தொடர்ந்து அவர் சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சியில் ஈடுபாட்டுடன் செயல்பட்டார். தனது மனம் கவர்ந்த தலைவராக அவர் குறிப்பிடும் கர்நாடக சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் சாந்திவேணி கோபாலா கவுடாவிற்காக மூர்த்தி தேர்தல் பிரசாரம் செய்தார். மூன்று முக்கிய நாவல்களில் ஒன்றான அவஸ்தை கவுடாவின் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது. அவரது இன்னொரு முக்கிய நாவலான பாரதிபுரம் சாதி, தீண்டாமை ஆகியவற்றை எதிர்கொள்வதிலுள்ள சிக்கல்களைப் பேசியது. தலித்துகள் தங்களை எந்த விதத்திலும் இழக்காமல் சுயமரியாதை பெறுவதற்கு அம்பேத்கரைக் காட்டிலும் வேறு விடிவு இல்லை என ஒரு நேர்காணலில் குறிப்பிட்டார்.

லோகியாவின் கருத்துகளால் ஈர்க்கப்பட்ட வகையில் இந்தியச் சாதியச் சமூகம் மற்றும் தீண்டாமை குறித்த ஒரு பிரக்ஞையும், ஆங்கில மற்றும் மேலைப் பண்பாட்டு மோகம் குறித்த விமர்சனப் பார்வையும் அனந்தமூர்த்தியிடம் பிரிக்க இயலாமல் ஒட்டிக்கொண்டன.



மனைவி எஸ்தருடன் அனந்தமூர்த்தி

அதே நேரத்தில் லோகியா மீதும் சோஷலிஸ்ட் கட்சியின் மீதும் விமர்சனம் வைக்கவும் அவர் தயங்கியதில்லை. லோகியா, ஜெயப்பிரகாஷ் நாராயணன், மது லிமாயி, ஜார்ஜ் ஃபெர்னான்டஸ் ஆகியோரின் 'காங்கிரஸ் நீக்க' கொள்கைதான் (Non Congressism) இங்கு இந்துத்துவம் வளரக் காரணம் என்பதை மூர்த்தி உறுதியாக முன்வைத்தார். இதன் பொருள் காங்கிரஸை அவர் முழுமையாக ஆதரித்தார் என்பதல்ல. ஆனால் பாசிசம் வந்து உட்கார்ந்து கொண்டாலும் பரவாயில்லை என்கிற அளவில் காங்கிரஸ் வெறுப்பு இருந்ததை அவர் ஏற்கவில்லை. 1970 களில் காங்கிரஸ் ஆளுகைக்கு எதிராக ஏற்பட்ட எழுச்சியின் கொள்கை நாயகராக ஜெயப்பிரகாசர் இருந்தபோதும் அமைப்பு வலிமை பெற்றிருந்த சங்கப் பரிவாரங்கள் போராட்டத்தைக் கைப்பற்றின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்.எஸ்.எஸ் ஊடுருவலின் ஆபத்தைச் சுட்டிக்காட்டி அந்த இயக்கத்தைப் பாசிசம் என விமர்சித்தவர்களை நோக்கி, அப்படியானால் நானும் ஒரு பாசிஸ்டுதான் என ஜெயப்பிரகாசர் கூறியதைச் சுட்டிக் காட்டினார்.

பின்னாளில் மது லிமாயி, ஃபெர்னான்டஸ், வி.பி.சிங் ஆகியோரும் காங்கிரஸ் நீக்கம் என்கிற பெயரில் இந்துத்துவ விஷவிருட்சம் இங்கு கால்பதிக்க வழி வகுத்தனர் என்பது மூர்த்தி தனது சோஷலிஸ்ட் கட்சியின் மீது வைத்த விமர்சனம். அவரைப் பொறுத்தமட்டில் ஊழல் அல்லது வாரிசு அரசியல் எல்லாவற்றைக் காட்டிலும் இந்தியாவின் பன்மைத்தன்மையை ஒழிக்க முயலும் இந்துத்துவமே ஆபத்தானது.

தனது கருத்துகளைப் புதிய புரிதல்களின் விளைவாக மாற்றிக் கொள்வதற்கும் அனந்தமூர்த்தி என்றும் தயங்கியதில்லை. லோகியாவிடமிருந்து கடும் நேரு வெறுப்பைக் கைக்கொண்ட அவர் பின்னாளில் இந்துத்துவம் எழுச்சியுற்றபோது நேருவின் முக்கியத்துவத்தையும், இந்த நாட்டின் பன்மைத்துவத்தைக் காப்பாற்றுவதில் அவருக்கிருந்த அக்கறையையும் உணர்ந்து கொண்டார். நேருவின் விசாலமான படிப்பு, அவருள் இருந்த இலக்கிய மனம் மற்றும் நிரம்பி வழியும் ஒரு அக வாழ்வு (abundant inner life) ஆகியன அவர் மீது மூர்த்திக்குப் பின்னாளில் பெரிய மதிப்பை ஏற்படுத்தின. இந்தியா போன்ற பல்வேறு பண்பாடுகளும் மிளிர்கிற ஒரு விரிந்த நாட்டிற்குத் தலைமை தாங்க இத்தகைய அக வாழ்வை உடைய ஒருவருக்குத்தான் தகுதி உண்டு என அனந்தமூர்த்தி உறுதியாக நம்பினார். மோடி பிரதமராக ஆளும் நாட்டில் நான் வாழ மாட்டேன் என அவர் கூறியதற்கு இத்தகைய ஒரு ஆழமான பின்னணி உண்டு.

விருதுகளுக்காகவும் பதவிகளுக்காகவும் அதிகாரங்களுடன் சில நேரங்களில் சமரசம் செய்து கொண்டவர், டொலர் காலனியில் அரசு அவருக்கு அளித்த வீட்டை ஏற்றுக்கொண்டவர் என்கிற விமர்சனங்களும் அனந்த மூர்த்தி மீது வைக்கப்பட்டன. ஆனால் எதற்காகவும் அவர் பாசிசத்துடன் சமரசம் செய்துக்கொள்ள தயாராக இருந்ததில்லை என்பதற்கு அவரது வாழ்வே சாட்சி

இப்படி அவரது கருத்தில் ஏற்பட்ட மாற்றங்களை வைத்துத்தான் சிலர், குறிப்பாக பகுத்தறிவாளர், இடதுசாரிகள் முதலான நட்புச் சக்திகள் அவர் மீது கொள்கை உறுதி இல்லாதவர், நிலைப்பாடுகளில் தொடர்ச்சி (consistency) இல்லாதவர் என்கிற விமர்சனத்தை முன்வைத்தனர். இது குறித்து மூர்த்தியை நன்கறிந்த மனு சக்கரவர்த்தி, கிரிஷ் காசரவல்லி, சலில் திரிபாதி முதலானோர் கூறுபவை முக்கியமானவை. அதற்கு முன் ஒன்றைச் சொல்லிவிட வேண்டும். அனந்தமூர்த்தி கொண்டிருந்த கருத்துகள் அனைத்துமே சரியானவை அல்லது விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவை என்பது இவர்களின் கருத்தோ இல்லை எனது கருத்தோ அல்ல.

கருத்துகளில் தொடர்ச்சியற்றவர் என அனந்தமூர்த்தியை விமர்சித்தவர்களைப் பொறுத்த மட்டில் அவர்கள் நன்மை/தீமை, நல்லது/ கெட்டது, உண்மை/பொய், சரி/தவறு, இருள்/ஒளி என்பதாக எல்லாவற்றையும் இரட்டை முரண்களாகவே (binary oppositions) பார்த்தவர்கள். ஆனால் சமூகம் அப்படியில்லை. மனிதர்கள் அப்படியில்லை. அரசியலும் அப்படி இல்லை. கருத்துகளில் தொடர்ச்சி என்பது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஒரு மேன்மையான குணமாக இருக்க முடியாது. சில நேரங்களில் அதை விட அபத்தம் வேறு எதுவும் இருக்க இயலாது. அதுவும் இந்தியா போன்ற தீர்க்க இயலாத பல்வேறு முரண்களும் வித்தியாசங்களும், நுணுக்க வேறுபாடுகளும் (nuances) உள்ள ஒரு சமூகத்தில் வரட்டுத்தனமான கருத்துத் தொடர்ச்சி என்பதைப் போல அபத்தம் இருக்கவே முடியாது. அனந்த மூர்த்தியிடம் காணப்பட்ட முரண்கள், தொடர்ச்சியின்மைகள் என்பன அவர் பணி செய்த இந்தியச் சமூகத்தில் நிறைந்து கிடக்கும் முரண்களின் ஒரு வெளிப்பாடு என்பதை நமது வரட்டு முற்போக்குவாதிகளால் எப்படிப் புரிந்து கொள்ள இயலும்? மத ஒழிப்பு மகாநாடுகளை நடத்திக் கொண்டிருந்த அதேநேரத்தில்தான் தந்தை பெரியார் இன இழிவு நீங்க இஸ்லாமே நன்மருந்து எனப் பிரசாரமும் செய்து கொண்டிருந்தார் என்பதை மறந்துவிட இயலாது.

அனந்த மூர்த்தி பற்றிச் சொல்கிறவர்கள் எல்லோரும் ஒன்றைக் குறிப்பிடுவர். அவர் எப்போதும் தீர்ப்புச் சொல்லும் தோரணையில் (judgemental) கருத்துகளைச் சொல்வதில்லை. எது குறித்தும் அவருக்கு இரண்டு பார்வைகள் உண்டு. எது நிரந்தரமான (சாஸ்வதம்) தீர்வு அல்லது விடிவு என்பது ஒன்று; எது இப்போதைக்குச் சாத்தியம் என்பது மற்றொன்று. இந்த சாஸ்வதம்/ சாத்தியம் என்கிற இரண்டையும் யோசிப்பது என்கிற பயிற்சி ஆழ்ந்த கல்வி மற்றும் களச் செயல்பாடுகளின் ஊடாக அவருக்கு வாய்த்த ஒன்று.

அவர் இறுதிவரை களப் போராளியாகவும் தொடர்ந்தார். 2001இல் குதிரே மூக் பகுதியில் கனிமச் சுரங்கங்கள் அமைப்பதை எதிர்த்த போராட்டம், பின் துங்கபத்திரை நதி காக்கும் போராட்டம், சமல்புரா அனல் மின் நிலைய எதிர்ப்புப் போராட்டம் ஆகியவற்றில் அவர் பங்கு முக்கியமானது.

ஆங்கில மயத்திற்கு எதிரான மாநில மொழிகளின் (பாஷாக்கள்) முக்கியத்துவம், தாய் மொழிகளில் சிந்தித்தலின் அவசியம், ஆரம்பக் கல்வியை அருகாமையில் அமைந்த பொதுப்பள்ளிகளில் (common schools in the neighborhood) கற்பதைக் கட்டாயமாக்குதல் முதலிய அவரது கருத்துகள் லோகியா வழியில் அவர் வந்தடைந்தவை. சகல அதிகாரங்களும் மையப்படுத்தப்பட்ட தேசிய அரசு என்கிற கருத்தாக்கத்திற்கு எதிரான அதிகாரங்கள் பரவலாக்கப்பட்ட கிராம சுயாட்சி பற்றிய அவரது கருத்துகள் அவர் காந்தி வழியில் வந்தடைந்தவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருதுகளுக்காகவும் பதவிகளுக்காகவும் அதிகாரங்களுடன் சில நேரங்களில் சமரசம் செய்து கொண்டவர், டாலர் காலனியில் அரசு அவருக்கு அளித்த வீட்டை ஏற்றுக் கொண்டவர் என்கிற விமர்சனங்களும் அனந்த மூர்த்தி மீது வைக்கப்பட்டன. ஆனால் எதற்காகவும் அவர் பாசிசத்துடன் சமரசம் செய்து கொள்ளத் தயாராக இல்லை என்பதற்கு அவரது வாழ்வே சாட்சியமாக அமைகிறது. பர்மிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் அவர் முனைவர் பட்ட ஆய்வைச் செய்து கொண்டிருந்தபோது அவர் மால்கம் ப்ராட்பரியின் வழிகாட்டலில் 1930களில் வெளிவந்த ஆங்கிலச் சிறுகதைகள் அவரது ஆய்வுப் பொருளாக அமைந்தது. ஐரோப்பாவில் பாசிசம் செழித்திருந்த காலம் அது. பாசிசம் குறித்து அப்போது ஏற்பட்ட புரிதலும், வெறுப்பும் இறுதிவரை அவரை விட்டகலவில்லை. அவர் கடைசியாக எழுதி முடித்து இன்னும் வெளிவராத நூலின் தலைப்பு: 'சாவர்கரின் ஹிந்து ராஷ்டிரமும் காந்தியின் ஹிந்த் சுயராஜ்யமும் மோடி பிரதமராக ஆளும் நாட்டில் நான் வாழ விரும்பவில்லை என்கிற அவரது கூற்றை நேரடியாகப் பொருள் கொள்ள வேண்டியதில்லை, அவரைப் பொறுத்தமட்டில் அது மோடியின் மீது அவர் வைத்த உச்சபட்சமான விமர்சனம். மோடி குறித்த அவரது முழு கூற்று ஒன்றை வாசிப்பவர்களுக்கு அது விளங்கும். அதை இப்படிச் சுருக்கமாகச் சொல்லலாம்;

'மோடிக்கு ஒரு அக வாழ்வு (inner life) கிடையாது. 1984இல் சீக்கியர்களுக்கு எதிரான காங்கிரஸ்காரர்களின் வன்முறையை என்னால் மன்னிக்கவே முடியாது. ஆனால் அதற்காக வருத்தப்பட்ட காங்கிரஸ்காரர்களும் இருக்கத்தான் செய்தார்கள். ஆனால் 2002 குஜராத் வன்முறைகள் மோடியின் மனச் சாட்சியைக் கொஞ்சம் கூட அசைத்ததில்லை. இது பற்றி மோடி சொல்லும் போது தனது கார்ச் சக்கரத்தில் மாட்டுப்பட்டு செத்துப்போன ஒரு நாயை உதாரணம் காட்டுகிறார். ஒரு படைப்பாளி என்கிற நிலையிலிருந்து சொல்கிறேன். இப்படியான ஒரு படிமம் (imagery) ஒரு மனிதப் பிறவியிடமிருந்து உருவாக இயலாது.'

மோடி ஒரு நல்ல நிர்வாகியாகக் கூட இருக்கலாம். இந்திராகாந்தியின் நெருக்கடி நிலைக் காலத்தில் ரயில்கள் சரியான நேரத்தில் ஓடவில்லையா? எனவும் அவர் கேட்டார். இந்தியா போன்ற ஒரு நாட்டிற்குத் தலைமை ஏற்பவர் ஒரு திறமையான நிர்வாகியாக மட்டும் இருந்தால் போதாது. அதற்கும் மேல் ஒரு அக வாழ்வு உடையவராக, ஒரு விரிந்த மனம் படைத்தவராக அவர் இருக்க வேண்டும் என்பதுதான் அனந்தமூர்த்தி சொல்ல வந்தது. ஆனால், அவர் கூற்றை அப்படியே நேரடியாக அர்த்தப்படுத்திக் கொண்ட இந்துத்துவவாதிகள் மோடி பிரதமரான கையோடு அவரின் மீது கொடூரமான தாக்குதல்களை மேற்கொள்ள அதைப் பயன்படுத்திக் கொண்டனர். அவருக்கு பாகிஸ்தான் செல்ல ஒரு வழி ரயில் பயணச் சீட்டுகள் அனுப்பப்பட்டன. நிச்சயம் அவை அவரை மிகவும் புண்படுத்தி இருக்கும் என்பதில் அய்யமில்லை. ஆனால் முந்திய சர்ச்சைகளில் எப்படியோ இந்த இறுதிச் சர்ச்சையில் வெற்றி அவர் பக்கமே நின்றது. அவர் சொன்னதைச் செய்து காட்டினார். மோடி பிரதமராக ஆளும் நாட்டில் அவர் உயிர் வாழ விரும்பவில்லை. ■

---

*(66ஆம் பக்கத்தொடர்ச்சி...)*


வழங்கப்படுகிறது. அதாவது காலில் காயமேற்பட்ட ஒருவருக்குக் கால் குணமாகும் வரைக்கும் அவர் நடமாடித் திரிவதற்குப் பயன்படுத்தும் ஊன்றுகோல் போன்றதே இந்தச் சமுர்த்தி முத்திரையாகும். கால் குணமடைந்தவருக்கு ஊன்றுகோல் தேவைப்படாது. இதைப்போலவே அரசாங்கமும் வறிய குடும்பமொன்றின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்திக்கொள்வதற்காகவே சமுர்த்தி முத்திரையை வழங்குகிறது. அவ்வறிய குடும்பம் நிலையானதொரு வருமானத்தைப் பெற்றுக்கொள்ளும் நிலையை அடைந்ததும் சமுர்த்தி முத்திரையை திருப்பி ஒப்படைக்க வேண்டுமென்ற நிபந்தனையுடனேயே அம்முத்திரையை விநியோகிக்கிறது.

அதாவது காலில் காயமேற்பட்டுள்ள ஒருவர் தமது கால் குணமடைந்தும் தன்னிடமுள்ள ஊன்றுகோலைக் காலில் காயமேற்பட்டுள்ள இன்னொருவருக்குக் கொடுத்துதவ வேண்டும். ஆனால், உண்மை நிலைவரம் என்ன தெரியுமா? சமுர்த்தி முத்திரையைப் பெற்றுக்கொண்டவர்கள் நிலையான வருமானத்தைப் பெறக்கூடிய நிலைவந்தாலும் அதைத்திருப்பி ஒப்படைப்பதில்லை. அவ்வாறு திருப்பி ஒப்படைப்பதென்பது ஓர் அதிசய நிகழ்வாகவே இன்று வரை கருதப்பட்டுவருகிறது. மேலும் நாளுக்கு நாள் சமுர்த்தி முத்திரைக்கு விண்ணப்பம் செய்வோரின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கிறது.

வறுமைத்தணிப்பிலான இந்த இடைவெளியை நீக்குவதற்கு செய்ய வேண்டியதுதான் என்ன என்பதைப் பற்றிச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய ஒரு முக்கியமான தருணமிது. முதலில் வறுமை நிலைபற்றிய சரியான புள்ளிவிபர மதிப்பீட்டினை மேற்கொண்டு அதற்கேற்ப சமுர்த்தி முத்திரையின் எண்ணிக்கையை அரசாங்கமானது மாற்றியமைக்கவேண்டும். சமுர்த்தி முத்திரையைத் திருப்பி ஒப்படைக்கக்கூடிய நிலைக்கு வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொண்ட ஒருவர் இன்னொரு வறிய குடும்பத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தத் தாமாகவே முன்வந்து ஒப்படைக்கக்கூடிய பக்குவநிலைக்கு வரவேண்டும். இதுதவிர பிரதேச செயலக மட்டத்தில் சமுர்த்தி முத்திரை மீளாய்வினை மாதாந்தம் மேற்கொள்ளக் கூடியபொறிமுறையை ஏற்படுத்தி சமுர்த்தி முத்திரைகளை முறைப்படி கைமாற்றிக்கொள்ள முடியும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுப்பரவல்



# ரிச்சர்ட் அட்டன்பரோ
## (1923 - 2014)

வசீகரன்

ஒருவரலாற்று நாயகரின் வாழ்க்கையை எப்படித் திரைப்படமாக்குவது என்பதற்கு 'காந்தி' படம் ஒரு சிறப்பான உதாரணம். காந்தியின் கதையை இந்திய சுதந்திரம், இந்திய - பாகிஸ்தான் பிரிவினை, அதன் தொடர்ச்சியாக நடந்த வன்முறையின் வலி என்று கலாபூர்வமாக காந்தி படம் எடுக்கப்பட்டிருந்தது. இந்தச் சிறப்பை, வரலாற்றை ஆவணப்படுத்தியிருந்த மாபெரும் கலைஞர் ரிச்சர்ட் அட்டன்பரோ இங்கிலாந்தின் பழம்பெரும் திரைப்பட இயக்குநரும் நடிகரும் ஆவார். அட்டன் பரோ தனது 90ஆவது வயதில் (24.08.2014) காலமாகிவிட்டார்.

அட்டன்பரோ 1923 .08.29 இல் இங்கிலாந்து கேம்பிரிட்ஜில் பிறந்தார். இவரது நடிப்புப்பயணம் 1943 இல் தொடங்கியது. இரண்டாம் உலகப்போரில் இங்கிலாந்து ரோயல் விமானப்படையில் இவர் பணியாற்றினார். அங்கு திரைப்பிரிவில் பணிபுரிந்தார். இவர் நடிப்புக் கலைக்கான ரோயல் அக்கடமியில் கல்வி பயின்று இருந்ததால் இந்த வாய்ப்பு இவருக்கு அளிக்கப்பட்டிருந்தது. விமானப்படை தொடர்பான விடயங்களை ஆவணப்படுத்துவதற்காக இந்தத் திரைப்பிரிவு தொடங்கப்பட்டு இருந்தது. பைன்வுட் ஸ்டுடியோவில் இயங்கிய ரோயல் விமானப்படைத் திரைப்பிரிவில் அட்டன்பரோ சில காலம் பணியாற்றி வந்தார். அப்போது இந்தத் திரைக் குழுவினருடன் பல இடங்களுக்கும் விமானத்தில் பறந்து படமாக்குவதில் இவர் உதவினார். இந்த அனுபவம் தான் இவரைப் பின்னாளில் உலகின் மிகப்பெரிய இயக்குநராகப் புகழ் பெற அடித்தளம் அமைத்துக்கொடுத்தது.


ரிச்சர்ட் அட்டன்பரோ 1940களில் இங்கிலாந்தில் மிகப் பிரபலமாக உச்சரிக்கப்பட்ட பெயர். 1947இல் வெளிவந்த பிரைட்டன் ரொக் (Brighton Rock) என்ற திரைப்படத்தில் பிங்கி பிறவுன் என்ற கதாபாத்திரத்தில் இவர் நடித்தார். குழந்தை முகம்கொண்ட கொலைகார கதாபாத்திரம் அது. இந்தப் படம் இங்கிலாந்து திரையரங்குகளில் பெரும் கைதட்டல்களை அள்ளிக்கொண்டது. அன்று முதல் ரிச்சர்ட் அட்டன்பரோ 'பிங்கி' என்ற பெயராலேயே அறியப்பட்டார். இதற்கு முன்பே இவர் சில திரைப்படங்களில் நடித்திருந்தாலும் இந்தப் படமே இவருக்கு அடையாளத்தைப் பெற்றுத் தந்தது.

இந்தப்பட வெற்றியால் 1940

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் இறுதியில் இருந்து 1950 களின் தொடக்கம் வரை இங்கிலாந்து திரையுலகில் ரிச்சர்ட் அட்டன்பரோ வின் ஆதிக்கம் ஓங்கியிருந்தது. இவ ரது நடிப்பில் தொடர்ந்து வெளிவந்த 'டான்சிங் வித் கிரைம்' 'த மேன் வித் இன்' போன்ற படங்களும் இவ ருக்குப் பெரும் புகழைத் தேடித்தந் தன. இந்தக் காலகட்டத்தில் இவ ருக்கு வந்த அனைத்து வாய்ப்புகளும் 'பிங்கி' கதாபாத்திரத்தைப் போலவே இருந்தன. இந்த அளவிற்கு அட்டன் பரோவின் பிங்கி கதாபாத்திர நடிப்பு இங்கிலாந்து மக்களிடம் அடுத்த பத்து ஆண்டுகளுக்கு செல்வாக்குச் செலுத்தி வந்தது.

அட்டன் பரோவுக்கு தொடர் வெற் றிகள் ஹொலிவூட் வாய்ப்புகளை அதிகம் பெற்றுத்தந்தன. முதல் ஹொலிவூட் படங்களான 'த கிரேட் எஸ்கேப்' (The Grate Escape) இவர் இதுவரை அடைந்த வெற்றி களை எல்லாம் முறியடித்துச் சாதனை படைத்தது. ஹொலிவூட் என்ற திரைப்பரப்பைத் தாண்டி இந்திய இயக்குநர்களான 'சத்யஜித் ராயின் 'சத்ராஞ்ச் கே.கிலாரி' படத்திலும் சேகர் கபூரின் 'எலிசபெத்' படத்திலும் அட்டன்பரோ தனது சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளார்.


காந்தி படத்தில் மகாத்மா காந்தியாக நடிகர் பென் கிங்ஸ்லி

நடிகராக வெற்றிபெற்ற அட் டன்பரோ 1950 களில் திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்கி தயாரிப்பாளராக புதிய அவதாரம் எடுத்தார். தொடர்ந்து 'த லீக் ஒப் ஜென்டில் மேன் (The League Of Gentlemen) என்ற படத்தை 1959 ஆம் ஆண்டு தயாரித்தார். அடுத் தடுத்த ஆண்டுகளில் 'த ஆங்ரி சைலென்ஸ்' (1959) 'விசில் டவுண் த விண்ட்' (1961) ஆகிய இரு படங் களையும் தயாரித்தார். பின்னர் சில ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் 1969 ஆம் ஆண்டு 'ஓ வாட் ஏ லவ்லி வார்' (Oh what a lovely war) என்ற படத்தைத் தயாரித்து இயக்கி னார். இதுவே இவர் இயக்கிய முதல் படம். முதல் உலகப் போரின் பிரிட் டிஷ் வீரர்கள் பாடிய பாடல்களைப் பின்னணியாகக் கொண்டு இப்படம் எடுக்கப்பட்டது. குறிப்பாக இப்படம் போர்களை மறுபார்வைக்கு உட் படுத்தியது. இந்தப் படம் விமர்சன ரீதியாக அதிக விவாதங்களைக் கிளப்பியது. இந்தப் படத்தில் அட் டன்பரோ பயன்படுத்திய குளோஸ் அப், கமரா கோணம் இடம் வலமாக மெதுவாக நகரும் காட்சிகள் 'ஸ்டீ பன் ஸ்பீல்பெர்க்கின்' படங்களுக்கு ஆதாரமாக அமைந்தன என உலகத் திரைவிமர்சகர்கள் தெரிவிக்கிறார் கள்.

இரண்டாம் உலகப் போரின் ஜேர் மனியப் படைகள் மீது இங்கிலாந்து விமானப்படை மேற்கொண்ட தாக்கு தல் திட்டமான மார்க்கெட் கார்டனின் (Operation Market Garden) தோல்வியைக் குறித்து அட்டன் பரோ இயக்கிய 'ஏ பிரிட்ஜ் டூ ஃபார்' (A Bridge Too Far) என்ற படம் உலக அளவிலான கவனத்தை ஈர்த் தது. இதற்கிடையில் 1972இல் இங் கிலாந்தின் முன்னாள் பிரதமரான வின்ஸ்டன் சர்ச்சிலின் சுய சரிதையை அடிப்படையாகக்கொண்டு 'யங் வின்ஸ்டன்' (Young Winston) என்ற படத்தையும் இயக்கினார். 1982இல் காந்தி படத்தை இயக்கி னார். இந்தப் படம் அட்டன் பரோவு க்கு பல்வேறு விருதுகளை பல்வேறு உலக திரைவிழாக்களின் போது பெற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுக்கொடுத்தது. சிறந்த இயக்குநர், சிறந்த நடிகர் உள்ளிட்ட எட்டு விருதுகளை காந்திபடம் பெற்றுக்கொண்டது. அட்டன்பரோ போர்களை விமர்சனத்துக்குள்ளாக்கியவர். இதனால் அடுத்த கட்டமாக தர்க்க ரீதியாக அகிம்சையின் அடையாளமான காந்தியை நோக்கி நகர்ந்ததில் வியப்பேதும் இல்லை.

காந்திபடம் வித்தியாசமான மனவெழுச்சிக்கு களம் அமைத்தது. சுதந்திரம், விடுதலை பற்றிய சுய தேடலுக்கான சுய தரிசனத்தை சாத்தியப்படுத்தியது. ஒரு வரலாற்று நாயகரின் வாழ்க்கை எப்படி திரைப்படமாகும் என்பதற்கான கலை சார்ந்த வெளிப்பாடுகளின் மொத்த வடிவமாகவும் காந்தி படமாக்கப்பட்டிருந்தது. குறிப்பாக அழகியல் மதிப்பீடுகள், அரசியல் விழுமியங்கள் சமவிகிதத்தில் இணைக்கப்பட்ட படமாகவும் உருவாக்கம் பெற்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. காந்தி படம் உருவான சூழல் பற்றி அட்டன்பரோ பின்வருமாறு பதிவு செய்துள்ளார். ‘1960 களில் என்னிடம் ஒருவர் மகாத்மாகாந்தியின் சுயசரிதையைக் கொடுத்து இவரைப் பற்றி திரைப்படம் எடுப்பீர்களா என்று கேட்டார். இல்லை, எனக்கு அப்படி ஒரு எண்ணமே இல்லை என்றேன். நீங்கள் ஒடுக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுப்பவர் அல்லவா? உங்களால் கண்டிப்பாக முடியும். இந்தப் புத்தகத்தைப் படியுங்கள் என்று அவர் வற்புறுத்தினார். அதன் பிறகு தான் அந்த மனிதரின் கதையைப் படித்தேன்’.

அந்தப் புத்தகம் அமெரிக்க எழுத்தாளரான லூயிஸ்பிஷர் எழுதிய மகாத்மாகாந்தியின் வாழ்க்கை. இந்தப் புத்தகம் தான் காந்தி படத்தை எடுக்க அட்டன்பரோவை தூண்டியது. மோதிலால் கோத்தாரி என்ற இந்தியர் தான் இந்தப் புத்தகத்தை அட்டன்பரோவுக்கு கொடுத்தார். கிட்டத்தட்ட 20 ஆண்டுகள் உழைத்து காந்தி பட்ம் உருவானது. காந்தி படத்தை இயக்கவேண்டும் என்று முடிவு செய்தவுடன் அட்டன்பரோ பிரிட்டிஷ் இந்தியாவின் கடைசி கவர்னர் ஜெனரலாக இருந்த மவுண்ட்பேட்டனின் உதவியுடன் அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியையும் சந்தித்து ஆலோசனை கேட்டிருக்கிறார். ‘ஜவஹர்லால் நேருவின் தாக்கம், ஆலோசனை, நம்பிக்கை ஆகியவற்றின் துணையில்லாமல் இந்தப்படம் சாத்தியமாகி இருக்காது’ என்று படத்தின் தொடக்கத்திலே அட்டன் பரோ குறிப்பிட்டிருந்தார். அத்துடன் மோதிலால் கோத்தாரி, மவுண்ட்பேட்டன், நேரு ஆகிய மூவருக்கும் காந்தி படத்தை அட்டன் பரோ சமர்ப்பித்திருக்கிறார்.

காந்தி படத்திற்காக அட்டன் பரோ பட்ட சிரமங்கள் கணக்கற்றவை. இந்தப் படத்தை தயாரிக்க ஹொலிவூட்டில் யாரும் முன்வரவில்லை. ‘இடுப்பில் துண்டுத் துணியுடன் தடியை ஊன்றிச் செல்லும் அந்த மனிதரின் கதையை படமாக எடுத்தால் யார் பார்ப்பார்கள்’? என்றொரு தயாரிப்பாளர் கேட்டாராம். ஒரு கட்டத்தில் தனது சேகரிப்பில் இருந்த கலைப் பொருட்களை விற்று நிதி திரட்டும் நிலைக்கு அட்டன்பரோ தள்ளப்பட்டார். ஒருமுறை இவர் சமையல் எரிவாயு சிலிண்டருக்கு பணம் கட்ட முடியாதளவிற்கு நிதி நெருக்கடியை சந்தித்தார்.

‘ஒருவரது வாழ்க்கையை ஒரே கதையில் முற்றிலுமாகச் சொல்லிவிட முடியாது. ஒரு ஆவணத்தின் ஆன்மாவுக்கு உண்மையாக இருப்பதும் சம்பந்தப்பட்ட அந்த மனிதரின் இதயத்தை நோக்கிச் செல்வதற்கான பாதையைக் கண்டுபிடிப்பதும் தான் நமக்கு இருக்கும் சாத்தியங்கள்’ என்றும் இப்படத்திலேயே அட்டன்பரோ குறிப்பிட்டிருக்கிறார். தனது வார்த்தைகளுக்கு ஏற்ப காந்தி எதிர்கொண்ட முக்கியமான தருணங்களை முடிந்தவரை அட்டன்பரோ ஆவணப்படுத்தியிருந்தார். இந்தப் படத்தில் கோட்சேயால் சுடப்பட்டு காந்தி இறப்பதில் இருந்து இப்படம் தொடங்குகிறது.

தென்னாபிரிக்காவில் வெள்ளையர்களால் ரயில் பெட்டியில் இருந்து தூக்கியெறியப்படும் காந்தி, அந்த நிகழ்வின் தாக்கத்தை உணர்ந்து ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராட உத்வேகம் பெறும் காட்சி தான் காந்தியின் தொடக்கப் புள்ளியாகவும் அமைந்தது. லூயிஸ்பிஷர் தனது புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கும் சம்பவங்களை இயன்றவரை நம்பகத்தன்மையுடன் காட்சிப்படுத்துவதிலும் அட்டன் பரோ வெற்றிபெற்றிருக்கிறார் என்று திரைப்பட ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். காந்தியின் இறுதி ஊர்வலம் குறித்து பிஷர் எழுதிய வாசகங்களை திரையில் செறிவுடன் அட்டன்பரோ வெகு சிறப்பாக சித்திரித்து இருந்தார். ஜாலியன் வாலாபாக் படுகொலைக் காட்சி, அந்த கொடூரத்தின் உச்சத்தை பதிவு செய்திருந்தது. பிரிகேடிய ஜெனரல் ரெஜினால்ட் டயரின் தலைமையில் வீதிகளைக் கடந்து சென்ற காவலர்களின் அணிவகுப்பை மிகப்பிரமாண்டமாகவும் அதிர்வுடனும் அட்டன்பரோ பதிவு செய்திருந்தார்.

ஈழத்து தமிழ்ச்சூழலில் தமிழ்த் தேசிய விடுதலைப்போராட்டம் முனைப்படைந்த காலகட்டத்தில் ‘காந்தி’ படம் பரவலாக காட்சிப் படுத்தப்பட்டு வந்தது. குறிப்பாக மாணவர்கள், இளம் தலைமுறையினர் மட்டங்களில் ‘காந்தி’, ‘உமர்முக்தார்’ போன்ற படங்கள் அப்போது அரசியல் விழிப்புணர்விற்கான பிரசார படங்களாகவும் அமைந்திருந்தன. பத்து வரலாற்று நூல்கள் ஏற்படுத்தாத விழிப்புணர்வையும் தாக்கத்தையும் ஒரு திரைப்படம் தந்துவிட முடியும் என்பதற்கு உதாரணமாக காந்திபடம் வெளிப்பட்டது.

அமெரிக்கா முதல் அவுஸ்திரேலியா வரை காந்திபடம் மிகச் சிறப்பான வரவேற்பைப் பெற்றதுடன் வணிக ரீதியான வெற்றியும் பெற்றது. காந்தியின் வாழ்க்கையைப் பற்றிய விழிப்புணர்வையும் இந்த உலகிற்கு காந்தி விட்டுச் சென்ற மகத்தான செய்தியையும் பரப்பும் வகையில் மேற்கத்தைய நாடுகளில் பல அறக் கட்டளைகளும் நிறுவனங்களும் தோன்றுவதற்கு முக்கிய காரணமாகவும் காந்தி படம் இருந்தது. இந்த ஒரு படத்திலேயே இயக்குநராக ஒருவர் பெறும் வெற்றிகளை அட்டன் பரோ பெற்றார். இந்தியாவின் உய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லண்டனில் பிரிட்டிஷ் பாராளுமன்ற சதுக்கத்தில் நெல்சன் மண்டேலாவின் உருவச்சிலை திறப்பு வைபவத்தின்போது அவரை அன்றைய பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிரவுன் சகிதம் மேடைக்கு அழைத்துச்செல்லும் ரிச்சர்ட் அட்டன்பரோ. (2007 ஆகஸ்ட் 29)

ரிய விருதுகளில் ஒன்றான பத்ம பூஷண் உள்ளிட்ட பல விருதுகளையும் பட்டங்களையும் அவர் பெற்றார். ஐக்கிய நாடுகள் சபையின் பல்வேறு மனிதநேய நோக்கங்களைப் பரப்பும் நல்லெண்ணத் தூதராகவும் செயற்பட்டுவந்தார்.

அட்டன்பரோ காந்தியின் வாழ்க்கையைப் படமாக்கியது போலவே தென்னாபிரிக்காவில் நிறவெறிக்கு எதிராகப் போராடிய ஸ்டீவ்பீக்கோ என்ற கறுப்பின போராளியின் வாழ்க்கை வரலாற்றை 'க்ரை ஃப்ரீடம்' (1987)என்ற படத்தில் ஆவணப்படுத்தியிருந்தார். ஸ்டீவ் பீக்கோ பாத்திரத்தில் நடிகர் டென்சல் வாஷிங்டன் நடித்திருந்தார். இந்தப் படமும் வணிக ரீதியான வெற்றியையும் விமர்சன ரீதியான வரவேற்பையும் பெற்றது. நெல்சன் மண்டேலாவின் விடுதலைக்காக ஒலித்த குரல்களில் அட்டன்பரோவின் குரலும் ஒன்று. அட்டன் பரோ பலதரப்பட்ட படங்களை இயக்கியிருந்தாலும் வாழ்க்கை வரலாற்றுப் படங்களின் இயக்குநர் என்றே பெயர் வாங்கியிருக்கிறார். இவர் நேர்காணல் ஒன்றில், தனக்கு அவ்வகைப் படங்களை இயக்குவதில் பெரும் ஆர்வம் இருப்பதாகவும் கூறியுள்ளார். திரைப்படங்களை உருவாக்குவதே தன் வாழ்நாளின் முக்கியமான விடயம் எனக் கூறிய அட்டன் பரோ தனது படங்களின் மூலம் உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்களிடம் உணர்வுபூர்வமான நெருக்கத்தை ஏற்படுத்தியவர். ஒடுக்கப்பட்ட மக்களின் மனச்சாட்சியின் குரலாக இருந்து விடுதலை அரசியல் எழுச்சிக்கு தனது படங்கள் மூலம் போராடியவர்.

'நம் தேசத் தந்தையைப் பற்றிய திரைப்படம் எடுக்க நம்மை ஆண்ட பிரிட்டனில் இருந்துதான் ஒருவர் வரவேண்டியிருந்தது என்ற ஆற்றாமையுடன் கூடிய சுய விமர்சனத்தை இந்தியர்களிடையே ஏற்படுத்திய படமாக காந்தி அமைந்தது. காந்தியை ஹொலிவூட் பார்வையில் பதிவு செய்த படம் என்று தான் முதலில் எனக்குத் தோன்றியது. என்றாலும், ஆபிரிக்காவின் பல போராளிக்குழுக்கள் இந்தப் படம் தங்களுக்கு மிகுந்த தாக்கத்தையும் போராட்ட வழிமுறையையும் தந்ததாகக் குறிப்பிட்டது முக்கியமான விடயம்' என்று எழுத்தாளர் சல்மான் ருஷ்டி குறிப்பிட்டமையும் இங்கு நோக்கத்தக்கது.

சத்யஜித்ராய் இயக்கிய 'சத்ரஞ்ச் கே கிலாரி' படம் 1857இல் நடந்த சிப்பாய் கலகத்தை அடிப்படையாக வைத்து எடுக்கப்பட்டது. இப்படத்தில் ஆங்கிலேய இராணுவ அதிகாரியான ஜெனரல் அவுட்ரம் பாத்திரத்தில் அட்டன் பரோ வெகு சிறப்பாக நடித்திருந்தார்.

பிரிட்டிஷ் நடிகராக தனது வாழ்க்கையைத் தொடங்கி 'த கிரேட் எஸ்கேப்' மூலம் ஹொலிவூட்டிலும் புகழ் பெற்ற அட்டன்பரோவிற்கு ஒரு கட்டத்தில் பிறரது கற்பனைகளுக்கேற்ப நடிப்பதில் ஒரு வெறுமை ஏற்பட்டது. இதுதான் இவரை ஒரு இயக்குநராக்கியது. பல படங்களை இயக்கியும் தயாரித்தும் இருக்கும் அட்டன் பரோ பிரிட்டனின் உயரிய விருதுகளையும் பெற்றவர். உயர்பதவிகள் பலவற்றிலும் இருந்தவர். எனினும் அதிகார மட்டத்தில் இருந்துகொண்டே அதன் அத்துமீறல்கள் குறித்து கேள்வி எழுப்பியவர். தனது சாதனைகள் மற்றும் வாழ்வு மூலம் 'திரைக்கலைஞர்' என்ற வார்த்தையை மரியாதைக்குரியதாக மாற்றியவர் என்ற அடையாளம் அட்டன்பரோவுக்கு என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசிப் பக்கம்

மாதாந்த வருமானம் 3000 ரூபாவிற்கு உட்பட்ட வகையிலிருப்போரை அரசாங்கம் வறியோர் என எல்லைப்படுத்துகிறது. கடந்த காலங்களோடு ஒப்பிடும் போது குறிப்பாக 2009 மே மாதகாலப்பகுதிக்குப் பின்னர் தமிழ்ப்பிரதேசங்களில் வறுமைமட்டம் அதிகரித்துள்ளது. அதுவும் பாரிய அளவில் அதிகரித்துள்ளது என்று சொல்வதுதான் பொருத்தமுடையதாயிருக்கும். இதற்கான காரணங்களைப் பட்டியலிட்டுக் கூறவேண்டிய அவசியமில்லை. எனவே இவ்வறுமைத் தணிப்பிற்கான வலுவானதொரு பொறிமுறையை நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாடு அரசாங்கத்திற்கிருக்கிறது.



கு.சத்தியதர்சன்

## வறுமைத்தணிப்பு நடவடிக்கைகள்

தற்போதிருக்கும் நிலையில் வலுவானதொரு வறுமைத் தணிப்பிற்கான பொறிமுறையை நடைமுறைப்படுத்தக்கூடிய வகையில் அரசாங்கம் செயற்படுகிறதா என்பதே முக்கியமான கேள்வியாகும். உண்மையில் அத்தகையதொரு பொறிமுறையை அரசாங்கம் கொண்டிருக்கவில்லை. இப்போது வறுமைத்தணிப்புக்கான நேரடி நடவடிக்கையாக அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் ஒரேயொரு திட்டம் சமுர்த்தி முத்திரை வழங்குவது மட்டுமேயாகும். 2005 தொடக்கத்திலிருந்து இன்றுவரை இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தாலும் இது வறுமைத்தணிப்பிற்கான சிறந்தமாற்று வழியல்லவென்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏனெனில் இது வரையறைக்குட்பட்டதொரு திட்டமாகக் காணப்படுகிறது.

ஐந்துபேர் கொண்ட சிறுகுழு அமைப்பே சமுர்த்தியின் அடிப்படைக் கோட்பாடாகும். அதாவது வறுமைக் கோட்டுக்குட்பட்ட வெவ்வேறு குடும்பங்களைச் சேர்ந்த ஐந்துபேர் இணைந்து மாதாந்த அடிப்படையில் ஒரு நிதியத்தை உருவாக்கி சமுர்த்தி வங்கிகளில் சிறுகுழுக் கணக்கொன்றை ஆரம்பிப்பதுடன் அவ்வைந்து பேரும் தனித்தனியே அதே சமுர்த்தி வங்கியில் பங்கு, அங்கத்தவர் கணக்குகளை ஆரம்பித்து சமுர்த்தி வங்கியில் அங்கத்தவராக இணைந்து கொள்ளல் வேண்டும். இவ்வாறு அங்கத்தவர்களாக இணைந்துகொள்வோரே சமுர்த்தி முத்திரையைப்பெற அடிப்படைத் தகுதியுடையோராவர். ஆனால் இங்கே முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விடயம் யாதெனில் ஒரு சமுர்த்தி வங்கியில் அங்கத்தவராக இணைந்து கொள்ளும் சகலருக்கும் சமுர்த்தி முத்திரை வழங்கப்படுவதில்லையென்பதேயாகும். ஏனெனில் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே சமுர்த்தி முத்திரையானது 750 ரூபா மற்றும் 1500 ரூபா எனும் இரு வேறு பெறுமதிகளில் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது. 5 பேருக்குட்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு 750ரூபா பெறுமதியான முத்திரையும் 5 பேருக்கு மேற்பட்ட குடும்ப அங்கத்தவர்களைக் கொண்ட வறிய குடும்பங்களுக்கு 1500 ரூபா பெறுமதியான முத்திரையும் மாதாந்த அடிப்படையில் வழங்கப்படுகிறது.


முன்னைய காலங்களில் கூட்டுறவுச்சங்கங்கள் மூலம் பொருளாகவும் சமுர்த்தி வங்கிகள் மூலம் காசாகவும் பிரித்து வழங்கப்பட்ட இந்நிவாரணம் தற்போது முழுமையும் காசாகவே சமுர்த்தி வங்கிகள் மூலமாக வழங்கப்பட்டு வருவதைக் காணலாம். இவ்வறுமைத் தணிப்பு நடவடிக்கையின் முழுமையின்மை பற்றிப் பேசியாக வேண்டும். இதை இருவழிகளில் அணுகலாம். முதலில் சமுர்த்தி முத்திரையின் எண்ணிக்கை குறித்து நோக்குவோம். வறுமை தொடர்ந்தும் பெருக்கமடைந்து கொண்டிருக்க ஒவ்வொரு பிரதேசத்துக்குமென அரசாங்கம் நிர்ணயித்துள்ள முத்திரையின் எண்ணிக்கை மாறாமலேயே இருக்கிறது. ஒரு பருமட்டான எடுத்துக்காட்டின் மூலம் இதனை விளக்கலாம். அரசாங்கம் A என்ற பிரதேசத்திற்கு 900 சமுர்த்தி முத்திரைகளை வழங்கியுள்ளதெனக் கொள்வோம். அப்பிரதேசத்தின் வறிய குடும்பங்களின் எண்ணிக்கை வருடாந்தம் 1000, 1250, 1500 என்ற போக்கில் அதிகரித்துச் செல்கின்ற போதிலும் அரசாங்கமானது முத்திரையின் எண்ணிக்கையைத் தொடர்ந்தும் 900 எனவே வைத்திருக்கின்ற நிலையில் வறுமைத் தணிப்பென்பது சாத்தியமற்றதொன்றாக அமைந்து விடுகிறது.

அடுத்தது சமுர்த்தி முத்திரையானது ஒரு குடும்பத்தின் வறுமையைத் தணிப்பதற்கான ஊன்றுகோல் என்ற அடிப்படையிலேயே

**(61ஆம் பக்கம் பார்க்க...)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அபிமான சமகாலம் இப்பொழுது உங்கள்
Tablet மற்றும் Android phone களில்




இப்பொழுதே Download செய்யுங்கள்!

Available on
play.google.com

Available on
www.magzter.com

Feedback and comments : samakalam@expressnewspapers.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# NIRO HOLIDAY RESORT


## கதிர்காமத்தில்...

தமிழ் பேசும் மக்களுக்காக
வரவேற்பாளர்கள் முதல்
ஊழியர்கள் வரை தமிழில்

கதிர்காம யாத்ரீகர்களின் நலன்கருதி
சகல வசதிகளுடன் கூடிய அறைகள்
உங்கள் குடும்பத்தினருடன் தங்கி மகிழ






No.51, Sella Road, Kataragama. Tel: 047 2236901, 047 5701055, 0777 216263
E-mail: niroholidayresort@gmail.com www.niroholidayresort.com



Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd. at No.185,Grandpass Road,Colombo -14, Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org